

புதியதோர் உலகம் செய்வோம்


# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 நவம்பர் 13 - நவம்பர் 19 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 32




சோசலிசத்தின் இந்தியப் பாதை



ப 08

புருடா மா மன்னன்!



ப 02

10% இடஒதுக்கீடு: நீதியா? அநீதியா?



ப 03

# நாடு முழுவதும் 105வது நவம்பர் புரட்சி தின கொண்டாட்டம்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைமையகமான புதுடில்லி அஜாய் பவனில் 105வது அக்டோபர் சோசலிஸ்ட் புரட்சி தினம் கொண்டாடப்பட்டது.**

கட்சியின் தேசிய செயலாளர்களில் ஒருவரான பல்லப் சென் குப்தா இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

தோழர்களின் முழக்கங்களுக்கிடையில், கட்சியின் தேசிய செயலாளர்களில் ஒருவரான அமர்ஜீத் கவுர் கட்சிக் கொடியை ஏற்றினார். மாமேதை லெனின் சிலைக்கு தோழர்கள் அமர்ஜீத் கவுர் மற்றும் பல்லப் சென் குப்தா மாலை அணிவித்தனர்.

பின்னர், அங்கு கூடியிருந்த தோழர்கள் மத்தியில் அமர்ஜீத் கவுர் பேசியது பின்வருமாறு:

1917 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் நவம்பர் சோசலிஸ்ட் புரட்சி உலகின் முதல் சோசலிஸ்ட் அரசு அமைந்திட வித்திட்டது. அனைத்துவித சுரண்டல்களில் இருந்தும் தங்களை விடுவித்துக் கொள்ள, உலகமெங்கும் போராடிக் கொண்டிருக்கும் சக்திகளுக்கு வழிகாட்டும் ஒளியாக மாபெரும் நவம்பர் சோசலிஸ்ட் புரட்சி திகழ்ந்து வருகிறது.

மனிதனைமனிதன்சுரண்டுவதற்குமுடிவு கட்ட, உழைக்கும் வர்க்கம் போராட்டத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த காலம் அது. உலகம் முழுவதிலும் இருந்த புரட்சிகர அமைப்புகளைப் பலப்படுத்துவதற்காக மார்க்சிய கொள்கையைப் பரப்புவதில் சோவியத் ரஷ்யா உதவி புரிந்தது.

உலகம் முழுவதிலும் நடைபெற்ற விடுதலை இயக்கங்களுக்கு லெனின்



அஜாய் பவன்



பாலன் இல்லம்

தலைமையிலான புரட்சிகர அரசு ஆதரவளித்தது. நமது தேசத்தின் விடுதலைப் போராட்டமும் மாமேதை லெனினுடைய முழு ஆதரவைப் பெற்றது.

உலகம் ஏகாதிபத்திய நாடுகளின் போர் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வரும் இந்தக் கால கட்டத்தில், உலக அமைதிக்கான லெனினுடைய பிரகடனம் சிறப்புடன் நினைவுகூரத்தக்கதாகும்.

தோழர்களே, நமது கட்சியின் 24 வது அகில இந்திய மாநாட்டில் தீர்மானித்துள்ளபடி, நமது தேசத்தைப் பாசிசத்தை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கும் மோடி அரசாங்கத்தை 2024 ல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்.

இவ்வாறு தோழர் அமர்ஜீத் கவுர் உரையாற்றினார்.

**பாலன் இல்லம்:** சென்னை பாலன் இல்லத்தில் தமிழ்நாடு மாநிலக் குழு சார்பாக கட்சிக் கொடியேற்று விழா நடைபெற்றது. மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி தலைமை வகிக்க, கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லக்கண்ணு கொடியேற்றி உரையாற்றினார். நவம்பர் புரட்சி குறித்து தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஆனி ராஜா, மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோரும் உரையாற்றினர். நிர்வாகக்குழு உறுப்பினர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் மாவட்டச் செயலாளர்கள் எஸ்.கே.சிவா, பா.கருணாநிதி, த.கு.வெங்கடேஷ் வேம்புலி, மாநிலக் குழு உறுப்பினர்கள் ஜி.ஆர். சாந்தி, ஜி.முரளி, இளசை கணேசன் மற்றும் வெகுஜன அமைப்புப் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

**விருதுநகர்:** ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற நவம்பர் புரட்சி தினத்தில், ஏஐடியுசி ஆட்டோசங்க கந்தசக்தி தலைமை வகித்தார். சிபிஐ மாநில செயலாளர் இரா.முத்தரசன் கட்சி கொடியை ஏற்றி வைத்து பேசினார். தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்எம்பி, மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார், வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ ஆகியோர் பேசினர். ஒன்றிய செயலாளர் பலவேசம், நகர செயலாளர் மூர்த்தி, தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம் பேயம்பட்டியில் சிபிஐ புதிய கிளை துவக்க விழாவும் நவம்பர் புரட்சி தின கொடியேற்று விழாவும் நடைபெற்றது. கிளை செயலாளர் மாரியப்பன் தலைமை வகித்தார். முருகன் முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் இரா.முத்தரசன் கொடியை ஏற்றிவைத்துப் பேசினார். தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, ஒன்றிய

தொடர்ச்சி 6ம் பக்கம்

## பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீடு
# உச்ச நீதிமன்ற முழு அமர்வு தீர்ப்பை மறு ஆய்வு செய்ய வேண்டும்

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீடு என்பதை உறுதிப்படுத்தியுள்ள உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை, உச்ச நீதிமன்ற முழு அமர்வு மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது. இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு:

பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியுள்ள உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு அளித்துள்ள தீர்ப்பு (மூவர் ஆதரவு இருவர் எதிர்ப்பு) இட ஒதுக்கீடு கொள்கை குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

சாதிவாரி கணக்கெடுப்பு இல்லாத நிலையில், உயர்சாதியினரில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களைக் கண்டறிந்திட தரவுகளும், பொருளாதார அளவுகோல்களும் இல்லாத நிலையில், பட்டியலின, பழங்குடியின மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு மீதான இந்தத் தீர்ப்பின் தாக்கம் குறித்து பல பொருத்தப்பாடுமிக்க கேள்விகள் எழுந்துள்ளன.

உச்ச நீதிமன்ற தீர்ப்பு பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக இயக்கங்கள் மத்தியில் கவலையை உண்டாக்கி உள்ளது. எனவே, இந்தத் தீர்ப்பை உச்ச நீதிமன்றத்தின் கூடுதலான நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்புச் சட்ட அமர்வுக்கு அனுப்பி, மேலும் பல விளக்கங்களைப் பெறவும், இந்தத் தீர்ப்பின் அரசியலமைப்புச் சட்ட ரீதியான தகுதிப்பாடுகள் குறித்தும் ஆய்வு செய்திட அரசியல் கட்சிகளும் இதர சமூக இயக்கங்களும் வலியுறுத்தியுள்ளன. இந்தத் தீர்ப்பை உச்ச நீதிமன்றத்தின் முழு அமர்வு மறு ஆய்வு செய்திட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

சாதியற்ற, வர்க்கமற்ற சமுதாயத்திற்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இடையறாது போராடி வருகிறது. சமத்துவம், சமூக நீதி மற்றும் சாதி ஒழிப்பு ஆகிய இலட்சியங்களுக்காக உறுதிபூண்டு நிற்கிறது.

இட ஒதுக்கீட்டுக்கு அடிப்படையாக இருக்கும் சட்ட ரீதியான நோக்கம் வறுமை ஒழிப்பு அல்ல; மாறாக, வரலாற்று ரீதியாக ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த மக்களுக்கான நிகர்நோக்கு நடவடிக்கையே (ணீயீயீவீக்ஷீனீணீமீவீஸ்மீ ணீநீமீவீஷீஸ்) இட ஒதுக்கீட்டின் சட்டப்பூர்வ நோக்கம் ஆகும்.

தற்போதுள்ள அரசாங்கம் மூர்க்கத்தனமாகத் தனியார்மயத்தை நடைமுறைப்படுத்தி வரும் இந்தச் சூழலில், தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்பதற்கான நமது போராட்டம் மேலும் தீவிரமாகத் தொடர வேண்டும்.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கட்சிக் கடிதம்



# புருடா மா மன்னன்!

பேரன்புமிக்க தோழர்களே!

**இரண்டாயிரத்து இருபத்தி நான்காம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும். இதற்கு முன்னதாக சில மாநிலங்களில் சட்டப் பேரவைகளுக்கான தேர்தல்கள் நடைபெற உள்ளன. குறிப்பாக பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத், வடபுலத்தின் மலைப்பகுதி மாநிலமான ஹிமாச்சல பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களுக்கும் வரும் டிசம்பரில் தேர்தல் நடைபெற உள்ளது.**

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவை தேர்தல்களை பாஜக எதிர்கொண்டுள்ளது.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளை எதிர்கொள்ள மோடியும் அவரது சகாக்களும் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முயற்சிகள் மேற்கொள்வதை தவறு என்று கூற இயலாது. ஆனால் எத்தகைய முயற்சியை மோடி மேற்கொண்டு வருகின்றார் என்பது தான் மிக முக்கியமானது.

நரேந்திர மோடி பிரதமராக பொறுப்பேற்று, எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன.

தனது எட்டு ஆண்டுகால ஆட்சியில் அவர்களது சாதனைகளை பட்டியலிட்டு பெருமிதத்தோடு பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு அவரால் சாதனைப் பட்டியலை பட்டியல் இட முடியவில்லை.

குறிப்பாக 2014ஆம் ஆண்டு தேர்தலில் தாங்கள் வெற்றி பெற்று பாஜக ஆட்சி அமைத்தால், தனக்கு பிரதமராக பொறுப்பேற்கும் வாய்ப்பு கிடைத்தால்,

ஆண்டுக்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். வெளிநாட்டில் இந்தியர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்பு பணங்களையெல்லாம் மீட்டு வந்து, இந்திய குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தலா பதினைந்து லட்சம் ரூபாய், அவரது வங்கிக் கணக்கில் செலுத்துவதாக உறுதியளித்து வாக்குகளைப் பெற்றார். அவர் விரும்பியபடியே பிரதமர் பொறுப்பையும் ஏற்றார்.

ஆனால் எட்டு ஆண்டுகால ஆட்சியில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

அவைகளை மிக சுலபமாக மறந்து விட்டார். அவர் மறந்தது மட்டுமல்ல மக்களும் மறந்து விட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

அவரது விருப்பத்தை நிறைவேற்ற தற்போது புதிய அவதாரம் எடுத்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றார்.

ஆண்டுக்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலை என்றவர், தற்போது திடீர் என்று பத்து லட்சம் பேருக்கு வேலை என்கிறார். வேலைக்கான சான்றிதழ் வழங்கும் விழாக்களை நடத்துகின்றார்.

ஒன்றிய அமைச்சர்கள் மாநில வாரியாகச் சென்று, 10 பேர், 20 பேர், 50 பேர் என்று சான்றிதழ் வழங்கி தங்களது மகத்தான சாதனை என்று பேசி வருகின்றார்கள்.

குஜராத், ஹிமாச்சல பிரதேச பேரவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள நரேந்திர மோடி, பாஜகவின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சி என்று குறிப்பிட்டு தங்களது கட்சிக்கு வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாஜகவின் வளர்ச்சி நாட்டுக்கு வளர்ச்சியா? அல்லது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானதா? என்பதனை கடந்த எட்டு ஆண்டு கால ஆட்சியில் மக்கள் அனுபவத்தில் உணர்ந்துள்ளனர்.

மோடி பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் நாடு தொடர்ந்து மேற்கொண்டு வந்த நல்ல பல திட்டங்களுக்கு மூடு விழா நடத்தினார்.

நாடு விடுதலை பெற்ற பின்னர் நாடு சமச்சீரான நிலையில், அனைத்து மாநிலங்களும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் உருவாக்கப் பெற்று செயல்படுத்தப்பட்டு வந்த ஐந்தாண்டு திட்டம் வகுக்கும் முறையை அழித்தொழித்தார். திட்டக்குழுவை கலைத்து விட்டு, “நிதி ஆயோக்” என்ற ஆலோசனைக் குழுவை அமைத்தார்.

மாநிலங்களுக்கு சமச்சீராக நிதி வழங்கப்படும் முறையை முற்றிலுமாக மாற்றி விருப்பு, வெறுப்பு கண்ணோட்டத்தில் பாகுபாடு காட்டப்படுகிறது.

நாட்டிற்கு பிரதமர் என்ற நிலையில் இருந்து மாறி, குறிப்பிட்ட மாநிலங்களுக்கு பிரதிநிதியாக பிரதமர் செயல்பட்டு வருகின்றார்.

பாஜக ஆட்சி புரியும் மாநிலங்களுக்கு ஒரு நியதி! பிற எதிர்கட்சிகள் ஆட்சி புரியும் மாநிலங்களுக்கு ஒரு நியதி! என்ற முறையை கையாள்கின்றார். பாஜக ஆளும் மாநிலங்களுக்கு வெண்ணெயும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு சுண்ணாம்பும் வழங்கும் மிக தவறான கொள்கையை பின்பற்றும் ஒருவரை நாட்டின் பிரதம அமைச்சராக எப்படி ஏற்பது?

அரசியல் அமைப்பு சட்டத்தில் இடம் பெற்றுள்ள மொழிகள் 22. இவைகளின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் காட்டப்படும் பாரபட்சம் மிகக் கொடுமையானது.

சமஸ்கிருதம், இந்தி ஆகிய இரு மொழிகளுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் பிற மொழிகளுக்கு வழங்கப்படுவது இல்லை.

செம்மொழியாம் தமிழ் உள்ளிட்ட பல மொழிகள் புறக்கணிக்கப்படுகின்றன. அவமதிக்கப்படுகின்றன. மொழிகளின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதியில் பாரபட்சம். சமஸ்கிருதம், இந்தி மொழிகளுக்கு அதிக நிதியும் தமிழ், மலையாளம் உள்ளிட்ட பிற மாநில மொழிகளுக்கு மிகக் குறைவான நிதியும் வழங்கப்படுகின்றது. ஏன் இந்த பாரபட்சம்? இத்தகைய பாரபட்சத்துடன் செயல்படும் ஒருவரை நாட்டின் நலன் பேணும் பிரதமராக எவ்வாறு ஏற்றுக் கொள்ள இயலும்?

நாடு விடுதலைப் பெற்ற பின்னர் நமது நாடு பிற நாடுகளை சார்ந்து இல்லாமல் இருக்க, பொதுத்துறை நிறுவனங்களை அன்றைய பிரதமர் நேரு உருவாக்கினார்.

பொதுத்துறை நிறுவனங்களை நவீன இந்தியாவின் ஆலயங்கள் என்று குறிப்பிட்டு பெருமிதம் கொண்டார். அனைத்து மாநிலங்களிலும் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. பிரதமர் நேரு மட்டுமல்ல, அடுத்தடுத்து பொறுப்பேற்ற லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி, மொராஜி தேசாய், சரண்சிங், ராஜீவ் காந்தி, வி.பி.சிங், தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால் ஏன் வாஜ்பாய் பிரதமராக இருந்த போது கூட பொதுத்துறை நிறுவனங்கள் புதிது, புதிதாக உருவாக்கப்பட்டன.

ஆனால் மோடி பிரதமராக பொறுப்பேற்று செயல்பட்டு வரும் கடந்த எட்டு ஆண்டு காலத்தில் ஒரு பொதுத்துறை நிறுவனம் கூட உருவாக்கப்படவில்லை.

மாறாக ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனங்களையும் அடி மாட்டு விலைக்கு விற்று வருகின்றார்.

நாட்டின் மிகப்பெரிய பொதுத் துறை நிறுவனமான வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் உள்ளிட்ட காப்பீட்டு நிறுவனங்கள் பாதுகாப்பு துறைக்கு தேவையான தளவாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் உட்பட அனைத்தையும் உள்நாட்டு, வெளிநாட்டு பெரு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகின்றார்.

பிரதமரும், அவரது கட்சியும் பொதுத்துறை நிறுவனங்கள் தேவையில்லை, அனைத்தும் தனியார் துறை என்ற கொள்கையுடையவர்கள் என்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி என்பதற்கு மாறாக விரல் விட்டு எண்ணக்கூடிய சில தனிப்பட்ட நபர்களான, மோடியின் மிக நெருக்கமான நண்பர்களாய் உள்ள அதானி, அம்பானி வகையறாக்களின் வளர்ச்சிக்காக அயராது பாடுபடும் நபராக மோடி செயல்பட்டு வருகின்றார்.

இப்படிப்பட்ட ஒரு நபரை நாட்டின் அனைத்து பகுதி மக்களின் பிரதமராக எவ்வாறு ஏற்றுக் கொள்ள இயலும்?

நூறு ஆண்டுகால போராட்டத்தால், சிந்திய இரத்தத்தால், கொடுத்திட்ட விலைமதிக்க முடியாத உயிர்ப்பலியால், பல்லாயிரம் பேர் சிறை, சித்திரவதைகளால் பெறப்பட்ட தொழிலாளர்களின் உரிமைகளை, சட்டங்களை சீர்குலைத்து, கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு எதிராக, சில பெருமுதலாளிகளுக்கு, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக தொழிலாளர் விரோத சட்டத்தை நிறைவேற்றியுள்ள பிரதமரை தொழிலாளி வர்க்கம் தங்களுக்கான பிரதமராக எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்?

கல்விக் கொள்கையால் அனைவருக்கும் கல்வி என்ற நிலையை கைவிட்டு பழங்காலத்திற்கு இட்டுச் செல்கின்றவரை எவ்வாறு அனைத்து மக்களுக்கான பிரதமராக ஏற்றுக் கொள்ள இயலும்?

நாட்டில் வாழும் விவசாயிகள், தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் என அனைத்து பகுதியினருக்கும் எதிராக செயல்படும் நபர்தான் இன்றைய பிரதமர் மோடியாவார்.

பிரதமர் மேற்கொண்ட, மேற்கொண்டு வரும் கொள்கைகள் நாட்டு மக்களுக்கு எதிரானது; விரோதமானது.

தனது தவறை மூடி மறைத்து, தனது எட்டு ஆண்டு கால ஆட்சியின் படுதோல்வியை மூடி மறைத்து, தான் ஆகப் பெரிய சாதனையாளர் என்று புருடா விடும் மா மன்னனாக திகழும் மோடியின் முகமூடி முற்றாக கிழிக்கப்பட வேண்டும்!

மோடியின் கபட நாடகத்தை தோலுரித்து காட்ட வேண்டும். நாட்டின் பிரதமர்களில் மிக மோசமான புருடா மன்னன் மோடி என்பதனை நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க களம் காண்பீர்!


நாட்டையும் மக்களையும் காக்க எதிர்வரும் தேர்தல்கள் அனைத்திலும் மோடி கும்பலை தோற்கடிக்க வேண்டும், அதற்கான அரசியல் பணிகளை விரைந்து மேற்கொள்வோமாக!

அடுத்த வாரம் சந்திப்போம்.

வணக்கம்

தோழமைமிக்க

இரா. முத்தரசன்





- த.லெனின்

# 10% இடஒதுக்கீடு: நீதியா? அநீதியா?



உயர் சாதியில் முன்னேறிய பொது வகுப்பினருக்கான 10 சத இட ஒதுக்கீடு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தலைமை நீதிபதி உமேஷ் லலித் மற்றும் தினேஷ் மகேஷ்வரி தலைமையிலான ஐந்து நீதிபதிகள் அமர்வு பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீடு அரசமைப்புச் சட்ட அடிப்படை கட்டமைப்பை மீறவில்லை என தீர்ப்பளித்துள்ளனர். ஐந்து பேரில் மூன்று பேர் இந்த இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாகவும், இரண்டு பேர் எதிராகவும் தீர்ப்பளித்துள்ளனர்.

பொருளாதார ரீதியிலான இட ஒதுக்கீடு அரசமைப்பின் அடிப்படை அம்சங்களை மீறவில்லை என்றும், இது ஒரு உறுதியான நடவடிக்கை (கியீயீவீக்ஷீனீணீமீ வீஸ்மீ கிநீமீவீஷீஸீ) என தெரிவித்ததுடன் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி, அதாவது, ஏழை மாணவர்களுக்கான கல்வியை உறுதிப்படுத்தும் விதத்தில் தனியார் கல்வி நிறுவனங்களில் 25 சத இட ஒதுக்கீட்டை எடுத்துக் காட்டியுள்ளது. அப்படியானால் தனியார் துறையில் இடஒதுக்கீட்டை அறிவித்திருக்கலாமே!

தினேஷ் மகேஸ்வரி, பேலா எம்.திரிவேதி, ஜே.பி.பார்டிவாலா ஆகியோர் இந்த சட்டத் திருத்தத்திற்கு ஆதரவாகவும், மாற்று கருத்தை முன்வைத்த யு.யு.லலித் மற்றும் ரவீந்திர பட் ஆகியோர் இந்த 103 வது சட்ட திருத்தம் இட ஒதுக்கீட்டின் அளவுகோலை 50 சதத்திற்கு மேல் எடுத்துச் செல்கிறது என்றும், உயர்சாதி ஏழைகளுக்கான 10 சத இட ஒதுக்கீட்டில் தலித் மற்றும் பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட ஏழைகள் சேர்க்கப்படாதது பாராபட்சம் என்று தங்களுடைய கருத்தை கூறி உள்ளனர்.

அதிலும், நீதியரசர் ரவீந்திரபட் மக்கள் தொகை அடிப்படையில் வறுமைக்கோட்டை ஆய்வு செய்த 'சினோ கமிஷன்' கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூலையில் வெளியிட்ட அறிக்கையை எடுத்துக் காட்டியுள்ளார். அதில் நாடு முழுவதும் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழக்கூடியவர்கள் 31.7 கோடி பேர். அதில் தாழ்த்தப்பட்டவர்கள் 7.74 சதவிகிதம். அது அந்த சமூகத்தில் 38% ஆகும். பழங்குடியினரில் 4.25 கோடி பேர். அதாவது அச்சமூகத்தில் 48% வறுமைக்கோட்டுக்கு கீழே வருகின்றனர் என்றும், இதர பிற்படுத்தப்பட்டோரில் 13.86 கோடி பேர், அதாவது 33.01% ஆகும். ஆனால் இந்த உயர்சாதி பத்து சத இட ஒதுக்கீட்டு பிரிவினரில் 5.5 கோடி பேர். அதாவது அந்தச் சமூகத்தில் 18.2% தான் வறுமைக்கோட்டுக்கு கீழே வருகின்றனர் என்று மிகத் தெளிவாக உறுதிப்படக் கூடியுள்ளார். ஏற்கனவே இச்சட்ட திருத்தத்திற்கு ஆதரவாக தீர்ப்பளித்த மூன்று நீதிபதிகள் 10% இட ஒதுக்கீடு அரசாணை அரசியல் சாசனத்தின் மீறாது என்றும், இது பொதுத்துறைவினருக்கு நடைமுறைப்படுத்தப்பட்டால் 50% தாண்டக்கூடாது என்ற வரையறைக்குள் வராது என்றும், ஏனெனில் அது சமூக ரீதியான இட ஒதுக்கீடு, இது பொருளாதார ரீதியான இட ஒதுக்கீடு என்று புதிய விளக்கம் தந்து புலகாங்கிதம் அடைந்தனர். பொதுப் பிரிவில் 10%த்தை கழித்தால் அதில் போட்டியிடும் தலித், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோருக்கான வாய்ப்புகளை தட்டிப் பறிப்பதாகத்தானே அமையும்!

75 ஆண்டு கால சுதந்திர இந்தியாவில் இட ஒதுக்கீடு குறித்த மறு ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். ஆனால், கடந்த கால வெள்ளையர் ஆட்சியில் ஆங்கில படிப்பில் தேர்ச்சி அடைய முடியாத பிராமணர்கள் தேர்ச்சி மதிப்பெண்ணான 50ஐ 35 ஆக குறைக்க வேண்டும் என்று மனு போட்டு குறைத்தனர் என்பதும் வரலாறு.

மண்டல் குழு பரிந்துரையை வி.பி.சிங் அமல்படுத்த ஆணையிட்ட போது இதனால் தகுதியும், திறமையும் குறைந்துவிடும் என்று பொங்கி எழுந்து போராடியவர்கள் இப்போது ஏன் அமைதி காக்கிறார்கள். அதுவும் ஒன்றிய அரசு இந்த அரிய வகை ஏழைகளுக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்தும் விதத்தில் பல இடங்களில் பணி நியமனம் செய்துள்ளது. ஸ்டேட் வங்கியில் இந்தப் பிரிவினர் தலித்துகள் எடுத்த மதிப்பெண்ணில் பாதி அளவில் எடுத்தவர்களே வேலையில் சேர்ந்துள்ளனர். என்னே தகுதி!

பொதுவாகஇடஒதுக்கீடுஎன்பதுதகுதியுள்ளமக்களுக்கு உரிய அதிகாரங்கள் மற்றும் உரிமைகள், சலுகைகளை உறுதி செய்யும் ஒரு சமூக நடவடிக்கையாகும். காலம் காலமாக இந்தியச் சமூகத்தில் பிறப்பின் அடிப்படையில் அமைந்த சாதிய அடுக்கு முறையால் உழைப்பாளி மக்களான சூத்திரர்களும், தலித்துகளும் பழங்குடியினரும் கல்வி கற்க கூடாது என்ற சமூகத்தடைக்கு ஆளாகி வந்தனர். எனவே தான் அவர்களுக்கான உரிமையை உத்திரவாதம் செய்ய, சுதந்திர இந்தியாவில், ஏன் அதற்கு முன்பே இட ஒதுக்கீட்டு முறை அமலுக்கு வந்தது.

நீதிக்கட்சி ஆட்சியில் 1921 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வகுப்புவாரி பிரதிநிதித்துவ இடஒதுக்கீடு முதல் முறையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அமல்படுத்தப்பட்டது.

நிலைமை இப்படி இருக்க சுதந்திரத்திற்கு பிறகு முதல்முறையாக நாம் அனைவரும் சட்டத்திற்கு முன் சமம் என்ற அரசமைப்புச் சட்ட பிரிவு 15ஐ காரணம் காட்டி இடஒதுக்கீட்டை நீக்கக் கோரி செண்பகம் துரைராஜன் என்ற மாணவர் 1951–ல் உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை கொடுத்தார். இந்த வழக்கு விசாரித்த நீதிபதிகள் ஏற்கனவே இருக்கும் இட ஒதுக்கீடு அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும் தீர்ப்பளித்தனர். அதனையே உச்சநீதிமன்றமும் உறுதி செய்தது. இதனால் தமிழ்நாடு போர்க்களம் கண்டது. தந்தை பெரியார் சமூக நீதிக்கான இந்த இட ஒதுக்கீட்டை காப்பாற்றுகிற போராட்டங்களுக்கு தலைமை தாங்கினார். நாடு முழுவதும் இது விவாதத்தை ஏற்படுத்தியது.

எனவே தான் 1951–ல் இந்திய அரசமைப்பின் முதல் சட்ட திருத்தத்தை நேரு அரசு கொண்டுவந்து, பிரிவு 15(4) உட்பிரிவாக சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கலாம் என்ற திருத்தத்தை கொண்டு வந்தது. அதன் பிறகே இட ஒதுக்கீட்டை தொடர்ந்தது.

செய்தி என்னவென்றால், செண்பகம் துரைராஜன் மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான மனுவே செய்யாமல் தான் பாதிக்கப்பட்டதாக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது என்பதுதான் அதிசயத்திலும் அதிசயம்!

சங்கரி பிரசாத் எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் அரசமைப்புச் சட்டத்தின் இந்த முதலாவது சட்டத் திருத்தத்தை எதிர்த்து 1951ல் நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்ற சட்ட திருத்தம் சட்டப்படி செல்லுமா? என்ற வினாவை தொடுத்தது. ஆனால் உச்சநீதிமன்றம் இந்த சட்ட திருத்தம் செல்லும் என்று தீர்ப்பு அளித்தது. அதோடு அரசமைப்புச் சட்டம் பிரிவு 368 பயன்படுத்தி நாடாளுமன்றத்தில் அரசியலமைப்பை திருத்தம் செய்யலாம் என்றும் கூறியது.

இதன் பிறகே அரசமைப்புச் சட்டப் பிரிவு 340 ஐ பயன்படுத்தி 1953–ல் முதலாவது பிற்பட்டோர் ஆணையத்தை இந்திய அரசு அறிவித்தது. காக்கா கல்லேல்கர் தலைமையில் அமைந்த இந்த ஆணையம் நாடு முழுவதும் இரண்டு ஆண்டுகள் ஆய்வுகள் மேற்கொண்டு 1955–ல் பரிந்துரைகளை வெளியிட்டது. அதில் மத்திய, மாநில அரசுகளை சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்டவர்களுக்கான அடையாளப்படுத்தப்பட்டவர்களை அடையாளம் காணும்படி வலியுறுத்தியது. அதன் பரிந்துரைகளும் மிகச் சிறப்பானதாகும்.

நில சீர்திருத்தம், கிராம பொருளாதார மறு சீரமைப்பு, பூதான் இயக்கம், குடிசை தொழில்கள், ஊரக வீட்டு வசதி, பொது சுகாதாரம், குடிநீர், விநியோகம், கல்வி, பல்கலைக்கழக கல்வி, அரசு பணிகள் இவைகளில் இதர பிற்பட்டவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை 75% ஆக இருக்க வேண்டும் என்று இவ்வறிக்கை பரிந்துரைத்தது.

1961 ஆம் ஆண்டு சாதி அடிப்படையில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி உயர்ஜாதியில் உள்ள பெண்களையும் பிற்படுத்தப்பட்டவர்களாக அறிவித்தது. இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு இதர பிற்படுத்தப்பட்டோர் 80% இருக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், 1979இல் ஜனவரி ஒன்றாம் தேதி மொராஜ் தேசாய் தலைமையிலான ஒன்றிய அரசு மண்டல்குழுவை இதர பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையத்தை அறிவித்தது. அது 1980ல் மக்கள் தொகையில் இதர பிற்படுத்தப்பட்டோர் 52% என்று 1931–ல் வெள்ளைக்காரர்கள் காலத்தில் எடுக்கப்பட்ட சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி அமைந்த அறிவிப்பதாகும்.

இதில் 27% பரிந்துரைப்பாகச் சொன்னது. ஏனெனில், ஏற்கனவே உச்ச நீதிமன்றம் இட ஒதுக்கீடு 50%க்கு மேல் செல்லக்கூடாது என்று தீர்ப்பளித்த காரணத்தால்தான் 52% இருக்கிற பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அதே அளவு நியாயம் செய்ய முடியவில்லை என்றும், அதில் 27% இடஒதுக்கீடு அளிக்கலாம் என்று பரிந்துரைத்தது. வி.பி.சிங் அரசு இதை நடைமுறைப்படுத்தியது. இதனால் இதை எதிர்த்த பெரும் போராட்டங்களை வட மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சியும், ஆர்எஸ்எஸ் சங்க பரிவார அமைப்புகளும் நடத்தியது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே இந்த மண்டல் குழு பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டும் என்ற முயற்சி எடுத்தபோது, அதை எதிர்த்து உயர் நீதிமன்றம், உச்சநீதிமன்றங்களிலும் வழக்கு தொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த நரசிம்மராவ் ஆட்சி காலத்தில் ஏற்கனவே உயர் சாதியில் இருக்கிற ஏழைகளுக்கு 10% இட ஒதுக்கீடு என்பதை அவர் அறிவித்தார்.

1992 இந்திரா சஹானி வழக்கு என்று அறியப்பட்ட அந்த வழக்கு புகழ்மிக்க வழக்காக அறியப்படுகிறது. இதில்தான் ஒன்பது பேர் அடங்கிய நீதி அரசர்கள் அமர்வு தீர்ப்பு வழங்கியது. இட ஒதுக்கீடு 50% சதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்றும், இதர பிற்படுத்தப்பட்டோருக்கு கிரிமினிலேயர் முறையையும் பரிந்துரைத்தது மட்டுமல்லாமல், அரசமைப்புச் சட்டம் பிரிவு 16(4) ன்படி இதர பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார ரீதியில் அல்லாது, சாதி மற்றும் கல்வி பின்தங்கல் அடிப்படையில் காணப்பட வேண்டும் என்றும் அது குறிப்பிட்டது.

ஆனால் அன்று 9 பேர் அடங்கிய நீதிமன்ற அமர்வு அளித்த தீர்ப்பை, இன்று ஐந்து பேர் அடங்கிய அமர்வு, அதிலும் மூன்று பேர்தான் இந்த தீர்ப்பை அளித்துள்ளனர். இந்தத் தீர்ப்பு 9 பேர் அடங்கிய அமர்வையும் கட்டுப்படுத்துவதாக கூறுவது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

நம்முடைய கேள்வி என்னவென்றால் இநத இடஒதுக்கீட்டில் வருவோரின் வருமான வரம்பு ஆண்டுக்கு 8 லட்சம் என்று அறிவித்திருக்கிறது. அப்படி என்றால் மாதத்திற்கு ரூ.66,666 வருமானம் என்று வருகிறது. அதாவது நாளொன்றுக்கு ரூ.2,222 வருமானம் பெறுவோர் ஏழைகள் என்றால் அவர்களைத்தான் அறிய வகை ஏழை என்று நாம் அழைக்கிறோம்!

இந்தியாவின் வறுமை கோடு குறித்த பல்வேறு புள்ளி விவரங்கள் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது. நாளொன்றுக்கு ரூ.40 ஊதியம் பெற்றாலே அவர் வறுமை கோட்டுக்கு மேலே சென்று விட்டதாக சொல்கிறது ஒன்றிய அரசு. ஆனால், இங்கே நாளொன்றுக்கு ரூ.2222 வருமானம் பெறக்கூடியவர் வறுமை கோட்டுக்கு கீழே வருவதாக சொல்வது விந்தையிலும் விந்தை. நீதி அரசர்கள்தான் இதை விளக்க வேண்டும்!

அரசமைப்பு சட்டப்பிரிவுகள் 15(4) பிரிவு 16 (4) மற்றும் வழிகாட்டும் நெறி பிரிவு 46 ஆகியவை கல்வி மற்றும் சமூக ரீதியாக பிற்பட்டவர்கள் மற்றும் பட்டியலினத்தவர், பட்டியல் பழங்குடியினர் ஆகியோரின் வளர்ச்சிக்கான சிறப்பு அதிகாரங்களை வழங்குகிறது.

ஆனால், அரசமைப்புச் சட்டத்தின் எந்த இடத்திலும் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து சொல்லப்படவே இல்லை. ஏனெனில் இது வறுமை ஒழிப்பு திட்டம் என்பதால்தான். நீதி அரசர்கள் அரசமைப்புச் சட்டத்தில் இல்லாத ஒன்றைப் பரிந்துரைப்பது எதைக் காட்டுகிறது? ஏற்கனவே இந்திய ஆட்சிப் பணி உள்ளிட்ட ஒன்றிய குடிமைப் பணிகளுக்கான தேர்வாணையத்தில் நடத்தப்பட்ட தேர்வுகளில் பொதுப் பிரிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இதர பிற்படுத்தப்பட்ட இளைஞர்கள் மற்றும் தலித் பழங்குடி இளைஞர்கள் அந்தப் பட்டியலில் வைக்கப்படாமல் பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித் பழங்குடியினர் பட்டியலில் வைக்கப்பட்டு அந்த பொதுப் பிரிவு மொத்தத்தில் இட ஒதுக்கீடு அல்லாதவர்களுக்காக பாவிக்கிற ஒரு பொது போக்கு தொடர்ந்து நிலவுகிறது. இது குறித்து உச்ச நீதிமன்றம் எச்சரித்தும் உரிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தும், இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

**அதுபோலவே இட ஒதுக்கீட்டுக்கு வராத பொதுப் பிரிவினரின் ஆதிக்கம் தான் நாடு முழுவதும் உள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஏறத்தாழ 75% உயர் சாதி வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் இருவரைத் தவிர மற்ற அனைவருமே உயர் சாதி வகுப்பினைச் சார்ந்தவர்கள்தான். ஏன் இந்த வழக்கை விசாரித்த ஐந்து நீதிபதிகளும் உயர்சாதி வகுப்பைச் சார்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்.**

மருந்துக்கு கூட ஒரு பிற்படுத்தப்பட்ட நீதிபதியை இந்த தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வழக்கினை விசாரிப்பதற்கான அமர்வில் சேர்க்கப்படவில்லை. இதுவே இயற்கை நீதிக்கு எதிரானது ஆகும். இடர்பாடுகளில் இடஒதுக்கீடு சமூக நீதி!

எனவே, இந்த தீர்ப்பை மறு சீராய்வுக்கு உட்படுத்துவதற்கும், அரசமைப்பு சட்டப்படி கல்வி ரீதியாக, சமூக ரீதியாக பின்தங்கியவர்களுக்குத்தான் இட ஒதுக்கீடு என்பதை உறுதிப்படுத்துவதற்கும் தொடர் போராட்டங்கள் எழட்டும்! நம்மை ஆட்டுவிக்கும் அநீதி சங்கிலிகள் அறுபடட்டும்!

தொடர்புக்கு: 94444 81703

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 85 இதழ் 32

# 10% இட ஒதுக்கீடு: மறுக்கப்பட்ட சமூக நீதி

இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, பொருளாதாரத்தின் நலிவடைந்த பொதுப் பிரிவினருக்கான 10% இட ஒதுக்கீடு செல்லும் என்று தீர்ப்பளித்துள்ளது.

இதில் தலைமை நீதிபதி உள்ளிட்ட இரண்டு பேர், இந்த இட ஒதுக்கீட்டை கொண்டு வருவதற்காக அரசியல் அமைப்பு சட்டத்தில் செய்யப்பட்ட 103வது திருத்தம் செல்லாது என தீர்ப்பளித்துள்ளனர். எனினும் பெரும்பான்மை எனும் அடிப்படையில் இந்த தீர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பொதுவாக பார்க்கும்போது, பொருளாதார வசதியற்றவர்களுக்கு இட ஒதுக்கீடு தருவது போல தோன்றினாலும், இதில் சொல்லப்பட்டுள்ள வருமான வரம்புக்கு உட்பட்டு வருவாய் உள்ள பழங்குடியினர், தாழ்த்தப்பட்ட மக்கள், அனைத்து பிற்படுத்தப்பட்ட மக்களும் இந்த இட ஒதுக்கீட்டில் இருந்து விலக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த இடஒதுக்கீடு, வேலை நியமனத்திலும் பதவி உயர்விலும் பழங்குடி, தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் அல்லாத ஏழைகளுக்கு மட்டுமே பொருந்தும். அதாவது உயர்சாதியினருக்கு மட்டுமே பொருந்தும்.

இந்த சட்ட திருத்தத்தில் இதற்காக சொல்லப்படும் காரணம், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பொது வேலை வாய்ப்புகளில், தமது நிதித் திறனின்மையின் காரணமாக பொருளாதார வளம் மிக்கவர்களோடு போட்டியிட்டு உயர் சாதியினர் வெற்றி பெற முடியவில்லை என்பதாகும்.

ஆனால் இவ்வாறுதான் இன்றைய சூழல் இருக்கிறது என்பதற்கு எந்தத் தரவும் கிடையாது.

இந்தச் சட்டத்தின்படி வருடம் 8,00,000 ரூபாய் வருவாய் உள்ளவர்கள், அதாவது மாதம் 66 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் உள்ளவர்கள் ஏழைகளாகி விடுகிறார்கள். இவ்வளவு அதிக வருவாய் உள்ளவர்கள் உண்மையிலேயே அரசு வேலைகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில், அவர்களுடைய எண்ணிக்கைக்கு தகுந்த விகிதத்தில் இடம்பெறவில்லையா என்பது மையக் கேள்வியாகும். உண்மையில் அவருடைய எண்ணிக்கைக்கான விகிதத்தை விட பல மடங்கு அதிகமாக இந்தப் பணிகளில் அவர்கள் இருக்கிறார்கள்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 16ஆவது பிரிவு சமமின்மையைப் பற்றி விவாதிக்கிறது. இந்தியாவில் மட்டும்தான் பிறப்பின் அடிப்படையில் சாதிகள் உள்ளன. இதில் உயர்வு, தாழ்வும் கற்பிக்கப்பட்டு இருக்கிறது. எனவே சமூகத்தின் கீழ் அடுக்குகளில் அழுத்தப்பட்டிருக்கிற மக்களுக்கு சம வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற வகையில் தான் இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது.

பொருளாதாரப் பின்னடைவு என்பது ஒரு நிரந்தரமான அடையாளமாகாது. பணக்காரரான ஒருவர் ஏழை ஆகலாம், ஏழையாக உள்ள ஒருவர் பணக்காரராகவும் ஆகிவிடலாம். ஆனால் தாழ்த்தப்பட்ட, பழங்குடி, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒருபோதும் உயர்சாதி நிலையை அடையவே முடியாது அல்லது தங்களுக்குள்ளாகவே கூட மாறிக்கொள்ள இயலாது.

இந்த சட்ட திருத்தமே, மிக அவசரமாக நாடாளுமன்றத்தில் முன்னறிவிப்பு ஏதும் இன்றி 2019 ஜனவரி 8ஆம் தேதி வைக்கப்பட்டது. இதை படித்து புரிந்து கொண்டு விவாதிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அவகாசமே தராமல் 48 மணி நேரத்தில் இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டது. மிக வியப்புக்குரிய வகையில், அடுத்த நாளிலேயே குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது. ஜனவரி 12ஆம் தேதி அன்று ஒன்றிய அரசிதழில் வெளியிடப்பட்டது.

மருத்துவ காப்பீடு உள்ளிட்ட அரசு உதவிகளை பெற வேண்டுமானால் மாதம் ஆண்டுக்கு ரூபாய் 72,000 வரை பெறுபவருக்கு மட்டுமே தகுதி உள்ளது. அதாவது மாதம் 6000 ரூபாய் மட்டுமே ஈட்டுபவர் தான் ஏழை. 6001 ரூபாய் வருவாய் இருந்தாலும் அவர் பணக்காரராகக் கருதப்படுகிறார். ஆனால் இந்த சட்டம் 66 ஆயிரம் ரூபாய் மாதம் ஈட்டுபவரை ஏழை என்று சொல்கிறது.

புதிய தாராளமய யுகத்தில், பழங்குடி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் எட்டிப் பிடிக்கக் கூடிய அரசு கடைநிலை வேலைகள் அனைத்திலும் இனி நிரந்தர பணியாளர்களே இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது. அவை அனைத்தும் காண்ட்ராக்ட் அவுட்சோர்ஸிங் ஆகிவிட்டன. இட ஒதுக்கீட்டை வெகுவாக ஆதரிக்கும் தமிழ்நாடு அரசு கூட இதையே தான் செய்கிறது.

மிக உயர்நிலைப் பதவிகளில் எப்போதும் உயர்சாதியினர்தான் இட ஒதுக்கீடுகளை எல்லாம் தாண்டி அதிக எண்ணிக்கையில் பணிபுரிகிறார்கள். கிடைக்கிற சிறிய வாய்ப்பையும் கூட அடிநிலை மக்களுக்கு கிடைக்க விடாமல் மறுப்பதுதான் இந்த 10% இட ஒதுக்கீடு ஆகும்.

இந்தத் தீர்ப்பின் மீது சீராய்வு மனு தாக்கல் செய்து ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு எடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். அதே நேரத்தில் தனியார் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டுக்கான போராட்டம் மேலும் கூர்மைப்படுத்தப்பட வேண்டும்.

## மின் கட்டணம், சொத்துவரி உயர்வைக் கண்டித்து

# இந்திய மாதர் தேசிய சம்மேளனம் நவ.29ல் ஆர்ப்பாட்டம்




### மாநிலக்குழு கூட்டத்தில் தீர்மானம்

இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாநிலக் குழு கூட்டம் மாநிலத் தலைவர் பி.பத்மாவதி தலைமையில் விழுப்புரத்தில் நடைபெற்றது. மாநில செயலாளர் ஜி.மஞ்சுளா முன் வைத்த வேலையறிக்கை விவாதித்து ஏற்கப்பட்டது.

கொரானா காலத்திற்கு பின்பு இன்னமும் மீண்டெழ முடியாத பொருளாதார சுமையில் சாமான்ய மக்கள் இருக்கும் நிலையில் தமிழக அரசு மின் கட்டணம், சொத்துவரி அனைத்தையும் உயர்த்துவது நடுத்தர மக்களை பாதிப்பதோடு இதன் அனைத்து சுமைகளும், வாடகை வீட்டில் குடியிருந்து வரும் ஏழைகள் மீதே சுமத்தப்படும் நிலை உள்ளது. எனவே தமிழக அரசு அறிவித்துள்ளதை திரும்பப்பெற வலியுறுத்தியும், பீல்கிஸ் பானு வழக்கில் குற்றவாளிகள் தண்டனை திரும்ப பெறப்பட வேண்டும் என வலியுறுத்தியும் நவம்பர் 29 அன்று தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது.

2022 நவம்பர் தொடங்கி 2023 பிப்ரவரிக்குள் கிளை, ஒன்றிய மாநாடுகளை நடத்தி முடிக்க வேண்டும் என முடிவானது. அம்மாநாடுகளில் பில்கிஸ் பானு வழக்கில் விதிமுறைகளை மீறி பாலியல் வன்முறை மற்றும் கொலை குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டிருப்பது பெண்கள் இதுவரை போராடி பெற்றுள்ள சட்ட உரிமைகளையே பறிக்கும் செயல் என்பதையும், பெண்களுக்கு எதிரான பாஜக அரசின் செயல்பாடுகளையும் கிளை, ஒன்றிய மாநாடுகளில் பிரச்சாரமாக கொண்டு செல்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது. மார்ச், ஏப்ரல், மே மாதத்தில் மாவட்ட மாநாடுகளையும், ஜூலையில் தென் சென்னையில் மாநில மாநாட்டை நடத்துவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

பல குடும்பங்களில் வருமானத்திற்கு ஆதாரமாக இருந்து வந்தவர்கள் கொரானாவால் மரணமடைந்திருக்கின்றர். இத்தகைய சூழலில் அக்குடும்பங்களின் வேலைவாய்ப்பு, உணவு பாதுகாப்பு, குழந்தைகளின் கல்வி, உடல்நலம், மாநில சுகாதார கட்டமைப்பு குறித்து 5 மாநிலங்களில் ஆய்வு நடத்த வேண்டும்; ஒவ்வொரு மாநிலமும் 5 மாவட்டங்களில் ஆய்வு நடத்த வேண்டும் என்ற இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தேசியக் குழு முடிவின் படி தமிழகத்தில் திருவாரூர், கிருஷ்ணகிரி, மதுரை மாநகர், புறநகர், தென்சென்னை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஆய்வு நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மூவலூர் இராமமிர்தம் திருமண உதவி திட்டத்தை தமிழக அரசு தொடர வேண்டும், டாஸ்மாக் மதுபானக்கடைகளை மூட வேண்டும், மின்கட்டண உயர்வை கைவிட வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பிப்ரவரியில் மாணவர் பெருமன்ற 16வது மாநில மாநாடு




அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் கோவையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில தலைவர் மௌ.குணசேகர் தலைமை தாங்கினார். மா நில துணைச் செயலாளர் ச.பூர்ணிமா நந்தினி அஞ் சலி தீர்மானத்தை வாசித்தார். மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் சமகால கல்விப் பிரச்சினைகள் குறித்து பேசினார்.

கூட்டத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் ஆகியோர் கலந்து கொண்டு அரசியல் விளக்கவுரையாற்றினர். கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், கோவை மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இதில், மாணவர் பெருமன்ற 16வது மாநில மாநாட்டை பிப்ரவரியில் நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டது. மாணவர் பெருமன்றம், இளைஞர் பெருமன்றம் சார்பில் 25.11.2022ஆம் தேதி டெல்லியில் நடைபெறும் நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்தில் தமிழ்நாட்டிலிருந்து திரளான தோழர்கள் பங்கேற்பது என முடிவு எடுக்கப்பட்டது.

இந்தி திணிப்பிற்கு எதிராக அனைத்து மாணவர் அமைப்புகளும், ஆசிரியர்களும் ஒன்றிணைந்து போராட முன்வர வேண்டும்; தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் ஆளுநர் மூலம் மறைமுகமாக அமல்படுத்தி வரும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பில் இருந்துகொண்டு மாணவர்களிடத்தில் அறிவியல் பூர்வமான கருத்துக்களை பேசுவதற்கு பதிலாக, சனாதன கொள்கைகளுக்கு ஆதரவாக பேசி வரும் தமிழ்நாடு ஆளுநரை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்; அரசு உதவி பெறும் கல்லூரியில் அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதை தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

வெளி நாடுகளில் மருத்துவம் பயின்ற மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பயிற்சி மருத்துவர்களாக சேர்வதற்கான கட்டணத்தை தமிழ்நாடு அரசு ரத்து செய்ய வேண்டும்; தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கட்டணக் கொள்ளையை தடுத்து நிறுத்த வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில், மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் ஜி.ஆர்.தினேஷ்குமார், மாநில துணைத் தலைவர்கள் ஆ.பிரகாஷ், பா.தினேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



எஸ்.காசிவிஸ்வநாதன்

# வாழ்வதற்காக போராடுகிறோம்! போராடுவதற்காக வாழ்கிறோம்!

# செங்களம் காண நெல்லைக்கு வாருங்கள்

தமிழ்நாடு ஏஐடியூசி 20 வது மாநாடு திக்கெட்டும் புகழ் பரப்பும் திருநெல்வேலி நகரில் 2022 டிசம்பர் 1, 2, 3 தேதிகளில் நடைபெறுகிறது . மூன்றாம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பாளையங்கோட்டை சேவியர் கல்லூரி அருகில் உள்ள கேண்டீன் ஸ்டாப்பில் இருந்து பிரம்மாண்டமான செம்படை பேரணி புறப்பட இருக்கின்றது. லூர்துநாதன் சிலை அருகில் எஸ்.எஸ். தியாகராஜன் நினைவரங்கில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் தமிழகத்தின் தொழிலாளி வர்க்க தலைவர்கள் மட்டுமின்றி, கேரள மாநில வருவாய் துறை அமைச்சர் கே.ராஜன் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

டிசம்பர் 1ஆம் தேதி காலையிலே ஏஐடியூசி செங்கொடி ஏற்றப்பட இருக்கின்றது. செங்கோட்டை பி.வி.டி மில் பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தின் மூத்த தலைவர், 90 வயதிலும் அயராமல் போராடிக் கொண்டிருக்கின்ற ஏ.சாமி தியாகச் செங்கொடியை ஏற்றி வைக்கின்றார். தியாக தீபங்கள் பல முனைகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றன. தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின்பு பொது மாநாடு தொடங்குகிறது.

ஏஐடியூசி யின் மாநில தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் தலைமை தாங்குறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தொடக்க உரையாற்றுகிறார். தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், பாளையங்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

அன்று மாலை ஐந்தரை மணியளவில் தமிழகத்தின் தோழமை தொழிற்சங்க இயக்கத்தின் தலைவர்கள் அனைவரும் பங்கேற்கின்ற கருத்தரங்கம் நடைபெறுகின்றது.

உலகத் தொழிலாளி வர்க்கத்தின் அங்கம் தான் இந்திய தொழிலாளர்கள் என்பதை எடுத்துக்காட்டும் வண்ணம் உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் துணைப் பொதுச் செயலாளர் ஸ்ரீகுமார் மற்றும் உலகத் தொழிற் சங்க சம்மேளன நிதி குழு தலைவர் சி.ஹெச்.வெங்கடாசலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

2ம் நாள் மாலை பரிக்ஷா நாடகக் குழுவின் 'பலூன்' நாடகம் நடைபெறுகின்றது. பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் தூத்துக்குடி கலைமாமணி பொ. கைலாசமூர்த்தி நினைவு சகா கலைக்குழுவினரின் கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

திருநெல்வேலி மாநகர சுவரெங்கும் மாநாட்டு விளம்பரங்கள் மக்களுடைய கவனத்தை ஈர்த்துள்ளது.

வாருங்கள் தோழர்களே.. என அழைக்கின்ற நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த வரவேற்பு குழு தோழர்கள் இரவு பகலாக சுற்றிச் சுழன்று மாநாட்டு ஏற்பாடுகளை மேற்கொண்டு இருக்கின்றார்கள். திருநெல்வேலி சீமை யினுடைய வரலாறு போராட்டக் களங்களின் வரலாறு ஆகும்.

தொழிலாளி வர்க்கத்தின் கட்சிக்கு வந்த நெருக்கடிகள் ஏராளம்.

1940 லேயே முதலாவது நெல்லைச் சதி வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி 1943ம் ஆண்டிலே தண்டனை கொடுக்கப்பட்டது. இவ்வழக்கின் முதல் எதிரி சிங்கையிலே முதல் கிளை அமைத்து பஞ்சாலைத் தொழிலாளர்களை அணிதிரட்டிய ராமச்சந்திர நெடுங்காடிக்கு நான்கு ஆண்டுகளும், வி. மீனாட்சிநாதனுக்கு



இரண்டரை ஆண்டுகளும், கழுகுமலை அழகிரி, பி. சீனிவாசன், வஜ்ரவேலு ஆகியோருக்கு ஒன்னரை ஆண்டுகளும் தண்டனை கொடுத்தார்கள்.

தேசிய விடுதலைத் தன்மை கொண்ட இவ்வழக்கில் உழைக்கும் மக்களின் தலைவர்களுக்காக எஸ். வி. கோபாலகிருஷ்ண ஐயரும், வி. எஸ். சங்கர சுப்பிரமணிய முதலியாரும் வழக்கறிஞர்களாக நீதிமன்றத்தில் ஆஜர் ஆனார்கள்.

சென்னை மாகாண தொழிற்சங்க காங்கிரஸ் அன்றைய நாளின் ஏஐடியூசி யின் மாநில அமைப்பின் பெயர் தமிழ்நாடு, கேரளம், மைசூர், ஆந்திரா ஆகிய நான்கு மொழி பேசுகின்ற பிரதேசங்களிலும் உள்ள தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பாக செயல்பட்டு வந்தது. 1945 ல் இதன் மாநாட்டை இயக்க வளர்ச்சியால் புகழ் பெற்றிருந்த விக்கிரமசிங்கபுரத்தில் நடத்துவது என தலைமை முடிவு செய்தது.

சென்னை மாகாண தொழிற்சங்க மாநாடு நடைபெற்றால், சிங்கைத் தொழிலாளர் இயக்கம் பெரும் வளர்ச்சி பெறும் என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும், ஆலை நிர்வாகமும் தங்கள் சுரண்டலுக்கும், ஆட்சிக்கும் ஆபத்து ஏற்படும் என்று எண்ணி விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்து எல்லைக்குள் மாநாடு நடத்தக்கூடாது என்று 144 தடை உத்தரவு பிறப்பித்தனர்.

தோழர்கள் கலங்கவில்லை. திகைப்படையவில்லை. உடனடியாக அம்பாசமுத்திரம் விடுதலை இயக்கத் தலைவர்களை அணுகி பொன்விழா மண்டபத்தில் மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்தார்கள். சிங்கை தொழிலாளர்கள் நான்கு மைல் ஊர்வலமாக நடந்து வந்து மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்தார்கள். இம் மாநாடு தொழிலாளர்களது வர்க்க உணர்வின் சிறப்புக்கும், இயக்கத் தோழர்களின் சலியா உழைப்புக்கும், சிறந்த அமைப்பு திறனுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்தது.

1942 ல் வி.பி.சிந்தன், 1943 ல் ஆர். கே. கண்ணன் ஆகியோர் அமைப்பாளர்களாக செயல்பட்டார்கள்.

கொடுமையின் உச்சகட்டமாக இந்திய விடுதலைக்குப் பின்னர் தலைவர்களின் மீது நெல்லை சதி வழக்கு போடப்பட்டு அடக்குமுறை பேயாட்டம் ஆடியது.

அடக்குமுறை நடுவிலேயும் இயக்கத் தளங்கள் உள்ள இடங்களில் தீவிர இயக்கங்கள் நடந்து கொண்டே இருந்தன. இதனை போலீசாரால் தடுக்க முடியவில்லை. இயக்கம் முழுவீச்சுடன் பரவிக் கொண்டிருந்தது.

ஆனாலும் பல வழக்குகள். கொள்ளை, கொலை,அரசை கவிழ்க்க சதி, அரசுக்கும் மக்களுக்கும் இடையே பகைமையை வளர்த்தல் என்பது போன்று பல பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு விசாரணையில் இருந்தன. குற்றம் சாட்டப்பட்ட தோழர்கள் பலர் சிறைகளில் வாடினார்கள். பலர் தலைமறைவாக இருந்தார்கள். இயக்கம் சோர்ந்து விடவில்லை.

**1948 ஆகஸ்ட் மாதம் முதல் கைது செய்தல் தொடங்கியது. வழக்கறிஞர்கள் என்.டி. வானமாமலை, என். சண்முகம், பேராசிரியர் நா. வானமாமலை, சிந்து பூந்துறை அண்ணாச்சி சண்முகம் பிள்ளை, முதலிய நடுத்தர வர்க்கத் தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள்.**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு முதல் மாநாட்டில் தயாரிக்கப்பட்ட உறுப்பினர் பொறுப்பு புத்தகத்தை கைப்பற்றி அதில் உள்ள விவரங்களை அறிந்து அனைவரையும் கைது செய்ய முயன்றார்கள்.

மாவட்ட முழுவதும் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். எந்த வழக்கில் சேர்ப்பது என்பதை பின்னர்தான் முடிவு செய்தார்கள். குற்றச்சாட்டுகளை கண்டுபிடித்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தார்கள். இந்த நடவடிக்கைகள் மூன்றாண்டுகள் நீடித்தன.

எப்படியாவது முதல் நிலை தலைமையையும், இரண்டாம் நிலை தலைமையையும் இயக்க அணிகளிடமிருந்து பிரித்து அவர்களை நிலைகுலைய செய்ய வேண்டும் என்பது ஆட்சியாளர்களின் நோக்கம்.

கைது செய்யப்பட்ட போதும், போலீஸ் லாக்கப்பிலும் நமது தோழர்கள் பலர் சித்திரவதை செய்யப்பட்டார்கள்.

பட்டினி போட்டார்கள், நகக் கண்ணில் ஊசி ஏற்றினார்கள், தலைகீழாக கட்டி தொங்கவிடப்பட்டார்கள், மேலே ஏறி நின்று மிதிக்கப்பட்டார்கள், அடித்து நொறுக்கப்பட்டார்கள், அவமானமாக ஏசப்பட்டார்கள், போலீசாரின் கொடும் சித்திரவதையால் ஏற்பட்ட காயங்களில் நெருப்பு வைத்து சுடப்பட்டார்கள், தொப்புளில் பிள்ளை பூச்சியை வைத்துக் கட்டினார்கள். இப்படி கடும் தாக்குதலுக்கும், கொடுமைகளுக்கும் உள்ளாகி சிறையில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஆனாலும் மனம் கலங்கவில்லை. உழைக்கும் மக்களுக்காக அத்தனை கொடுமைகளையும் தாங்கிக் கொண்டார்கள்.

சிலருக்கு ஜாமீன் அளிக்கப்பட்டது. அவர்கள் வெளியிலிருந்து வழக்குகளை நடத்தவும், ஜெயிலில் இருந்தவர்களுக்கு தேவையான பொருட்களை அனுப்பவும் சிறைவாசிளின் குடும்ப விவகாரங்களை கவனித்தும் கொண்டார்கள். வெளியே பயங்கரமான அடக்குமுறைகளும் கொடுமைகளும் தாண்டவம் ஆடின.

வழக்கறிஞர்கள் என்.டி. வானமாமலையும், பாளை. என்.சண்முகமும் விடுதலை செய்யப்பட்டதால் வழக்குகளை நடத்த முடிந்தது. அவர்கள் பல தோழர்கள் மீதிருந்த வழக்குகள் விடுதலையில் முடிவடையும்படி தீவிரமாக நீதிமன்றங்களில் போராடினார்கள். சில மாதங்களுக்குப் பிறகு இன்னும் சில தோழர்கள் வெளியே வந்தனர். வழக்குகளை நடத்தவும், சிதறடிக்கப்பட்ட இயக்க அமைப்பினை மீண்டும் செம்மையாக்கவும் முயன்றனர். ஆர்கனைசிங் குழு கூட உருவாக்கி செயல்பட முடியவில்லை.

இயக்கத்தின் அமைப்புகளை அடக்குமுறை அவ்வளவுதூரம் சேதப்படுத்தி இருந்தது.. நெல்லையே மாவட்ட தொடர்பு மையமாக செயல்பட்டது. சிறைக்கும் வெளியில் உள்ள உலகத்திற்கும் தொடர்பு உண்டாக்கும் நிறுவனமாக செயல் பட்டது. பேராசிரியர் நா. வானமாமலை நகரத்தின் பொறுப்பில் இருந்து அத்தனையையும் இயக்கினார்.

பல வழக்குகளை ஒரே வழக்காக்கி திருநெல்வேலி சதி வழக்கு என்று பெயரால் இரு வழக்குகள் நடந்தன. 1952 மத்தியில் தீர்ப்புகள் வழங்கப்பட்டன.

எத்தனைத் தோழர்கள் தொழிலாளி வர்க்கத்திற்கும், அதன் அரசியல் இயக்கத்திற்கும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அந்த மாபெரும் நெல்லை மாநகருக்கு வாருங்கள் என அன்போடு அழைக்கிறோம்!

**தொடர்புக்கு: 94434 68710**

# ஆனி ராஜா மீதான வழக்கைத் திரும்பப் பெறுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினரும், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான ஆனி ராஜா மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கை திரும்பப் பெற வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்தி உள்ளது. இது குறித்து கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

சம குடியுரிமையை வலியுறுத்தி இரண்டு ஆண்டுகளாக நடைபெற்று வந்த போராட்டத்தைக் குறிக்கும் வகையில் டெல்லி ஜந்தர் மந்தரில் 2021 டிசம்பர் 21 அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் தொடர்பாக ஆனி ராஜா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 144 மற்றும் பேரிடர் மேலாண்மை சட்டத்தின் பிரிவுகளை மீறியுள்ளதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு முற்றிலும் ஆதாரமற்றது என்றும், பா.ஜ.க அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் எதிர்ப்புகளை ஒடுக்குவதற்காக இது போன்ற வழக்குகள் தொடுக்கப்படுகின்றன என்றும் கட்சி கருதுகிறது.

அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக, குடிமக்களின் ஜனநாயக மற்றும் அரசியல் அமைப்புச் சட்ட ரீதியான உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும் என்பதற்கு ஆதரவாக, அனைத்து மதச்சார்பற்ற, ஜனநாயக அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் குரலெழுப்ப வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது.

நவ.02 அன்று நடைபெற்ற வழக்கு விசாரணைக்காக பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றத்தில் தோழர் ஆனி ராஜா ஆஜராகி இருந்தார். இந்த வழக்கில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. வழக்கின் அடுத்த விசாரணை 2023 ஜனவரி 7 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### இலங்கை கடற்படை தாக்குதல்

# ஒன்றிய அரசு தலையிட வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இரண்டாயிரம் மீனவர்கள் 534 விசைப் படகுகளில் ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றுள்ளனர். இவர்கள் தமிழ்நாடு அரசின் மீன்வளத்துறை அதிகாரியிடம் உரிய அனுமதி பெற்று, அடையாள அட்டையுடன் கடலுக்குள் சென்றுள்ளனர்.

இவர்களில் தங்கச்சிமடத்தை சேர்ந்த 15 மீனவர்களை கடந்த சனிக்கிழமை காலையில் இலங்கை கடற்படை கைது செய்து, அவர்களது இரண்டு விசைப்படகுகளை பறிமுதல் செய்துள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் முகாமில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இதனால் தங்கச்சி மடம் உள்ளிட்ட இராமேஸ்வரம் பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்களும், மருந்துகளும் அனுப்பி வைத்து சகோதர உறவுவை வலுப்படுத்தி வருகிறோம்.

இந்தச் சூழலில் இலங்கை கடற்படை கட்டுபாடில்லாமல், சர்வதேச சட்ட விதிமுறைகளை மதிக்காமல் தமிழ்நாட்டு மீனவர்களை கைது செய்வது, சுட்டுக் கொல்வது, அவர்களது உடைமைகளை சேதப்படுத்துவது என்ற இரக்கமற்ற தாக்குதல் நடத்தி வருவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கை கடற்படையின் தொடர் தாக்குதல் குறித்து பாஜக ஒன்றிய அரசு உறுதியான நடவடிக்கை எடுத்து, மீனவர்களை விடுவிக்கவும், அவர்களது உடைமைகள் இழப்புக்கு உரிய இழப்பீடு வழங்கவும், இலங்கை அரசுடன் பேசி தீர்வுகாண வேண்டும். தமிழ்நாட்டு மீனவர்களின் மீன்பிடி தொழில் அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

1 ம் பக்கத் தொடர்ச்சி

செயலாளர் இராமச்சந்திரன் இளைஞர்மன்ற மோகன் ஆகியோர் பேசினர். அருப்புக்கோட்டையில் ஒன்றிய செயலாளர் முனியசாமி தலைமை வகித்தார். மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார் கொடியை ஏற்றிவைத்தார். விருதுநகரில் நகர செயலாளர் முத்துகுமார் தலைமை வகித்தார். காதர்முகையதின் கொடியை ஏற்றினார். ஒன்றிய செயலாளர் சக்கணன், தளவாஇ முருகேசன், மாதர்சங்க மாவட்ட தலைவர் மாரீஸ்வரி, போக்குவரத்து ஏஐடியுசி பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**செங்கம்:** செங்கம் வட்டம் அந்தனூரில் பா.மகாவிஷ்ணு தலைமையில் சிபிஐ கொடியை ரமேஷ் பாபு, ஏஐடியுசி கொடியை பி. யுவராஜ் ஏற்றினர். சர்தார், மாதேஸ்வரன், ராஜா, ஏழுமலை, குப்புசாமி, கிருஷ்ணமூர்த்தி, குமார், முருகன், ராமச்சந்திரன் மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர். செங்கம் நகரில் எஸ்.சர்தார் தலைமையில் சிபிஐ கொடியை ஜி.கிருஷ்ணமூர்த்தி ஏற்றினார். எம். எஸ். மாதேஸ்வரன், அப்துல் மஜீத், பா. முருகன், எஸ்.ராஜா மற்றும் பல தோழர்கள் பங்கேற்றனர்.

**தென்காசி:** தென்காசி மாவட்டம் சிவகிரியில் நவம்பர் புரட்சி தினத்தை போற்றும் வகையில் ஒன்றிய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகரச் செயலாளர் பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். துணைச் செயலாளர் ராஜேந்திரன், பேரூராட்சி கவுன்சிலர் அருணாச்சலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் தி.இசக்கித்துரை சிறப்புரையாற்றினார். மாவட்ட குழு உறுப்பினர் சிங்காரவேலு, சண்முகவடிவு, வி.தொ.ச. செயலாளர் வேலுச்சாமி, முனியாண்டி, குருவு, கணேசன், பால்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர். புளியங்குடியில் நவம்பர் புரட்சி தின உறுதிமொழி ஏற்கப்பட்டது. ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் டி. சுப்பையா, வாசு ஒன்றிய செயலாளர் வேலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கரூர்:** நவம்பர் 7 புரட்சி தினம் உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கரூர் மாவட்ட கட்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தாந்தோணி ஒன்றிய செயலாளர் ஆர்.நடராஜன் தலைமை தாங்கினார். தாந்தோணி ஒன்றியக் குழு உறுப்பினர் ஆர்.ராமசாமி கொடி ஏற்றினார். நிகழ்ச்சியில் மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.மோகன்குமார், மாவட்டக் குழு உறுப்பினர்கள் ஆர்.தங்கவேல், கே.கலாராணி மற்றும் ஜெகதாபி சண்முகம் கட்டளை பி.நடேசன் தாந்தோணி கல்யாண சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். வகுப்புவாத எதிர்ப்புசமூக நல்லிணக்கம் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி கரூர் பஸ்நிலையம் காமராஜ் சிலை அருகில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கரூர் நகரம், இனாம் கரூர், அரசு போக்குவரத்து கிளைகள் சார்பாக நடைபெற்றது.

**க.பரமத்தி:** நவம்பர் 7உறுதிமொழி ஏற்புநிகழ்ச்சி க.பரமத்தி வடக்கு ஒன்றிய குழுவின் சார்பாக பரமத்தி கடைவீதியில் ஒன்றிய செயலாளர் எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.லட்சுமி காந்தன், மாவட்ட குழு உறுப்பினர்கள் ஆர்.சந்திர சேகர்,வி.கே.வீராச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திண்டுக்கல்:** திண்டுக்கல் மாவட்ட கட்சி அலுவலகம் மற்றும் பல்வேறு ஒன்றியங்களில் கொடியேற்றி உறுதி மொழி ஏற்கப்பட்டது. திண்டுக்கல் கட்சி அலுவலகத்தில் கே.ராஜாங்கம் தலைமையில் மூத்த தோழர் பி.வெள்ளைச்சாமி கொடியேற்ற, மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் பி.சக்திவேல் ஒன்றிய செயலாளர் தலைமையில் எம். கணேசன் மாவட்ட செயற்குழு கொடியேற்ற தோழர்கள் கலந்து கொண்டனர், பழனி நகரில் டி.தங்கவேல் தலைமையில் 3இடங்களிலும், வேடசந்தூரில் எம்.பி.கனிவேல் தலைமையில் 3 இடங்களிலும், நிலக்கோட்டையில் தாலுகா செயலாளர் ஏ.அல்லிமுத்து தலைமையிலும், வடமதுரையில் எம்.சாமிநாதன் தலைமையில் 4 இடங்களிலும் பங்கு கொண்டனர்.

**நாமக்கல்:** திருச்செங்கோடு நகர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நகர செயலாளர் எஸ்.சுகுமார் கட்சி கொடி ஏற்றினார். வி.தொ.ச மாவட்ட செயலாளர் சி.ஜெயராமன், ஆட்டோ ஓட்டுனர் சங்க மாவட்ட செயலாளர் டி.கே.சுப்பிரமணி, ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன் ஆகியோர் விளக்கி பேசினர்.

**மணப்பாறை:** மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் நவம்பர் புரட்சி தினத்தன்று கட்சி கொடி யேற்றி வீர வணக்கம் செலுத்தி முன்னாள் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி.மகேந்திரன் புரட்சிகர உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்விற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித் தலைமை வகித்தார். நகர செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார். சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் தங்கமணி எம்.சி., முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் சவுக்கத் அலி மற்றும் நகர, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர்.

**மணிகண்டம்:** மணிகண்டம் ஒன்றிய குழு சார்பில் நவம்பர் புரட்சி தின கொடியேற்று விழா எம்.மருதம்பாள் தலைமையில் நடைபெற்றது. சோமரசம்பேட்டை பெரியார் சிலை அருகில் கொடியினை கட்சியின் ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.முருகன் ஏற்றி வைத்தார். ஏஐடியுசி தலைமை அலுவலகத்தில் கட்சியின் ஒன்றிய பொருளாளர் கே.என்.ஜெகநாதன் ஏற்றி வைத்தார். நாடார் சத்திரம் பேருந்து நிறுத்தத்தில் கட்சியின் நிர்வாக குழு உறுப்பினர் டி.நிர்மலா ஏற்றி வைத்தார். பாரதிநகர் கிளையில் கட்சியின் கிளை துணைச் செயலாளர் பி.குமரேசன் ஏற்றி வைத்தார். நாச்சிகுறிச்சியில் கட்சியின் கிளை துணைச் செயலாளர் பி.வித்யா ஏற்றி வைத்தார். கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் சி.செல்வகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். எஸ்.முத்தழகு நன்றி கூறினார்.

**குமரி:** நவம்பர் 7 புரட்சி தினத்தை முன்னிட்டு மத, சமூக நல்லிணக்கத்தை பேணி பாதுகாப்போம் என்கிற கோரிக்கையோடு மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது.

நாகர்கோவிலில் மாநகரச் செயலாளர் ஆர்.இசக்கிமுத்து தலைமையில் நடைபெற்ற இயக்கத்தில், சிபிஐ மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், மாநகர பொருளாளர் கே.நாகராஜன், பேராசிரியர் சுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். பூதப்பாண்டி, திட்டுவிளை துவரங்காடு ஆகிய இடங்களில் கட்சியின் பூதைக்கிளை செயலாளர் எஸ்.நாராயணசுவாமி, பூதை பஞ்சாயத்து துணை தலைவர் அனில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆரல்வாய்மொழியில் கிளைச் செயலாளர் வி.அருள்குமார் தலைமையில் தகஇபெ பகவதி, ஆரல் சுப்பிரமணியம், அண்ணாத்துரை, தங்கவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வடக்குத்தாமரைகுளத்தில் வே.அருணாசலம் தலைமையிலும், செண்பகராமன்புதூரில் கல்யாணசுந்தரம் தலைமையிலும், காருபாறையில் மாவட்ட பொருளாளர் பி.தாமரைசிங், தினகரன் தலைமையிலும், தக்கலையில் வர்க்கீஸ் தலைமையிலும் ஏ.ஐ.டி.யூ.சி.யின் மாவட்டச் செயலாளர் ராஜு முன்னிலையிலும் மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது.

மார்த்தாண்டம் ,குழித்துறை, சரல்முக்கு காஞ்சாம்பரம் மஞ்சாலுமூடு ஆகிய இடங்களில் மாவட்ட துணைச்செயலாளர் ஜி.சுரேஷ்மேசியதாஸ், ஆர்.செல்வராணி, வேணு, மரியதாஸ், குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செங்கல்பட்டு:** மறைமலை நகரில் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார் தலைமையில் கட்சி கொடியினை மூத்த தோழர் ஆர்.பாண்டுரங்கம் ஏற்றினார். நவம்பர்புரட்சி நினைவு தூணை முன்னாள் மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் இ.பாலாஜி, வி.வீராசாமி, மாவட்ட பொருளாளர் வி.சதிஷ், மூத்த தோழர் கா.சுப்ரமணியன், விதொசா மாவட்ட செயலாளர் பி.எஸ். எல்லப்பன், தகஇபெ மாவட்ட செயலாளர் ராமலிங்கம் மற்றும் மாட்டகுழு உறுப்பினர்கள் இ.ஶ்ரீகாந், கே.வி.சேகுவேராதாஸ், எஸ்.விஜயன் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி தலைமை வகித்தார். சிபிஎம் மாவட்ட செயலாளர் சின்னை பாண்டியன் முன்னிலை வகித்தார். மக்கள் அதிகாரத்தின் மாநில பொருளாளர் காளியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட பொருளாளர் ந.பாலசுப்பிரமணியன், மாநகர செயலாளர் ஆர்.பிரபாகரன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, துணைசெயலாளர் ஆர். பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன் நன்றி கூறினார்.

தஞ்சாவூர் மாவட்ட அலுவலகத்தில் மூத்த தலைவர் ஜி.கிருஷ்ணன் தலைமையில் கொடியை மாவட்ட செயலாளர் முத்துஉத்திராபதி ஏற்றி வைத்தார். நிகழ்ச்சியில் ம.விஜயலெட்சுமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**சேலம்:** நவம்பர் புரட்சி தின கொடியேற்று விழா உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மாவட்ட கட்சி அலுவலகத்தில் மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கந்தன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் மகாகவி பாரதியார் சிலைக்கு மாலை அணிவித்து உரையாற்றினார். கட்சியின் கொடியை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ் ஏற்றி வைத்தார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பா.தினேஷ் உறுதி மொழியை வாசிக்க தோழர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

**திருப்பூர்:** உடுமலைப்பேட்டை நகரில் நடைபெற்ற நவம்பர் புரட்சி தின கொடியேற்று விழாவும், உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மூத்த தோழர் குருசாமி கொடியேற்றி வைத்து தோழர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் உடுமலைப்பேட்டை தாலுகா கமிட்டி செயலாளர் வி.சௌந்தரராஜன், மாவட்டகுழு உறுப்பினர் ரணதேவ், மூத்த தோழர் சி.சுப்பிரமணியம், கட்சி கிளை நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம்:** காஞ்சிபுரத்தில் 33 வது வார்டு கிளை செயலாளர் எம்.காவேரி கொடியேற்றி இனிப்பு வழங்கினார். ஏஐடியுசி காஞ்சிபுரம் மாவட்ட துணை செயலாளர் எல்.தங்கராஜ் சிறப்புரையாற்றினார். 39 வது வார்டு காஞ்சிபுரம் கிளை செயலாளர் ஆர்.கோபி, 49 வது வார்டு கிளைச் செயலாளர் எம்.ஜானகிராமன், ஏ.பாஞ்சாலை, ரஹமத் பின் மணிகண்டன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு நவம்பர் புரட்சி தினத்தை கொண்டாடினர்.

ஆலந்தூர் தொகுதி குழுவின் சார்பில் க.பல்லாவரம், பஜனை கோயில் தெரு சந்திப்பிலுள்ள கட்சி கொடிக் கம்பத்தில் ஜா.பூபாலன் செங்கொடியினையேற்றி உரையாற்றினார். கே.முனுசாமி, ஆலந்தூர் தொகுதி குழுவின் முன்னாள் செயலாளர் கே.ரவி ஆகியோர் கலந்து கொண்டு நவம்பர் புரட்சி நாள் உறுதிமொழியேற்றனர்.

# 10% இட ஒதுக்கீடு: உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு சமூக நீதிக்கு எதிரானது

## சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் அறிக்கை

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பொருளாதார ரீதியாக பின்தங்கிய உயர்சாதியினருக்கு 10% இட ஒதுக்கீடு வழங்குவதற்கான அரசியல் சட்டத்தின் 103 வது அரசியல் சட்ட திருத்தம் செல்லும். அது அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பிற்கு எதிரானதல்ல என இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

இது சமூக நீதிக் கோட்பாட்டிற்கும், அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்புக்கும் ,சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளுக்கும் எதிரானது.

பொருளாதார அடிப்படையை மட்டுமே அளவுகோலாக கொண்டு உலகில் எந்த நாட்டிலும் இட ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில்லை. பொருளாதாரம் என்பது நிரந்தரமான ஒன்றல்ல என்பதே இதற்கு முக்கியக் காரணம்.

மேலும், பொருளாதார அடிப்படையை மட்டுமே அளவுகோலாக கொள்ளும் பொழுது ,அதை உயர்சாதிகளில் உள்ள ஏழைகளுக்கு மட்டுமே வழங்குவது என்பதும், அதிலிருந்து பட்டியல் சாதியினர்,பட்டியல் பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு விலக்கு வழங்கி இருப்பது அரசியல் சட்டத்திற்கு எதிரானதாகும்.

இதை தலைமை நீதியரசர் யு.யு.லலித் மற்றும் நீதியரசர் ரவீந்திர பட் ஆகியோரும் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, 103 வது அரசியல் சட்டத்திருத்தம் ,அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு எதிரானதல்ல என நீதிபதிகள் குறிப்பிடுவது ஏற்புடையதல்ல.

இட ஒதுக்கீடு கொள்கை மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.எவ்வளவு காலத்திற்குத்தான் இட ஒதுக்கீட்டை நீட்டிப்பது. இட ஒதுக்கீடுகள் தொடர்ந்து நீட்டிக்கப்படுவது சரியல்ல என்ற கருத்துக்களும் வெளிப்பட்டுள்ளன.

இவை உண்மைக்கு, எதார்த்த நிலைமைகளுக்கு எதிரானது. இந்தியச் சமூகத்தின் 2500 ஆண்டுகால வரலாற்றை சரியாக புரிந்து கொள்ளாததின் வெளிப்பாடு.

இந்தியச் சமூகத்தில் 2500 ஆண்டுகளுக்கும் மேலாக, சாதி அடிப்படையில் பரம்பரை பரம்பரையாக ஒரு குறிப்பிட்டத் தொழிலையே செய்ய வேண்டும் என்ற குலத்தொழில் முறை நீடித்துவருகிறது. சாதி அடிப்படை யிலான, சமத்துவத்திற்கு எதிரான இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் ஒடுக்கப்பட்ட அடித்தட்டு சாதியினர், தொடர்ந்து கடுமையான உடல் உழைப்பு சார்ந்த வேலைகளையும், தூய்மைப்பணி, மனிதக் கழிவுகளை அகற்றுதல் போன்ற வேலைகளையும் செய்துவந்தனர். தீண்டாமை, சாதிய ஒடுக்குமுறை,பாரபட்சம் போன்ற கொடுமைகளுக்கும் உள்ளாகினர்.

குலத்தொழிலை மீறியோர் கடும் தண்டனைகளுக்கு உள்ளாகினர். மனுதர்மம் போன்றவையும் அதற்காகவே உருவாக்கப்பட்டன. குலத்தொழிலை மீறியதற்காக சம்பூகனின் தலை சீவப்பட்டதை ராமாயணமும், ஏகலைவனின் கட்டைவிரல் வெட்டப் பட்டதை மகாபாரதம் மூலம் அறிகிறோம்.



அனைத்து சாதியினரும் அர்ச்சகராக முடியவில்லை. ஒரு சாதியினருக்கே உரிய குலத்தொழிலாக அது உள்ளது.

இன்றும் சாதி அடிப்படையிலான இது போன்ற வேலைப் பிரிவினைகள் தொடர்கின்றன. சாதிய ஒடுக்குமுறைகள், கொடுமைகள் தொடர்கின்றன.

2500 ஆண்டுகளுக்கும் மேலாக சமூக நீதிக்கு,சமத்துவத்திற்கு எதிரான வேலைப் பிரிவினை இருந்ததை கவனத்தில் கொள்ளாமல், நீண்ட காலமாக புறக்கணிப்புக்கு உள்ளான பல கோடி மக்கள் இன்றளவும் சமூக ரீதியாக கல்வி ரீதியாக பின் தங்கி இருப்பதை கணக்கில் கொள்ளாமல், எத்தனைக் காலத்திற்குத்தான் இட ஒதுக்கீடு நீடிப்பது என்ற கேள்வியை எழுப்புவது, மேலாதிக்க உணர்வை வெளிப்படுத்தும் அராஜகப் போக்காகும்.

சமூக நீதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு என்பது அண்மைக்காலமாக ஏற்பட்ட ஒன்றுதான். கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தான், சமூக நீதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு தொடர்பான கருத்தியலும்,கோரிக்கைகளும் எழுந்தன.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடே 2006 க்குப் பிறகுதான் மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் கல்வியில் நடைமுறைக்கு வந்தது.

அதுவும் கிரீமிலேயர் நடைமுறைப்படுத்தப்பட்டதனால் முழுமையான பயன் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு கிடைத்திட வில்லை. அந்த 27 விழுக்காடும் படிப்படியாகவே நடைமுறைக்கு வந்தது. அதிலும் முறைகேடுகள் நடைபெறுகின்றன.

அதைப் போலவே மருத்துவக் கல்வியில் இளநிலை முதுநிலை மருத்துவ மற்றும் பல் மருத்துவப் படிப்புகளில், அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு 2006 முதல் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.ஆனால், நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, சட்ட ரீதியான போராட்டத்திற்குப் பிறகு சென்ற ஆண்டு முதல்தான் இவ்வொதுக்கீடு நடைமுறைக்கு வந்துள்ளது.

அதுவும் சரியாக நடைமுறைப் படுத்தப்படவில்லை . திறந்தப் போட்டியில் இடத்தை பிடிக்கக்கூடிய வகையில் நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற ஓபிசி பிரிவினருக்கு ,பொதுப்போட்டிக்கான இடங்களில் , இடங்களை வழங்காமல், ஓபிசி இட ஒதுக்கீட்டு இடங்களுக்குள், இடங்களை வழங்கிய முறைகேடும் இந்த ஆண்டு நடைபெற்றுள்ளது.

இடங்களை ஒதுக்கீடு செய்யும் பொழுது , இதரர் (others) மற்றும் அன்ரிசர்வுடு ( unreserved) என்ற வார்த்தைகளை வேண்டுமென்றே பயன் படுத்தி ,இட ஒதுக்கீட்டில் முறைகேடுகளை செய்வதும் தொடர்கிறது.

சமூக நீதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு தற்பொழுது தான் பல துறைகளில் வழங்கப்பட துவங்கியுள்ள நிலை யில்,அதுவும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், ஏதோ

இட ஒதுக்கீடு நீண்ட காலமாக நடைமுறையில் உள்ளது போன்ற ஒரு தோற்றத்தை நீதிபதிகள் உருவாக்கி இருப்பது எதார்த்த நிலைக்கு எதிரானது. மிகவும் வருந்துத்தக்கது .

மேலும், இட ஒதுக்கீடுதான் சாதி மற்றும் வர்க்க ஏற்றத்தாழ்வுகளுக்கு, வேறுபாடுகளுக்கு, சமத்துவமின்மைக்கு காரணமாக உள்ளது போலவும், இட ஒதுக்கீட்டை ரத்து செய்தால் சாதி,வர்க்க வேறுபாடுகள் ,ஏற்றத்தாழ்வுகள் மறைந்து சமத்துவம் ஏற்பட வழிபிறக்கும் என்பது போலவும் நீதியரசர் பெலா எம்.திரிவேதி கருத்தை வெளிப்படுத்தியுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. இது சாதி மற்றும் வர்க்கம் தொடர்பான அவரது தவறான புரிந்து கொள்ளலை வெளிப்படுத்துகிறது. சமூக நீதி அடிப்படை யிலான இட ஒதுக்கீடு வருவதற்கு முன்பே, சாதியும், சாதிய ஏற்றத்தாழ்வுகளும்,வர்க்க வேறுபாடுகளும் இந்தியச் சமூகத்தில் இருந்தன.

ஆண்டு வருமானம் ரூபாய் 8 லட்சம் வரை உள்ள, 5 ஏக்கர் வரை நிலம் உள்ள, 1000 சதுர அடி வீடுள்ள, 900 முதல் 1800 சதுர அடி அளவில் வீட்டுமனை உள்ள உயர்சாதியினர் கூட பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள் என வரையறுத்திருப்பது அபத்தமானது.உயர்சாதியினரில் உள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கியோரை வரையறுப்பதில் மட்டும் மிகவும் தாராளத்தை ஒன்றிய அரசு காட்டியுள்ளது.

அவசர கதியில், சமூக நீதியை நீர்த்துப் போகச் செய்யும் வகையில், உயர்சாதியில் உள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கியோர் எவ்வளவு பேர் என்ற புள்ளிவிவரங்களும் இல்லாமல் ஒன்றிய அரசு 103 வது அரசியல் சட்டத்தை கொண்டுவந்தது.

எனவே ,சமூக நீதிக் கோட்பாட்டிற்கு எதிரான 103 வது அரசியல் சட்டத் திருத்தம் செல்லும் என்ற இந்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அதிக நீதி அரசர்கள் கொண்ட, முழுமையான அரசியல் சட்ட அமர்வு இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஐ.நா. அமைப்பின் பருவநிலை மாற்றம் குறித்த உச்சி மாநாடு – COP 27

COP 27 எனும் ஐ.நா அமைப்பின் பருவநிலை மாற்றம் குறித்த உச்சி மாநாடு எகிப்து நாட்டு ஷர்ம்எல்ஷேக் நகரில் இந்த ஆண்டு நவம்பர் 6 அன்று தொடங்கி 18 ஆம் தேதி வரை நடைபெறும் இம்மாநாட்டில் 190 பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பருவநிலை மாற்றத்தால் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய ஏழை நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் உரிய இழப்பீடு வழங்குவது குறித்த சர்ச்சைக்குரிய விஷயத்தை முதல் முறையாக, அதிகாரப்பூர்வமாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள மாநாட்டு பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

புவி வெப்பமயமாதல் காரணமாக ஏற்படும் விளைவுகளை ஏழை நாடுகள் எதிர்கொள்ள உதவிகள் (நிதி) வழங்குவது குறித்து, அதிகாரப்பூர்வ விவாதங்கள் நடத்துவதை கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ந்த நாடுகள் நிராகரித்து வந்தன. 2021 ஆம் ஆண்டு கிளாஸ்கவ் நகரில் நடைபெற்ற COP – 26 மாநாட்டில், இழப்பு மற்றும் சேதங்களுக்கு நிதியளிப்பதற்கான ஓர்



அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவை வளர்ந்த நாடுகள் தடுத்து நிறுத்தின. அதற்குப் பதிலாக, நிதி வழங்குவது குறித்த பேச்சுவார்த்தைக்கு மூன்றாண்டு கால அவகாசம் கொடுக்கலாம் என்ற நிலைப்பாட்டிற்கு அந்த நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

COP – 27 மாநாட்டின் செயல்திட்டத்தில் உள்ள இழப்பீடு குறித்த விவாதங்கள் இழப்பீட்டுக்கு உத்தரவாதம் அளிக்காது. ஆனால், 2024 ஆம் ஆண்டிற்குள் ஒரு தீர்மானகரமான முடிவை நோக்கி இட்டுச் செல்லும் என்று மாநாட்டின் தலைவரான ஷம்மே ஷாக்ராய் கூறியுள்ளார்.

உக்ரைன் போர் காரணமாக, எரிபொருட்களின் விலையேற்றம், பொருளாதார மந்தநிலை ஏற்படுவதற்கான சூழல் ஆகியவற்றை முன்னிறுத்தி ஏழை நாடுகளுக்கு நிதி வழங்கிட வளர்ந்த நாடுகள் தயங்கக் கூடும் என்ற கருத்தும் பரவலாக உள்ளது. எவ்வாறாயினும், இதற்கு முன்பு நடைபெற்ற மாநாடுகளைக் காட்டிலும் இந்த மாநாட்டில் பதற்றமான சூழல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சோசலிசத்தின்



**து.ராஜா** Ex M.P.
**பொதுச் செயலாளர்,** CPI

**ஜீவா நாவா சிந்தனைப்பள்ளியின் 100 வது மெய்ந்நிகர் மேடையில் மார்க்சியச் சிந்தனையாளரும், கலை இலக்கியப் பெருமன்ற மேனாள் மாநிலத் தலைவருமான தோழர் சி.சொக்கலிங்கம் தலைமையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் து.ராஜா** Ex M.P. **அவர்கள் "சோசலிசத்தின் இந்தியப்பாதை" என்னும் பொருண்மையில் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம். உரையை எழுத்து வடிவமாக்கியது: எஸ்.கே.கங்கா**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக, மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, நான் கலந்து கொள்ளுகிற முதல் நிகழ்வு இது.

ஜீவாநாவா சிந்தனையைப் பள்ளியின் சார்பில் நடைபெறுகிற இந்த, நூறாவது நிகழ்வில் நான் கலந்து கொள்ள வேண்டும் என்று எனக்கு அன்பு கட்டளையிட்டார் தோழர் கங்கா.

## சோசலிசமும் – மார்க்சிசமும்

தோழர்களே, சோசலிசத்துக்கான இந்தியப் பாதை என்ற பொருளில்தான் நாம் விவாதிக்கப் போகிறோம். சோசலிசம் என்று வருகிறபோது நாம் இன்னும் சரியாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் இருவரும் 1847 ஆம் ஆண்டு எழுதி 1848 ஆம் ஆண்டு வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை தெளிவாகச் சொல்கிறது. அவர்கள் காலத்திலேயே சோசலிசம் பற்றி பல்வேறு கருத்துக்கள் இருந்திருக்கின்றன. அவர்கள் நிலபிரபுத்துவ சோசலிசம், குட்டி பூர்ஷ்வா சோசலிசம், கற்பனா சோசலிசம் என்றெல்லாம் வகைப்படுத்தி, விமர்சனம் செய்து கடைசியாக விஞ்ஞான சோசலிசம் என்ற முடிவுக்கு வருகிறார்கள்.

அந்த அறிக்கை, ஒரு கம்யூனிஸ்ட் புரட்சியால் ஆளும் வர்க்கங்கள் நடுங்கட்டும்; பாட்டாளிகள் இழப்பதற்கு எதுவும் இல்லை, அடிமைச் சங்கிலிகளைத் தவிர; அவர்கள் வெல்வதற்கு ஒரு உலகம் இருக்கிறது என்று முடிகிறது.

'வெல்லுவதற்கு ஒரு உலகம்' என்றால், அந்த உலகம் எப்படிப்பட்ட உலகம்? இதைத்தான் காரல் மார்க்ஸும், ஏங்கல்ஸும் விரிவாக ஆராய்ந்து இருக்கிறார்கள். அவர்கள் முடிவுக்கு வந்தது அரசியல் அதிகாரம் இன்றைக்கு வென்றெடுக்கப்பட வேண்டும்; வர்க்கப் போராட்டம் என்று வருகிற போது கூட ஏங்கல்ஸ் அதனை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். வர்க்கப் போராட்டம் என்று சொன்னால், வெறும் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக, முதலாளிகளுக்கு எதிராக, சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக நடைபெறும் போராட்டம் மட்டுமல்ல. அரசியல் அதிகாரத்துக்கான போராட்டம். அதோடு நில்லாமல், மானுடநெறிகளுக்காக, உயர்ந்த நெறிகளுக்காக இருக்கிற தத்துவப் போராட்டம் என்றார். இதுதான் மார்க்சிசம் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மார்க்சிசம் மற்ற கொள்கைகளைப் போன்ற ஒன்று அல்ல. மார்க்ஸே அதைத் தெளிவுபடுத்துகிறார். எல்லா தத்துவஞானிகளும் பல்வேறு கோணங்களிவ் இந்த உலகத்தை வியாக்கியானப்படுத்தியிருக்கிறார்கள்; ஆனால் அதனை எப்படி மாற்றுவது என்பதுதான் நம் முன்னால் இருக்கிற பிரச்சினை. இதுதான் மார்க்ஸ், ஏங்கல்ஸ்ஸ் இருவருக்கும் முன்னால் இருந்தது. இதை அவர்கள் அணுகிய விதம் இயக்கவியல் முறையில் அணுகினார்கள். இயக்கவியல் முறை என்று நாம் சொல்லுகிற இயங்கியல் பொருள்முதல்வாதம், வரலாற்றியல் பொருள்முதல்வாதம் என்ற அடிப்படையில் நம்மைச் சுற்றிலும் இருக்கிற, நாம் இணைந்து வாழ்கிறவற்றைப் புரிந்து கொள்வது, நாம் வாழ்கிற சமூக அமைப்பைப் புரிந்து கொள்வது, நம் மன அமைப்பைப் புரிந்து கொள்வதும் ஆகும். இதைச் செய்ய வேண்டுமானால், இயங்கியல் ரீதியான அணுகுமுறை, dialectical approach வேண்டும். இந்தக் கருத்தை முன் வைப்பது மார்க்ஸ், ஏங்கல்ஸ்.

அவர்களுக்கு முன்னர் பாயர்பக் உட்பட பல தத்துவஞானிகள் இருந்தார்கள். ஆனால் மார்க்ஸ் ஏங்கல்ஸ் முடிவுக்கு வந்தது ஒரு dialectical approach வேண்டும் என்பதுதான். இயற்கை, மானுடச் சமுதாயம், மானுட மனம் consciousness, மானுட உணர்வு. இதுகுறித்து ஒரு புறநிலையான அணுகுமுறை வேண்டும் என்று சொன்னவர்கள் மார்க்ஸ் ஏங்கல்ஸ். அந்த அடிப்படையில்தான் அவர்கள் சமூகத்தைப் பார்க்கத் தொடங்கினார்கள். தனி மனிதனுடைய உணர்வுகளை அவர்கள் ஆராயத் தொடங்கினார்கள்.

அவர்கள் காலத்தில் சோசலிசம் என்பது இன்றைக்கு இருக்கிற சமூக அமைப்புகளில் இருந்து மாறுபட்ட ஒரு சமூக அமைப்பு. அப்படி என்றால் சோசலிசம் என்றால் என்ன? என்று வருகிற பொழுது, சுரண்டல் இல்லாத ஒரு சமூகம். இதுதான் அவர்கள் வந்து சேர்ந்தது. சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, சுரண்டல் இல்லாத ஒரு சமூக அமைப்பாக சோசலிசம் வரவேண்டும்.



**சோசலிசம் ஒரு உலகளாவியச் சிந்தனை:**

இது திடீரென மார்க்ஸ் ஏங்கல்ஸுக்கு மட்டும் வந்த சிந்தனையல்ல. அதற்கு முன்னர் பலரும் சிந்தனை செய்து இருக்கிறார்கள். நம்முடைய திருவள்ளுவரே "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்று சொல்லியிருக்கிறார். மட்டுமல்லாமல் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்". இந்தச் சிந்தனைகளை அவருடைய காலத்திலேயே முன் வைத்திருக்கிறார். அதேபோல இன்றைக்கு நாம் எதிர் கொள்ளுகிற சனாதனச் சவால்களை, கருத்துக்களை திருவள்ளுவரும் எதிர்கொண்டிருக்கிறார். அதனால்தான் "மழித்தலும் நீட்டலும் வேண்டா" என்று திருவள்ளுவரால் சொல்லப்பட்டு இருக்கிறது.

எனவே மானுட வரலாற்றில் ஒரு தொடர்ச்சியான சிந்தனை அந்தந்த நாடுகளுக்கு ஏற்ப வளர்ந்து வந்திருக்கிறது. ஐரோப்பாவில் கற்பனா சோசலிசம் என்று வருமானால், நம்முடைய தமிழ்நாட்டில் அட்சயப் பாத்திரம், மணிமேகலை பசிப்பிணி ஆற்றுவதற்காக போராடினாள் என்று வருகிற போது, இதுவும் கற்பனா சோசலிசத்தின் வடிவங்கள்தாம். இதை எதார்த்தத்தில், நடைமுறையில் கொண்டு வர வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும். இதுதான் அரசியல் அதிகாரத்துக்கான போராட்டம் கூர்மை அடைகிறது.. அரசியல் அதிகாரத்துக்கான போராட்டத்தை கூர்மை அடையச் செய்கிறது.

## இந்தியக் கம்யூனிஸ்டுகளும் – சோசலிசமும்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 ல் தொடங்கப்பட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் 2025 ல் நூற்றாண்டை அது எட்டுகிறது. நூறாண்டு வரலாறு என்பது ஒரு மகத்தான வரலாறு. காலனி ஆதிக்கத்திற்கு எதிராக களம் கண்ட கம்யூனிஸ்ட் இயக்கம். முழு சுதந்திரம் என்ற முழக்கத்தையே முன்வைத்த முதல் இயக்கம். அதேபோல நாடு விடுதலை பெற்ற பின்னர், விடுதலை பெற்ற இந்தியாவில் மக்களுடைய ஜனநாயக உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தவர்கள் கம்யூனிஸ்டுகள் மதச்சார்பற்ற ஜனநாயக நெறிகள் காப்பாற்றப்பட வேண்டும்; மொழி அடிப்படையிலான மாநிலங்கள் அமைய வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் இடையில் நல்ல உறவுகள்; நாடு என்ற முறையில் கூட்டாட்சி முறை போன்றவை காப்பாற்றப்பட வேண்டும் என்பதை எல்லாம் வலியுறுத்தியவர்கள் கம்யூனிஸ்டுகள். அந்த அடிப்படையில்தான் தொழிலாளர்கள், விவசாயிகள், உழைக்கும் மக்களை எல்லாம் ஒன்றிணைக்க வேண்டும்; அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று துவக்கம் முதலே போராடி வருபவர்கள் கம்யூனிஸ்டுகள்.

இந்தியாவிலேயே தொழிற்சங்கம் தொடங்கப்பட்ட இடம் எதுவென்றால் சென்னை நகரத்தை நாம் குறிப்பிட வேண்டும். தொழிற்சங்கத்தில் பல அற்புதமான தலைவர்கள் பாடுபட்டு இருக்கிறார்கள். இந்தியாவிலேயே முதல்முறையாக மே தினம் கொண்டாடப்பட்டதே நம்முடைய சென்னை மாநகரத்தில்தான். தோழர் சிங்காரவேலர் தலைமையில்தான் அது நடைபெற்று இருக்கிறது. இப்போது எட்டு மணி நேர வேலை, எட்டுமணி நேர ஓய்வு, எட்டு மணிநேரம் உறக்கம் எனப் போராடி வெற்றி பெற்றது என்பது கம்யூனிஸ்டுகளின் தலைமையில் தான்.

பிரெஞ்சு காலனி ஆதிக்கத்திலிருந்து இப்போது புதுச்சேரி என்று சொல்லுகிற பாண்டிச்சேரியில்தான் முதன் முதலாக ஆசியாவிலேயே அது செயல்பாட்டுக்கு வந்தது. எனவே கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு வீரம் செறிந்த வரலாறு. கம்யூனிஸ்டுகள் இந்தியாவில் சோசலிசம் அடைய வேண்டும் என்று போராடுகிறார்கள். அதற்காக பல்வேறு முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்தியாவில் சோசலிசம் என்று சொல்லுகிற போது அது பல்வேறு கொள்கையாளர்களை, பல்வேறு மக்களை வெகுவாகப் பாதித்திருக்கிறது.

அது அவர்கள் மீது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதனால்தான் இந்தியாவில் ஜனநாயக சோசலிசம் என்றும், காந்தியச் சோசலிசம் என்று பேசுகிறார்கள். கம்யூனிஸ்டுகள் விஞ்ஞான சோசலிசம் என்று நாம் பேசுகிறோம். இந்தச் சோசலிசம் என்பதே ஒரு பெரும் கருத்துப் போராட்டமாக இந்தியாவில் நடைபெற்று இருக்கிறது.

## அரசியல் சாசனத்தில் சோசலிசம்

அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்தில் constituent assembly இல் இது விவாதிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் அம்பேத்கரை அன்று உறுப்பினர்களாக இருந்த சிலர் "நீங்கள் ஏன் சோசலிசம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை" என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அம்பேத்கர் சொல்லி இருக்கிறார். அரசியல் சட்டத்தில் directive priciples of state policy அரசு கொள்கைகளுக்கான அடிப்படை நெறிகள் என்று வருகிற போது, அதில் நாம் சொல்லியிருப்பது எல்லாம் சோசலிசம்தான்... nothing but socialism தான். இதுதான் அம்பேத்கர் சொன்னது. Directive principles என்று நாம் படித்தால் அதில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.


இந்திய குடிமக்கள் ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் வாழ்வாதார உரிமைகளுக்கான பொறுப்பும் கடமையும் அரசைச் சார்ந்தது. அதேபோல உற்பத்திச் சாதனங்கள் சிலருடைய கைகளில் குவிவது கூடாது. போக்குவரத்து உட்பட உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் அரசினுடைய பொறுப்பில் இருக்க வேண்டும். அப்போதுதான் அரசு மக்கள் நல அரசாக இருக்கும் என்றெல்லாம் அம்பேத்கரால் எழுதப்பட்டிருக்கிறது. அதனால்தான் அம்பேத்கர் சொன்னார். Directive principles என்ற பகுதியில் சொல்லி இருப்பவை எல்லாம் சோசலிசம்தான். எனவே அதனைத் தனியாகச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்.

பின்னாளில் சோசலிசம் என்பது சட்டத்தில் அதன் preamble இல் இணைக்கப்பட்டது. Secularism என்பதும் Preamble இல் இணைக்கப்பட்டது. ஆனால் அம்பேத்கர் காலத்தில் இந்தியா என்பது ஒரு மதம் சார்ந்த நாடாக இருப்பது கூடாது; அது இருக்கவும் முடியாது . எனவே இந்தியா என்பது மதசார்பற்ற ஜனநாயகக் குடியரசாகத்தான் இருக்கும், இருக்க வேண்டும். No place for theocracy. இந்தியா என்பது ஒரு secular நாடாகத்தான் இருக்கும், இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் பேசியிருக்கிறார்.

அப்பொழுதுதான் அம்பேத்கர் சொன்னார். இந்துராஷ்ட்ரா என்று பேசுபவர்கள், அதை நாம் ஒரு கற்பனையாகக் கருதினால், if at all, இதுதான் அம்பேத்கர் பயன்படுத்திய வார்த்தை if at all, it becomes a reality, then, that is the biggest calamity for the nation. நாட்டுக்கு ஏற்படும் பெரும் இடர்ப்பாடு என்பது அதுவாகத்தான் இருக்கும் என்று சொன்னவர் அம்பேத்கர்.

எனவே சோசலிசம் பற்றிய, மக்கள் நல அரசு பற்றிய

# இந்தியப்பாதை



கருத்துப் போராட்டம் இந்தியாவில் மிகக் கூர்மையாக நடைபெற்று இருக்கிறது. இன்றைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இந்தியாவில் சோசலிசம் எப்படி அமையும், அதற்கான பாதை என்ன?

சோசலிசம் ஒரு வழிப்பாதை அன்று

மார்க்ஸ், ஏங்கல்ஸ் காலத்தில் அவர்கள் கருதினார்கள். வளர்ச்சிபெற்ற ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் புரட்சி வெற்றி பெறும் என்று கருதினார்கள். ஆனால் பின்தங்கிய நாடான ரஷ்யாவில்தான் புரட்சி வெற்றி பெற்றது. அதிகாரம் உழைக்கக்கூடிய மக்களுக்கு கிடைத்தது.

நவம்பர் 7 நாம்அதனை கொண்டாடவிருக்கிறோம். முதல் சோசலிஸ்ட் புரட்சி ரஷ்யாவில்தான் நடைபெற்றது. மார்க்ஸ் காலத்தில் முதலாளித்துவம் ஏகபோகமாக வளர்கிறது monopoly capitalism என்ற நிலைக்கு வளர்கிறது என்று மார்க்ஸ் மூலதனத்தில் எழுதினார். ஆனால் லெனின் காலத்தில் இந்த முதலாளித்துவம் ஏகாதிபத்திய கட்டத்தை அடைகிறது. அதுதான் imperialism என்று லெனின் எழுதினார்.

imperialism என்று சொல்லுகிற போது அதில் இருக்கிற நுட்பமான பிரச்சனைகளை லெனினால் ஆராய முடிந்தது. எப்படி மூலதன ஏற்றுமதி நடைபெறுகிறது, எப்படிப் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் ஏற்படுகின்றன, எப்படி மக்கள் கொள்ளையடிக்கப்படுகிறார்கள், மூலதனம் எப்படிச் சுரண்டுகிறது என்று ஏகாதிபத்திய காலகட்டத்தின் கூறுகளை லெனின் விளக்கினார். அதனால்தான் கம்யூனிஸ்டுகள் நாம் பேசும்போது, மார்க்சிசம், லெனினிசம் என்று கூறுகிறோம்.

இந்த மார்க்சிசம் லெனினிசம் ஒரு சர்வாம்சரீதியாக, உலக அளவில் பொதுவாக செயல்படுமா? என்றால், செயல்படும். அது ஒரு அறிவியல் என்ற முறையில், ஒரு அணுகுமுறை என்ற முறையில் செயல்படும். ஆனால் அதே நேரத்தில் அந்தந்த நாட்டு நிலைமைகளுக்கு பொருத்தப்பட்டுதான் மார்க்சியம் லெனினிசம் செயல்பட முடியும்; செயல்பட வேண்டும். இதை மார்க்ஸ் லெனினே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மார்க்சிசம் லெனினிசம் பொதுவான அறிவியல் என்று வருகிற போது நாம் அதை அணுகுமுறையாகப் பயன்படுத்துகிறோம். அது ஒரு கொள்கை சித்தாந்தம் என்ற முறையில் நாட்டின் சமூக வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்பத்தான் அதைச் செயல்படுத்த முடியும். இதைத்தான் நாம் மார்க்சிசம் லெனினிசம் என்ற அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும்.

## மார்க்சிய விஞ்ஞானம்

ஏனென்றால் சில பேர் சொல்லுகிறார்கள்: மார்க்சிசம் ஒரு மின்சாரத்தை போன்றது. மார்க்சிசம் ஒரு விஞ்ஞானம்தான். ஆனால் அது மின்சாரம் போன்ற விஞ்ஞானம் என்றால், விஞ்ஞானம் தொழில்நுட்பம் முதலாளிகள் கைகளில் இருக்கிறது. மார்க்சிசம் ஒரு விஞ்ஞானம் என்றால், அது முதலாளிகளின் தத்துவமா? முதலாளிகளின் விஞ்ஞானமா?

எனவே மார்க்சிசம் லெனினிசம் என்பது ஒரு தத்துவம், ஒரு சித்தாந்தம். இந்தக் கருத்தை நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். அது ஒரு விஞ்ஞானம். இயற்கையை ஆராய்வதற்கு, மானுட சமுதாயத்தை ஆராய்வதற்கு, மானுட சிந்தனைப் போக்குகளை ஆராய்வதற்கு அது ஒரு விஞ்ஞான அணுகுமுறையைக் கொடுக்கிறது. ஒரு methodology ஐக் கொடுக்கிறது. அதிலிருந்து நாம் கற்றுக் கொண்டு, மாற்றுவது எப்படி என்று போராட வேண்டும். மார்க்சிசம் என்பதும் ஒரு சித்தாந்தமாக, ஒரு அரசியல் தத்துவமாக மாறுகிறது. மார்க்சிசத்தை ஒரு அறிவியலாகவும் பார்க்க வேண்டும். அதே நேரத்தில் அரசியல் சித்தாந்தமாகவும் பார்க்க வேண்டும்.

## ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு பாதை

இது ஒவ்வொரு நாட்டுக்கும் உட்பட்டு செயல்படுகிறது. சீனாவில் மாசேதுங் காலத்தில் புரட்சி நடைபெற்றது. தொழிலாளி வர்க்கம்தான் புரட்சியின் முன்னணிப் படை என்று நாம் பொதுவாகப் பேசுகிறோம். ஆனால் மாசேதுங் காலத்தில் சீனாவில் புரட்சி நடைபெற்ற போது, எழுத்தறிவற்ற சாதாரண விவசாயிகள்தான் அணி திரண்டு அங்கே நுழைந்தார்கள். விவசாயிகள் அன்று அந்தப் புரட்சியை நடத்தினார்கள்.

கியூபாவில் பிடெல் காஸ்ட்ரோ தலைமையில் சேகுவாரா உட்பட அவர்கள் எல்லாம் ஒன்றுபட்டு திடீரென்று தாக்குதலை நடத்தினார்கள். மண்கடா மீது. தாக்குதலை நடத்தி அங்கு அரசியல் அதிகாரத்தை கைப்பற்றினார்கள். இது கியூபா நாடு பற்றியது.

வியட்நாம் என்று வருகிற போது பல்வேறு ஏகாதிபத்தியங்கள். Japanese militarism, அதைப்போல French imperialism, American imperialism எல்லாவற்றையும் எதிர்த்து முறியடித்துத்தான் வியட்நாம் வெற்றி பெற்றது. வியட்நாம் வெற்றி பெற்ற பாதை என்பது வியட்நாமுக்கு உரிய ஒரு பாதையாக அமைந்தது. அதேபோல கியூபாவில் கியூபாவுக்கு உரிய பாதையாக இருந்தது.

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு பாதை இருக்கிறது. பொதுவான பாதை என்று பார்த்தால் மார்க்சிசம் லெனினிசம் ஒரு வழிகாட்டும் நெறி. ஒரு அரசியல் தத்துவார்த்த நெறி. ஆனால் அதனைச் செயல்படுத்துகிற களம் என்று வருகிறபோது வேறுபடுகிறது. அந்தக் கள நிலைமைகளுக்கு ஏற்பதான் நாம் புரட்சியை முன்னெடுக்க முடியும். மாற்றத்தையும் முன்னெடுக்க முடியும்.

இதை நாம் லெனின் காலத்தில் பேசும் போது ஒரு நெருக்கடி சமூக வாழ்க்கையில் நெருக்கடி. பொருளாதார நெருக்கடி, அந்தப் பொருளாதார நெருக்கடியை சார்ந்த சமூக நெருக்கடி, அரசியல் நெருக்கடி இப்படி ஒரு சர்வாம்ச நெருக்கடி தோன்றுகிற காலத்தில் புறநிலை சாதகமாக இருக்க முடியும். Objective factor சாதகமாக இருக்க முடியும். Subjective factor என்று ஒன்று இருக்கிறது. அந்த subjective factor தான் அரசியல் ஆயுதம்.

அந்த நெருக்கடிக்குள் இருக்கிற மக்களை வழி நடத்துவதற்கு, தலைமை தாங்குவதற்கு ஒரு கட்சி என்ற அமைப்பு, ஒரு அரசியல் ரீதியான தலைமை இருக்கிறதா? என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். புறநிலை சாதகமாக இருந்தாலும் தலைமை தாங்குகிற அரசியல் கட்சி ஒன்று இல்லையானால், அங்கே புரட்சி நடைபெறாது.

பக்கத்தில் இலங்கையில் என்ன நடைபெற்றது? மக்கள் ஆர்ப்பரித்து எழுந்தார்கள். கோபாவேசத்தோடு வீதிகளுக்கு வந்தார்கள். அணிதிரண்டார்கள். அதிபர் மாளிகையையே கைப்பற்றினார்கள். கடைசியில் என்ன ஆனது? அதனால் தான் பல அறிஞர்கள் எழுதினார்கள். இலங்கையில் ஏற்பட்டிருக்கிற கலவரம் ஒரு புரட்சியாக முடியுமா? Revolt will be ended in revolution? கிளர்ச்சி புரட்சியில் முடியுமா? என்று கேள்விக்குறியைப் போட்டார்கள்.

ஆவேசம் நிறைந்த ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அரசியல் அதிகாரத்தை மாற்றுவதற்கான, வெல்வதற்கான ஒரு அரசியல் தலைமை இல்லாமல் போனது. இது இலங்கையினுடைய அனுபவம். பக்கத்தில் இருக்கிற இலங்கையில் இருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## இந்தியப் பிரச்சினைகள்

இந்தியா என்று வருகிற போது இந்திய நிலைமை என்ன, இந்தியாவினுடைய சமூக வளர்ச்சிநிலை என்ன எப்படி இருக்கிறது, இந்தியாவில் அரசியல் சக்திகளின் செயல்பாடு எப்படி இருக்கிறது? இதனை நாம் சரியாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். இன்றைக்கு இந்தியா என்று சொன்னால் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்ட ஒரு நாடு. கம்யூனிஸ்டுகளுக்குப் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பற்றிக் கூட கேள்விகள் இருந்தன. கடைசியாகப் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டு தேர்தலில் பங்கெடுக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் முடிவு செய்தார்கள். அதிலும் சிலர் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்க முடியாது; இன்றைக்கு இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்றால் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும் என்று பிரிந்து போனவர்களும் இருக்கிறார்கள். இன்றைக்கும் இங்கும் அங்குமாக செயல்படுகிறார்கள்.

பாராளுமன்ற ஜனநாயகத்தில் ஈடுபடுகிற பொழுது அரசியல் கட்சிகளின் அணி சேர்க்கையை நாம் எப்படி புரிந்து கொள்வது? பாராளுமன்ற ஜனநாயகத்தில் மக்களுடைய பிரச்சினைகளை எப்படிக் கையில் எடுப்பது? என்பதைப் பற்றி எல்லாம் நமக்கு ஒரு புரிதல் இருக்க வேண்டும். எனவே இந்தியாவைப் பற்றி நமக்கு ஒரு சரியான புரிதல் இருக்க வேண்டும்

இந்திய நாடு என்று சொன்னால் இந்திய நாட்டின் அடிப்படை பிரச்சனைகள் என்ன? இதைத்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறது. இந்தியாவின் அடிப்படை பிரச்சினைகள் என்றால் வர்க்கம், வர்க்க மோதல், சுரண்டு வர்க்கம், சுரண்டப்படும் வர்க்கம் இவற்றுக்கு இடையே நடைபெறுகிற மோதல். எனவே நீறீணீஉ என்பது ஒரு அடிப்படை பிரச்சினை. அதைப்போல ஜாதி என்பது ஒரு அடிப்படை பிரச்சனை. Caste hierarchy. இது ஒரு அடிப்படை பிரச்சினை. ஜாதியைப் பற்றிச் சொல்லுகிற போது அம்பேத்கர் caste is a monster (அரக்கன்) என்று சொல்லுகிறார்.

ஜாதியைப் பற்றி குறிப்பிடுகிற போது caste is the greatest impediment என்று காரல் மார்க்ஸே எழுதுகிறார்.

ஜாதி என்பது இந்தியாவில் ஒரு அடிப்படை பிரச்சினையாக இருக்கிறது. அதேபோல ஆணாதிக்கம், பெண் அடிமை என்பதும் அடிப்படையான பிரச்சினையாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இதை patriarchy என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறோம்.

**எனவே சமீபத்தில் விஜயவாடாவில் நடைபெற்ற நமது கட்சி காங்கிரசின் அரசியல் தீர்மானமும் தெளிவாக சொல்லுகிறது. மார்க்சிசம், லெனினிசம் இந்திய நிலைமைக்கு ஏற்ப செயல்படுத்தப்பட வேண்டும். இந்திய நிலைமை என்று வருகிற போது, வர்க்க போராட்டம், ஜாதி அமைப்பு, பெண் அடிமை முறைகள் இவற்றை நாம் எப்படி எதிர்கொள்ளவிருக்கிறோம்? எனவே இந்த மூன்று பிரச்சனைகளையும் நாம் அணுக வேண்டி இருக்கிறது.**

கம்யூனிஸ்டுகள் என்ற முறையில் நாம் class exploitation அழிய வேண்டும், caste system என்று வருகிற போது அது ஒழிய வேண்டும். இதை அம்பேத்கர் வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் annihilation of caste. இதை இன்றைக்குக் கம்யூனிஸ்டுகள் நிராகரித்து விட முடியாது. Annihilation of caste. Caste should go. இதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதேபோல patriarchy. பெண் அடிமைத்தனம்.

பெண் விடுதலை, பெண்களுக்கு சமத்துவம் என்பதை பெரியார் அவர்கள் பேசினார்கள் என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. கம்யூனிஸ்டுகள் அந்தப் பிரச்சனையை எப்படித் தொட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை அவர்கள் எடுத்து எப்படி முன்னெடுக்க இருக்கிறார்கள். இவை எல்லாம் இன்றைக்கு கேள்விகளாக இருக்கின்றன.

எனவேதான் நம்முடைய அரசியல் தீர்மானம் மிகத் தெளிவாகச் சொல்லுகிறது. மார்க்சிசம் லெனினிசம் என்ற தத்துவ அணுகுமுறையை, தத்துவத்தை இந்திய மண்ணுக்கு ஏற்ப இந்தியச் சமூக எதார்த்தங்களுக்கு ஏற்ப நாம் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்களைத் திரட்ட முடியும். இன்றைக்கு பொருளாதார ரீதியாக சுரண்டப்படும் மக்கள் திரட்டப்பட வேண்டும். அதைப்போல சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டு கிடக்கிற, சமூகரீதியாக ஒதுக்கப்பட்டு கிடக்கிற மக்களை இன்றைக்குத் திரட்ட வேண்டும். பெண்கள், இன்றைக்கு உரிமை இல்லாமல் தவிக்கிற பெண்களை இன்றைக்கு ஒன்று திரட்ட வேண்டும். இதைச் செய்யாமல் இந்தியாவில் புரட்சி வெற்றி பெற்று விட முடியாது.

புரட்சிகரமான எந்தக் கோட்பாடும் இந்தியாவில் வெற்றி பெறாது. இந்த மூன்று பிரச்சனைகளையும் நாம் எப்படி எதிர்கொள்கிறோம் என்பதை பொறுத்துதான் இந்தியப் புரட்சியே இன்றைக்கு வெற்றி பெறும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அப்படி என்றால் இன்றைக்கு தொழிலாளர்கள், கரத்தாலும் கருத்தாலும் உழைக்கின்ற தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டும். இன்றைக்கு கருத்தால் உழைக்கின்ற தொழிலாளர்கள் என்று சொன்னால் artificial intelligence வந்திருக்கிற காலம், robot வந்திருக்கிற காலம். இந்தக் காலத்தில் தொழிலாளி வர்க்கத்தினுடைய தன்மையே அங்கு மாறுபடுகிறது. அவர்களுடைய உழைப்பு எப்படிச் சுரண்டப்படுகிறது அவர்களுடைய உபரி உழைப்பு, உபரி மதிப்பு ஆகியவற்றை முதலாளித்துவம் எப்படிக் கொள்ளை அடிக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் இது இன்றைக்கு உற்பத்தி உறவுகளில் ஏற்பட்டு இருக்கிற, உற்பத்தி சாதனங்கள் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கிற முக்கியப் பிரச்சினைகள் இவற்றையும் அரசியல் தீர்மானம் சொல்லுகிறது.

இன்றைக்கு உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி artificial intelligence, robot வளர்ந்திருக்கிற காலம். இந்தக் காலத்தில் பொருளாதாரச் சுண்டல் அதனை எதிர்த்து நாம் எப்படி அணிதிரட்ட வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதைப் போல இன்றைக்கு

தொடர்ச்சி 10ம் பக்கம்

9 ம் பக்கத் தொடர்ச்சி

caste. Caste என்று சொல்லுகிற போது இந்தியாவில் whether one likes it or not, there is caste. இதைத்தான் ஜாதிகள் இருக்கிற வரை எந்தவிதமான பொருளாதார சீர்திருத்தமும், அரசியல் சீர்திருத்தமும் இங்கே வெற்றி பெற்று விட முடியாது என்று அம்பேத்கர் சொன்னார்.

எங்கெல்லாம் நீங்கள் போகிறீர்களோ அங்கெல்லாம் monster உங்களை எதிர்கொள்கிறது. அந்த monster ஐ ஒழிக்காமல் உங்களால் முன் நடக்க இயலாது; முன்னேற முடியாது என்று அம்பேத்கர் சொல்லுகிறார். எனவே இன்றைக்கு அம்பேத்கர் சிந்தனைகளைத் தவிர்த்து விட முடியாது, அவற்றை புறம் தள்ளி விட்டு கம்யூனிஸ்டுகள் செயல்பட்டு விட முடியும் என்று நாம் கருதுவது கூடாது.

எனவே தான் இன்றைக்கு மார்க்ஸே சொல்கிறபோது மானுடம் தோற்றுவித்திருக்கிற அற்புதமான சிந்தனைகள் positive thinking நேர்நிலைச் சிந்தனைகள் இதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மார்க்ஸ் சொல்லுகிறார். அதனால்தான் நாம் திருவள்ளுவரை தொடர்ந்து பேசுகிறோம்.

## அடையாள அரசியல் என்னும் பிரச்சினை

எனவே மானுட சரித்திரத்தில் உயர்ந்த சிந்தனைகளை நாம் உள்வாங்கிக் கொண்டு, இன்றைய கால நிலைமைகளில் எப்படி சமூக மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று யோசிக்க வேண்டும். எனவே அந்தச் சூழலில் இன்றைக்கு இந்தியாவில் தலித்துகள் பிரச்சனை, பழங்குடி மக்களின் பிரச்சினை, சிறுபான்மை மக்களின் பிரச்சினை, பெண்களின் பிரச்சனை இவற்றை நாம் கண்டும் காணாமல் செயல்பட்டு விட முடியாது. அந்த பிரச்சினைகளை எடுக்க வேண்டும்.

தலித்துகள், பழங்குடி மக்களைத் திரட்டுகிற போது, இது ஏதோ அடையாள அரசியல் identity politics என்று புரிந்து கொள்வது பெரிய அறிவீனம் என்பதை நாம் உணர வேண்டும்.

Identity politics என்றால் என்ன? Identity politics. தலித்துகளுக்கு என்ன identity? பழங்குடி மக்களுக்கு என்ன identity? மனு சாஸ்திரம் சொல்லுவது போல், பல வகை ஜாதிகள். அந்த நால்வகை ஜாதிகளுக்கு உட்படாமல் ஒதுக்கப்பட்டவர்கள். Outcaste என்று சொல்லப்பட்டவர்கள்தான் தலித்துகள்,

ஆதிவாசிகள். இந்த outcaste என்பவர்களுக்கு என்ன அடையாளம் இருந்தது? அந்த ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடுகிறபோது, அது அடையாள அரசியல் என்று சொல்லப்படுமானால் அதைவிட அறிவீனம் வேறு எதுவும் இருக்க முடியாது.

இன்றைக்கு அடையாளம் என்று வருகிறபொழுது, மனு சாஸ்திர அடிப்படையில் பிராமணர்களுக்கு அடையாளம் இருக்கிறது; சத்திரியர்களுக்கு அடையாளம் இருக்கிறது; வைசியர்களுக்கு அடையாளம் இருக்கிறது; சூத்திரர்களை, அவர்கள் சூத்திரர்களாகச் சொல்லிவிட்டார்கள். அதிலும் அடங்காமல் outcaste ஆக இருப்பவர்கள் தலித்துகள், பழங்குடி மக்கள். எனவே அடையாளம் உள்ளவர்கள், அடையாளங்களை காப்பாற்றிக் கொள்வதற்காக, அடையாளமே இல்லாத, அடக்கி ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களுக்காக போராடுவதை அடையாள அரசியல் என்று சொல்கிறார்கள்.

இந்த அடையாள அரசியல் தமிழ்நாட்டில் புதிதல்ல. யானைக்கு போடுகிற நாமம் U வடிவத்தில் இருக்க வேண்டுமா? Y வடிவத்தில் இருக்க வேண்டுமா? வடகலை தென்கலை என்ற போராட்டம் நடைபெற்ற மண் நம் தமிழ்நாட்டு மண். தமிழ்நாட்டில் நடைபெற்ற U, Y வடிவம் என்பது என்ன? அடையாள அரசியல்.

அதை அடையாள அரசியலாக நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அதை விட்டுவிட்டு தாழ்த்தப்பட்ட மக்கள், ஒதுக்கப்பட்ட மக்கள் அவர்களுக்காக குரல் கொடுப்பதை அடையாள அரசியல் என்று பேசினால் அதுதான் இன்றைக்கு கம்யூனிஸ்ட் விரோத அரசியல் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டும். கம்யூனிஸ்ட் கொள்கைகளுக்கு எதிரான அரசியல் அது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவேதான், இன்றைக்கு இந்தியச் சூழலில் வர்க்கப் போராட்டத்தை கூர்மைப்படுத்த வேண்டும். இந்தியச் சூழலில் annihilation of caste ஜாதி ஒழிப்பை இன்றைக்கு கூர்மைப்படுத்த வேண்டும். இந்தியச் சூழலில் women empowerment பெண் அதிகாரம், பெண்களுக்குச் சுதந்திரம், பெண்களுக்கு சமத்துவம், பெண் உரிமைகளை நிலைநிறுத்துவது என்பதற்கான போராட்டத்தை கூர்மைப்படுத்த வேண்டும். அப்போதுதான் நாம் இந்தியப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியும். கம்யூனிஸ்டுகள் என்ற முறையில் இந்தியாவில் நாம் சோசலிசத்திற்காக போராட முடியும்.

சோசலிசம் என்று சொன்னால் என்ன? எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும். சோசலிசத்தின் உயர்ந்த கட்டம் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் என்று தொடங்கி, எல்லோருக்கும் எல்லாம் என்று சோசலிசத்தின் உச்சக்கட்டம் எல்லோருக்கு எல்லாம் என்று சொல்லுகிற ஒரு நிலைமை எப்பொழுது ஏற்படும்? இதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இன்றைக்கு அடக்கப்பட்ட, அடிமைத்தனத்திற்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்காக போராடுவதை அடையாள அரசியல் என்று சொன்னால், இது அரசியல் கொள்கைகளுக்கு எதிராக வருகிற ஒன்று என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.


அப்படியானால், ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவில் போராடினார். அடிமைத்தனத்திற்கு எதிராக, civil rights க்கு ஆதரவாக போராடினார். ஆபிரகாம் லிங்கன் அடையாள அரசியலை நடத்தினார் என்று தூக்கி எறிய முடியுமா?

இன்றைக்கும் ஜனநாயகம் என்று சொன்னால், ஆபிரகாம் லிங்கன் சொன்னது தான் எல்லோராலும் மேற்கோள் காட்டப்படுகிறது. Democracy is for the people, by the people, of the people. இது ஆபிரகாம் லிங்கன் சொன்னது. எனவே ஆபிரகாம் லிங்கன் அங்கிருக்கிற கறுப்புநிற மக்களுக்கு ஆதரவாக நின்றார்; செயல்பட்டார் என்றால் அவரை அடையாள அரசியல் வாதி என்று அப்புறப்படுத்திவிட முடியுமா?

நெல்சன் மண்டேலா. நிற ஒதுக்கீடு. Apartheid கொள்கைகளுக்கு எதிராக போராடியவர். கறுப்பு இன மக்களின் விடுதலை பெற வேண்டும், அவர்கள் சுதந்திரம் பெற வேண்டும், அவர்கள் சமத்துவ நிலையோடு வாழ வேண்டும் என்று போராடியவர். அவரை இன்று அடையாள அரசியல் என்று விலக்கிக் கொள்ள முடியுமா?

அமெரிக்காவில் black life matters என்று போராட்டம் நடைபெற்றது. கறுப்பு உயிர்களும் உயிர்கள்தான் என்று போராட்டம் நடைபெற்றது. அதை அடையாள அரசியல் என்று உலகம் ஒதுக்கி விட முடியுமா? சர்வதேச சமூகம் அதனைக் கண்டும் காணாமல் இருக்க முடியுமா?

ஈரானில் பெண்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு conservative society. அங்கு பெண்கள் தங்களுக்கு உரிமை வேண்டும், தங்களுக்கும் கல்வி வேண்டும், தங்களுக்கும் சுதந்திரம் வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வளர்த்திருக்கிற கூந்தலையே வெட்டி அதையே ஒரு கொடியாகக் கட்டி உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். பெண் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பெண் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இது அடையாள அரசியல் என்று நாம் விட முடியுமா?



எனவே, இந்தியச் சூழலில் இதனை நாம் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். Post modernism என்று ஒரு காலத்தில் பேசினார்கள். Post modernism. பின் நவீனத்துவம். இப்போது identity politics என்று, அடிப்படை மக்களுக்காக குரல் கொடுப்பதை identity politics என்று பேசுகிறார்கள்.

Identityயே இல்லாத மக்கள் faceless... nameless... human beings.. அவர்களை மனிதர்களாகக் கூட இந்தியச் சமூகம் மதித்தது கிடையாது. அதனால்தான் அவர்களை outcaste என்று சொல்லி அவர்களை ஒதுக்கி விட்டார்கள். அவர்களை human beings ஆக எப்படி நடத்துவது? மானுடர்களாக எப்படி நடத்துவது?

அவர்களும் மானுடர்கள்தான். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்". அங்குதான் திருவள்ளுவர் வருகிறார். எல்லோரும் ஒன்றாகத்தான் பிறக்கிறோம். ஆனால் பிறந்த பின், அவர்கள் எல்லாம் ஒதுக்கப்பட்டவர்கள், அவர்களை எல்லாம் சமூகத்தில் ஒருங்கிணைத்து வாழக்கூடாது என்று சனாதன கொள்கையைப் பேசினால், அந்தச் சனாதனக் கொள்கையை எதிர்க்காமல், அடிமட்டத்தில் இருக்கிற ஏழைகள் சுரண்டப்படுகிற போது, அவர்களுக்காக குரல் கொடுப்பதை அடையாள அரசியல் என்று பேசினால், அதனை நாம் எப்படி புரிந்து கொள்வது?

## சமூக விடுதலை

இதனைத் தமிழ்நாட்டுச் சூழலில் இன்றைக்கு தோழர்கள் அணுக வேண்டும். ஒரு காலத்தில் பௌத்தம் ஒரு பெரும் கொள்கையாக இருந்தது. தமிழ்நாட்டிலேயே இருந்தது. அதேபோல ஜைனம் சமணம் இருந்தது. இன்றைய பௌத்தம் சமணம் தகர்ந்து, மற்றவை எல்லாம் அங்கே எழும்பின.

**இப்போது தமிழ்நாட்டில் வருகிற போது அயோத்திதாச பண்டிதரைச் சொல்லாமல் நாம் என்ன சமூக விடுதலை பேசவிருக்கிறோம். பெரியாரைப் பற்றி பேசாமல் நான் என்ன சமூகவிடுதலை பற்றி பேசவிருக்கிறோம். இதைப்போல கேரளாவில் அய்யங்காளி பற்றி பேசாமல், நாராயண குருவைப் பற்றி பேசாமல் என்ன சமூக விடுதலைப் பற்றி நாம் பேசவிருக்கிறோம்.**

எனவே, இன்றைக்கு இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் மிகுந்த சிந்தனையாளர்கள், மக்களை நேசித்து மக்களுக்காக செயல்பட்ட சிந்தனையாளர்கள் பல இடங்களில் இருக்கிறார்கள் அதைப்போல தமிழ்நாட்டிலும் இருக்கிறார்கள். எனவே இன்றைய சூழலில் கம்யூனிஸ்டுகள் சாதி, வர்க்கம், பெண் அடிமைத்தனம்.. இந்த பிரச்சனைகளை முன்னெடுக்க வேண்டும். அதற்காக மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினைகளை எடுத்து இயக்கங்களை உருவாக்க வேண்டும்.

மக்களுடைய வாழ்வாதார பிரச்சனைகள் என்று வருகிற போது கல்வி education, shelter, employment என்று வருகிற போது housing, food right to food. இதைப்போல இன்றைக்கு right to land இவற்றுக்காக நாம் போராட வேண்டி இருக்கிறது.

பலர் சொன்னார்கள். இன்றைக்கு hunger Intex என்று வந்தால், இந்தியா எங்கே இருக்கிறது? 107வது இடத்தில் இருக்கிறது. நமது அண்டை நாடுகள் பங்களாதேஷ், நேபாள், ஸ்ரீலங்கா இன்னும் சொல்லப்போனால், பாகிஸ்தான் இவற்றுக்கெல்லாம் கீழே இந்தியா இருக்கிறது. கீழே இருக்கிறது.

ஏன் இந்த அளவுக்குப் பசிப்பிணி இந்திய மக்களை வாட்டுகிறது. நாம் ஒரு அட்சயப் பாத்திரத்துக்காக காத்திருக்க முடியாது. ஒரு மணிமேகலைக்காக நாம் காத்திருக்க முடியாது. நாம்.. நாம் மக்களைத் திரட்டிப் போராட வேண்டும். வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேனே என்று வள்ளலார் சொன்னார் என்றால், அவரை வணங்குவோம் போற்றுவோம். இப்படி ஒரு உயர்ந்த சிந்தனையோடு ஒருவர் நம்முடைய மண்ணில் வாழ்ந்திருக்கிறார் என்று நாம் போற்றுவோம். ஆனால் வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்று சொல்லிக்கொண்டு, அவர் முடிந்த அளவுக்கு ஏதோ செய்ய முயன்றார். ஆனால் இன்றைய சூழலில் நாம் என்ன செய்ய வேண்டும் எனவே நம்முடைய சிந்தனையாளர்களுடைய சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு இன்றைய காலகட்டத்தின் இன்றைய வரலாற்று தேவையை புரிந்து கொண்டு போராட வேண்டி இருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இன்றைக்கு இடதுசாரி இயக்கங்கள் எல்லாம் ஒன்றுபட வேண்டும், இந்த ஒற்றுமையின் மூலம் மக்களுடைய வாழ்வாதார பிரச்சனைகளை நாம் முன்னெடுக்க வேண்டும். ஒரு அரசியல் மாற்றத்திற்காக நாம் பாடுபட வேண்டும் என்று சொல்லுகிறோம்.

ஆர்.எஸ்.எஸ்–பி.ஜே.பி. அமைப்பை வைத்துக்கொண்டு, இந்தியாவில் சோசலிசத்தை எப்படி கட்டுவது

ஆர்.எஸ்.எஸ். – பிஜேபியை வைத்துக்கொண்டு. ஆர்.எஸ்.எஸ். ஒரு சனாதன கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாசிஸ்ட் அமைப்பு. மதவெறி பிடித்த ஒரு பாசிஸ்ட் அமைப்பு. அந்த ஆர்.எஸ்.எஸ். ஸினுடைய ஒரு அரசியல் கருவியாகத்தான் பாரதிய ஜனதா கட்சி செயல்படுகிறது. இவர்கள் அதிகாரத்தில் இருக்கிறார்கள்.

இவர்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பார்களே ஆனால் இந்த நாடு சீர்குலைந்து போகும். இந்த நாட்டை ஒரு பன்முகத்தன்மை நாடு என்ற நிலையிலிருந்து ஒரு ஒற்றைப் பரிமாண நாடாக அவர்கள் மாற்ற முடியும். மாற்ற வேண்டுமென்று அவர்கள் முயற்சிக்கிறார்கள். இன்றைக்கு இந்தி என்று பேசுவது அல்லது இந்துராஷ்ட்ரா என்று பேசுவது இதெல்லாம் ஏன் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவில் இந்திய மண்ணில் அடிப்படை தன்மையைக் காப்பாற்றி, அடிமட்டத்தில் இருக்கிற மக்களை ஒன்று திரட்டி, ஒரு அடிப்படை மாற்றத்திற்காக போராட வேண்டிய அவசியம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஒற்றுமையின் மூலம்தான் ஜனநாயக நெறிகளை நாம் காப்பாற்றி, அடுத்த கட்டத்திற்கு முன்னேற முடியும்.

உழைக்கக்கூடிய மக்களின் ஒற்றுமை குலைவதற்கு நாம் அனுமதிப்பது கூடாது. தொழிலாளர்கள் விவசாயிகள் ஒன்றுபட்டு போராடுகிற ஒரு நிலையை நாம் உருவாக்க வேண்டும். அதேபோல இளைஞர்கள், பெண்கள் இவர்கள் எல்லாம் ஒன்றுபட்டு மக்கள் இயக்கத்திற்கு

தொடர்ச்சி 11ம் பக்கம்

10 ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டுவரப்பட வேண்டும். மக்கள் போராட்டத்தின் மூலம்தான் இன்றைக்கு அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்க முடியும்.

இன்றைக்கு இந்தியாவில் பொருளாதார நெருக்கடி இருக்கிறது. ரூபாயினுடைய மதிப்பு வீழ்ச்சியடைந்து இருக்கிறது முன் எப்போதும் இல்லாத அளவுக்கு. பிரிட்டனில் லிஸ்டரால் ராஜினாமா செய்ததற்கான காரணங்களில் ஒன்று. பவுண்டின் மதிப்பு வீழ்ச்சி அடைந்து விட்டது என்பதாகும். ஏனென்றால் அது யூரோப்பியன் யூனியனில் பிரிட்டன் சேரவில்லை. யூரோப்பியன் யூனியனில் ஒரு காமன் கரன்ஸி இருக்கிறது. யூரோ. பிரிட்டனில் அவருடைய பாரம்பரியமான கரன்சி பவுண்டு. இன்றைக்குப் பவுண்டின் மதிப்பு வீழ்ச்சியடைந்து விட்டது. அதனால் அங்கே ஒரு பெரும் பொருளாதார நெருக்கடி. லிஸ்டரால் ஆட்சியை நீட்டிக்க முடியவில்லை. போய்விடுகிறார்.

இந்தியாவில் ரூபாயின் மதிப்பு எங்கே இருக்கிறது. 83 ரூபாய் அல்லது 84 ரூபாய் ஒரு டாலருக்கு சமம் என்று சொல்லுகிறார்கள். பணவீக்கம் அதிகமாகி விட்டது. அதைப்போல வேலையில்லா திண்டாட்டம் முன்பு எப்போதும் கண்டதில்லை. இப்போது தீபாவளிப் பரிசாக பிரதமர் 75,000 வேலைகளை கொடுப்பதாக சொல்லி இருக்கிறார். அவர் ஆட்சிக்கு வந்த போது ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலைகளை நான் உருவாக்குவேன் என்று சொன்னார். இப்போது எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. எங்கே வேலை வாய்ப்புகள்? இப்போது சொல்லுகிறார் 75 ஆயிரம் பேருக்கு அரசுப் பணிகளில் வேலை. நான் சர்டிபிகேட் தரப் போகிறேன் என்று சொல்கிறார்.

மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் demogogue என்று சொல்லுவார்கள். வெறும் வார்த்தை ஜாலங்கள். இதைத்தான் demagogueஎன்று சொல்லுவது. ட்ரம்ப் காலத்தில் பேசினார்கள். ட்ரம்ப் ஒரு demogogue என்று பேசினார்கள் இன்றைக்கு மோடியே ஒரு demogogue இருக்கிறார் எல்லா அரசு நிகழ்வுகள், எல்லா அரசியல் சாசன நிகழ்வுகள் அனைத்தும் மத ரீதியான நிகழ்வுகளாக மாற்றப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு ஒரு de facto status அரசு அங்கீகாரம் கொடுக்கப்படுகிறது. எனவே இந்தியா எங்கே போகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**இப்பொழுது இருக்கிற மாதிரி இந்தியா இருக்குமானால், இந்தியா ஒரு பாசிஸ்டா நாடாக மாறிவிடும். மக்களுடைய உரிமைகள் எல்லாம் பறிபோகும்; பாராளுமன்றம் செத்துமடியும். முதலில் நாம் இவற்றையெல்லாம் காப்பாற்ற வேண்டியதாக இருக்கிறது. அரசியல் சட்டம், ஜனநாயகம், பாராளுமன்ற ஜனநாயகம், மதச்சார்பற்ற ஜனநாயகம் இவற்றையெல்லாம் காப்பாற்ற வேண்டி இருக்கிறது. அதற்கான முறையில் எல்லா விதமான சக்திகளையும் ஒன்றிணைக்க வேண்டும்.**

அடுத்த கட்டமாக நாம் சுரண்டலற்ற ஒரு சமுதாயம், சோசலிஸ்ட் சமுதாயத்தை படைப்பதற்கான அடித்தளத்தை உருவாக்கிக் கொண்டு போக வேண்டும். இந்தியா சோசலிஸ்ட் நாடாக மாறும். வரக்கூடிய காலத்தில் India will become a socialist country. ஆனால் அதற்கு, அதற்காகப் போராடுவதற்கு ஒரு அரசியல் சக்தி இருக்க வேண்டும். இந்த அரசியல் சக்தி என்ற முறையில்தான் இடதுசாரி கட்சிகள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இன்றைக்கு வலுவான கட்சியாக வேண்டும் வலுவான சக்தியாக மாற வேண்டும்.

### பண்பாட்டுத் தளத்தின் பெருங்கடமை

இது அரசியல் களத்தில் நாம் போராடுகிறோம்; ஆனால் கலை இலக்கியப் பண்பாட்டுத் தளத்தில் இன்றைக்கு போராட்டம் நடைபெற வேண்டும். பாரதியாரை பற்றி கூட நாம் பேசியிருக்கிறோம். பேசிக் கொண்டிருக்கிறோம்.

"முப்பது கோடி ஜனங்களுக்கும் பொதுமை" என்று. அது பண்பாட்டுத் தளத்தில் பாரதியாரால் முன் வைக்க முடிந்தது. ஆனால், இன்றைக்குப் பண்பாட்டுத்தளத்தில் நாம் என்ன பேசுகிறோம்? உழைக்கக்கூடிய மக்களுக்காக நாம் என்ன பேசுகிறோம்? உழைக்கக்கூடிய மக்களின் வாழ் நிலையை எப்படி பிரதிபலிக்கிறோம்? நம்முடைய படைப்புகளில், இலக்கியங்களில், கலைப் படைப்புகளில் எப்படி முன் கொண்டுவருகிறோம் இதை கலை இலக்கியப் பண்பாட்டு தளத்தில் நாம் பேச வேண்டும்.

மார்க்சிசம் செல்வதைப் போல், மானுட சிந்தனையைச் செழுமைப்படுத்த வேண்டும். Consciousness. அந்த consciousness ஐ நாம் விரிவுபடுத்த வேண்டும்; வளம்பெறச் செய்ய வேண்டும் என்றால்,பண்பாடு கலை இலக்கிய பண்பாட்டுத் தளத்தில் நாம் செய்கிற பணியை பொறுத்துதான் அது அமையும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இதைத்தான் மார்க்சிடமே கேட்டார்கள். மார்க்சுக்கு பிடித்த எழுத்தாளர் யார்? என்று கேட்டால் சேக்ஸ்பியர் என்று சொன்னார். லெனினுக்கு மிக நெருக்கமாக இருந்த எழுத்தாளர் யார்? மாக்சிம் கார்க்கி. அவர்களுக்கு இடையிலே கூட மோதல் ஏற்பட்டது. ஏனென்றால், லெனின் ஒரு புரட்சியாளர் மாக்சிம் கார்க்கி ஒரு படைப்பாளர். படைப்பாளர்களுக்கு ஒருசில lapses அல்லது limitations இருக்கும். ஆனால் கடைசியில், மாக்சிம் கார்க்கி லெனினொடு சேர்ந்துதான் நின்றார்.

இதை நம் தமிழ்நாட்டிலும் பார்க்க முடியும். "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று நவீன காலத்திலேயே பாடுகிறார்கள். நம்முடைய கலை இலக்கியப் பண்பாட்டுத்தளத்தில், நாம் இன்றைக்கு மானுட நெறிகள், விழுமியங்கள், விழுமிய மானுட நெறிகளுக்காக இன்றைக்குப் படைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். அனைவரும் சேர்ந்துதான் இன்றைக்குச் சமூக மாற்றத்தை கொண்டு வருகிற முயற்சியில் வெற்றி பெற முடியும்.

இந்தியாவில் சோசலிசத்தை கொண்டு வர வேண்டும் என்றால், இந்தியாவில் புரட்சி வெற்றி பெற வேண்டும் என்றால் அடிப்படையான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும். அரசியல் களத்தில் அதனை எதிர்கொள்ள வேண்டும் வர்க்கம் ஜாதி பெண்ணடிமை பிரச்சனைகளை அரசியல் களத்தில் எதிர்கொள்ள வேண்டும். கலை இலக்கியப் பண்பாட்டுத் தளத்தில் அவற்றுக்கான நியாயங்களை முன்வைத்து மானுட சிந்தனையில் ஒரு புரட்சியை உருவாக்க வேண்டும். ஒரு அடக்குமுறையை பார்க்கிற போது, பெண்மணிக்கு ஏற்படுகிற கொடுமைகளைப் பார்க்கிற போது, ஆவேசப்படாத மானுட மனம் என்ன மனம்? ஒரு குழந்தை ஒரு கேவலமான தாக்குதலுக்கு உள்ளாகும் போது, அதைக் கண்டு ஆவேசப்படாமல் கோபப்படாமல் இருக்கிற மனம் என்ன மனம்? இதனை உருவாக்குகிற கடமை கலை இலக்கியவாதிகளுக்கு, பண்பாட்டுத்தளத்தில் இருக்கிறவர்களுக்கு இருக்கிறது.

எனவே, சமூக விடுதலைக்கான போராட்டம் என்பது அனைவரும் இணைந்து முன்கொண்டு செல்ல வேண்டிய போராட்டம். இந்தப் போராட்டம்தான் இந்தியாவில் மார்க்சிசத்தை எப்படி செயல்படுத்துவது? லெனினிசத்தை எப்படிச் செயல்படுத்துவது என்பதில் நம்மை கொண்டு சேர்க்கும். அதிலிருந்து சுரண்டல் இல்லாத, வர்க்கம் இல்லாத ஜாதி இல்லாத பெண் அடிமைத்தனம் இல்லாத ஒரு புதிய சமுதாய அமைப்பை நாம் உருவாக்குவதற்கு வரலாற்று அடித்தளத்தை உருவாக்க முடியும். அந்தப் புதிய சமுதாயம்தான் சோசலிஸ்ட் சமுதாயம் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் சோசலிஸ்ட் சமுதாயம் நிச்சயமாக ஏற்படும். ஏன் பாரதிய ஜனதா கட்சி கூட ஒரு கட்டத்தில் வாஜ்பாய் இருந்த காலத்தில் காந்தியச் சோசலிசம் என்று பேசினார்கள். இப்போது அவர்கள் காந்தியத்தையும் ஏற்பதில்லை சோசலிசத்தையும் ஏற்பதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பாசிஸ்டுகள் எத்தனை விதமான வேடமானாலும் போடுவார்கள். அவர்கள் வேடதாரிகள். மக்களை ஏமாற்றுகிற வேடதாரிகள். மக்களைத் திசை திருப்புகிற வேடதாரிகள். மக்களை மூடர்களாக மாற்றுகிற வேடதாரிகள்.

ஆனால், புரட்சிகர இயக்கத்தில் இருக்கிற நாம் மக்களிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கான ஆற்றல் நம்மிடத்தில் இருக்கிறது. அதை வெளிப்படுத்துவதற்கான இயக்கங்கள் வாய்ப்புகள் இன்றைக்கு உருவாக்கப்பட வேண்டும்.

# சேலம் மாவட்டம் காட்டூர் ஆறு.அழகப்பன் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட முன்னோடியும், மூத்த உறுப்பினருமான தோழர்.ஆறு.அழகப்பன் (78) நவ.03 அன்று அவரது இல்லத்தில் காலமானார் என்ற துயரச் செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சேலம் மாவட்டம், பனைமரத்துப்பட்டி ஒன்றியம், கட்சி குடும்பங்கள் அடர்த்தியாக வாழ்ந்த காட்டூரில் வசிக்கும் விவசாயக் குடும்பத்தில் 1944 ஆம் ஆண்டில் பிறந்த ஆறு.அழகப்பன், தனது இளம் வயதில் விவசாயிகள் சங்கத்தில் சேர்ந்து செயல்பட்டவர். தொடர்ந்து 1964 ஆம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, இறுதி மூச்சு வரை கட்சியில் கொள்கை பிடிப்போடும், உறுதியாகவும் செயல்பட்டவர். 1970 ஆண்டு கட்சி நடத்திய நில மீட்சி போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்றவர்.

இவரது வாழ்விணையர் கமலாவும் கட்சி குடும்பத்தை சேர்ந்தவர். இவர்களுக்கு அ.மோகன், அ.கோவிந்தன் என இரு மகன்களும், பழனியம்மாள் என்ற ஒரு மகளும் இருக்கிறார்கள். இதில் மூத்த மகன் அ.மோகன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்டச் செயலாளர் என்பது குறிப்பிடத் தக்கது. அ.மோகனின் மகன்களுக்கு கம்யூனிசம், லெனினிசம், சோசலிசம் என பெயர் சூட்டி கொள்கை பிடிப்பை வெளிப்படுத்தியவர்.

தோழர்.அழகப்பன் சில மாதங்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றியும், வயது முதிர்வு காரணமாகவும் காலமானார். அவரது மறைவு ஆழ்ந்த வேதனை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரது மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, அஞ்சலி தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், காட்டூர் பகுதி கட்சித் தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

**நேரில் அஞ்சலி**

மறைந்த அழகப்பன் உடலுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் கே.சுப்பராயன், செயற்குழு உறுப்பினர்கள் க.சந்தானம், எம்.ரவி, மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம், மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் எம்.லகுமையா, க.பாரதி, நா.நஞ்சப்பன், எஸ்.தேவராஜ், எஸ்.கலைச்செல்வன், மாவட்டச் செயலாளர்கள் எ.அன்புமணி, ஈசாக், எஸ்.சிவசாமி மற்றும் டாக்டர் அறம், அழகிரிசாமி, எஸ்.சின்னசாமி, திமுக கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாவட்ட துணைச் செயலாளர் கா.சுரேஷ்குமார், ஒன்றிய செயலாளர் உமாசங்கர், சௌந்தர்ராஜன், வெண்ணிலா, சேகர், ஜெ.சங்கர், சி.ராஜேந்திரன், அதிமுக வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் ராஜமுத்து, ஒன்றிய செயலாளர் கே.ஜெகநாதன், காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஏ.பி.பாஸ்கரன், கே.கணேசன், தேமுதிக மாநகர் மாவட்ட செயலாளர் என்.ஆர்.இளங்கோவன், வி.சி.க. காஜா மொய்தீன், பகுஜன் ஜமாத்வாதி சுந்தியூர் பார்த்திபன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மூசா, கனிமொழி, மன்ற உறுப்பினர் கணேசன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

### ஜனசக்திக்கு கட்டுரைகள், செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு...

கட்டுரைகள் மிகச் சுருக்கமாக ஏ 4 சைஸ் பேப்பரில் ஒன்றரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

பெரும்பாலும் தற்போதைய அரசியல், பொருளாதார, சமூக நிகழ்வுகளாக இருக்க வேண்டும்.

மறைந்த தலைவர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் வரலாற்றுக் கட்டுரைகள் ஜனசக்தி பத்திரிகையில் அரை பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

கட்டுரைகள் மற்றும் செய்திகள் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைக்குள் ஜனசக்திக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

செய்திகள் அனுப்புவோர் பெயருக்கு முன்னால் இருக்கும் முன்னெழுத்தை (இனிசியலை) தமிழிலேயே எழுத வேண்டும்.

janasakthieditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு மட்டுமே கட்டுரைகள், செய்திகள் அனுப்ப வேண்டும். வாட்ஸ் அப்பில் அனுப்பக் கூடாது.

– ஆசிரியர் குழு

### 2023ம் ஆண்டிற்கான காலண்டர் மற்றும் சிறப்பிதழ் தயாராகிறது...

காலண்டர் மற்றும் சிறப்பிதழுக்கான விளம்பரங்கள் நவ.25 ஆம் தேதிக்குள் ஜனசக்திக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

காலண்டர் விளம்பரம், விற்பனை தேவை குறித்து 50% முன்பணம் செலுத்தி தேவையான பிரதிகளை நவ.25 ஆம் தேதிக்குள் உறுதி செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டு விளம்பரம் மற்றும் விற்பனை பாக்கி வைத்துள்ள மாவட்டங்கள் பாக்கியை உடனடியாக செலுத்திய பின்பே இந்த ஆண்டிற்கான பிரதிகளுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| காலண்டர் விளம்பரம் | - | ரூ.20,000 |
| காலண்டர் பிரதி விலை | - | ரூ.15.00 |
| சிறப்பிதழ் | - | ரூ.15.00 |

சிறப்பிதழ் விளம்பரத்திற்கான படிவம் அனுப்பி வைக்கப்படும்.

– ஆசிரியர் குழு

# த.ஒ.வா.இ. செங்கல்பட்டு மாவட்ட பேரவை



தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட பேரவை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செங்கல்பட்டு மாவட்ட அலுவலகத்தில் பி.எஸ்.எல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் தலைமை குழு லி.உதையகுமார், ஏஐடியுசி மாவட்ட கன்வீனர் எல்.மேகநாதன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.

இதில் மாவட்ட தலைவராக மு.கர்ணன், செயலாளராக பி.எஸ். எல்லப்பன், பொருளாளராக பி.துரை, துணைத் தலைவர்களாக பிஸ்.ராமலிங்கம், எம்.முருகன், துணை செயலாளராக வி.ஏ.ஏழுமலை ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

### பழங்குடியினர் வீடு கட்ட

# வனப்பகுதியில் மணல் அள்ள அனுமதிக்க வேண்டும்!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை !

ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் பழங்குடியினத்தவருக்கு வீடுகள் கட்ட ஒதுக்கீட்டு உத்திரவுகள் மற்றும் பணி ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டங்களின் கீழ் ஒதுக்கப்படும் தொகையை வைத்து சமவெளியிலேயே அரசு குறிப்பிடும் அமைப்பில் வீடுகள் கட்ட முடியாது என்பது அனைவரும் அறிந்ததே.


இந்நிலையில் மலை மற்றும் வனப்பகுதிகளில் வாழ்வோர் கட்டுமானப் பொருட்களை சமவெளிப்பகுதியில் இருந்துதான் மலைப் பகுதிக்கு கொண்டு செல்ல வேண்டும். இதனால் கட்டுமான செலவு சமவெளிப்பகுதியில் உள்ளதை காட்டிலும் பல மடங்கு உயர்கிறது. பழங்குடியினர் காலங்காலமாக வனப்பகுதிகளில் உள்ள காட்டாறுகள் மற்றும் ஓடைகளிலிருந்து தங்கள் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான மண்ஸ் மணல் கற்கள் போன்றவற்றையும் மூங்கில், மரக்குச்சிகள் ஆகியவற்றையும் எடுத்துப் பயன்படுத்தி வருபவர்கள். இதனால் வனத்திற்கோ,சுற்றுச்சூழலுக்கோ எந்த பாதிப்பும் ஏற்பட்டதும் இல்லை.

பழங்குடியினரின் பாரம்பரியமான இந்த நடவடிக்கைகளை 2006 ஆம் ஆண்டின் வன உரிமைச் சட்டமும் அங்கீகரிக்கிறது.

ஆனால் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் வனத்துறையினர்,பழங்குடியினரின் பாரம்பரியமானமற்றும் சட்டப்படியான இந்த உரிமைகளை சட்டவிரோதமாக மறுக்கிறார்கள். இதைப்போன்றதுதான் மற்ற பழங்குடி கிராமங்களிலும் வீடுகள் கட்ட அனுமதி பெற்ற பழங்குடியினர் வீடுகளைக் கட்ட முடியாமல் தவிக்கும் நிலையுள்ளது. வனத்துறையினரின் இத்தகைய பழங்குடியினர் மற்றும் வன உரிமைச்சட்ட விரோதப் போக்கை கைவிட்டு,பழங்குடியினர் வீடுகள் கட்ட மண்,மணல்,கற்கள் ஆகியவற்றை வனத்திலிருந்து சேகரிப்பதை தடுக்கக்கூடாது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் எஸ்.மோகன்குமார் தெரிவித்துள்ளார்.

# விடுதலைப் போரினில் வீழ்ந்த மலரே



மாரி



மணவாளன்

தோழா ! தோழா !!
வீரர் உமக்கே வணக்கம் வணக்கம்
காரிருள் சூழ்ந்த கரிய வானத்தில்
தாரகை போல ஜொலித்து நிற்கின்றீர்
போரிடும் எமக்குப் புத்துயிர் தாரீர் தோழா !
இந்திய நாட்டின் விடுதலைப் போரில்
எண்ணற்ற வீரரை அர்ப்பணம் செய்தோம்
இதயக் கனவுகள் ஈடேறும் சத்யம் தோழா !
ஆயிரம் ஆயிரம் வீரர்கள் இரத்தம்
குடித்தெழுந்தே நிற்கும் கோரச் சமூகம்
தகர்த்தெறிவோம் ஜனசக்தியினாலே
தோழா !!
– தோழர் மணவாளன்

**நவம்பர்–19 தியாகிகள்**
**மாரி – மணவாளன் நினைவு தினம்**

# டாக்டர் வே.துரைமாணிக்கம் முதலாம் ஆண்டு நினைவு நாளில் சிலை திறப்பு விழா



தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஆம்பலாபட்டு சிவக்கொல்லை தெருவில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த தோழர் வே.துரைமாணிக்கம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் கடைபிடிக்கப்பட்டது. அங்கு வே.துரைமாணிக்கம் சிலை மற்றும் கொடி மரம் அமைக்கப்பட்டு நவ. 2 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் சிலையையும், விவசாயிகள் சங்க பொதுச்செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி கல்வெட்டையும் திறந்து வைத்தனர். விவசாயிகள் சங்க மாநில தலைவர் எஸ்.குணசேகரன் விவசாயிகள் சங்க கொடியை ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் மு.உத்திராபதி, மாவட்ட துணை செயலாளர் கோ.சக்திவேல், ஒன்றிய செயலாளர் வாசு. இளையராஜா, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாவட்ட தலைவர் சி.ராமலிங்கம், ஒன்றிய துணை செயலாளர் மு.ஹோசிமின் மற்றும் தோழமை கட்சியின் தலைவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட குழு உறுப்பினர்கள், ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர், ஆம்பலாபட்டு ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய செயலாளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் மைய செயலாளர் ரா.தர்மராஜ் நன்றி கூறினார்.

# மதுபானக் கடையை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை புறநகர் வாடிப்பட்டி ஒன்றிய குழு சார்பில், மன்னாடிமங்கலம் அந்தோனியார் ஆலயம் முன்பு,

மன்னாடி மங்கலத்தில் பொதுக் கழிப்பறை கட்டித் தர வேண்டும், விபத்து ஏற்பட காரணமாக இருக்கும் இரண்டு மதுபானக்கடையினை அகற்ற வேண்டும், அப்பகுதி சாலையினை சரி செய்து; மின் விளக்குகள் சரி செய்ய வேண்டும், அப்பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும், சமுதாய கூடம் அமைத்து தர வேண்டும், கண்மாயினை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்றிய செயலர் சுதாகர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சியின் கிளை செயலாளர்கள் பரணிதரன், ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

புறநகர் மாவட்ட செயலர் முத்துவேல், மூத்த தோழர் ஏ.எம்.ஜெயக்கொடி, மாவட்டக் குழு உறுப்பினர்கள் சந்தனம், இரவிவர்மா, ஜெயக்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் தவமணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

# தலித் மக்களின் வழிபாட்டு உரிமையை போராடி பாதுகாத்தது சிபிஐ

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், காவல்பட்டி, சித்தரேவு கிராமத்தில் உச்சி மாகாளியம்மன் கோயில் திருவிழா நடைபெற்ற போது, மாவிளக்கு பூஜை செய்ய தலித் மக்கள் சென்றனர். அங்கு தலித் சாதியினரை ஆதிக்க சாதியினர் கோவிலுக்குள் நுழைய விடாமல் தடுத்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய மாவட்டச் செயலாளர் க.சந்தானம் தலைமையில் 7.6.2007 அன்று தலித் மக்கள் சார்பாக நடந்த தொடர் போராட்டத்தின் முடிவில் சமாதான பேச்சுவார்த்தையானது 15.7.2013 அன்று பழனி வட்டாட்சியர் தலைமையில் நடைபெற்றது. ஆனாலும் தலித் மக்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

பின்னர் 25.03.2022 அன்று பழனி வட்டாட்சியர் தலைமையில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அது பலன் அளிக்காததால் தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. சமீபத்தில் 15.4.2022 அன்று பழனியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 11.5.2022 அன்று மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் தலைமையில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

அதனை ஒட்டி அன்று பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் நடைபெற்ற அமைதி பேச்சு வார்த்தையில் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம், மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன் மற்றும் ஏ.எம்.மணி ஆகியோர் கலந்து கொண்டனர். 2.6.22 அன்று மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அறநிலை துறை அமைச்சகத்திடத்தில் தொடர் அழுத்தம் கொடுத்தார்.

வருவாய்த்துறை அதிகாரிகளுடன் தொடர் பேச்சுவார்த்தையில் இறுதி நிலை எட்டப்படாத காரணத்தால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசனையின் படி உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் உயர்நீதிமன்ற மதுரைக் கிளை பட்டியலினத்தவர் மக்களை கோவிலுக்குள் சென்று வழிபடலாம் என்று 28.10.2022 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது. இது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொடர் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும் என்பதனை தோழமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் தெரிவித்துள்ளார்.

### குமரி மாவட்ட

# அரசு மருத்துவமனைகளில் மருந்து தட்டுப்பாடு

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் நாகர்கோவில் மாநகர கூட்டம் மாநகர செயலாளர் ஆர்.இசக்கிமுத்து தலைமையில் நடைபெற்றது. மாநகர பொருளாளர் கே.நாகராஜன் முன்னிலை வகித்தார். பேராசிரியர் சுந்தரம், சிங், மரியதாஸ், சிபிஐ மாவட்ட செயலாளர் தா. சுபாஷ் சந்திர போஸ் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஆசாரிபள்ளம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் குமரி மாவட்டத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் இதர மருந்துகளுக்கான தட்டுப்பாட்டை நீக்க அரசு உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

நாகர்கோவில் டவுண் இரயில் நிலையத்தில் பயணிகளின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற உடனே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் சிபிஐ நகர செயலாளரும் ,ஏஐடியுசி மில் தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் பி.கே. விஜயன் மகள் வி.அஸ்வினி கே.எஸ். ஸ்ரீராம்யஷ்வந்த் திருமணம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், ஏஐடியுசி மாநில தலைவர் கே.சுப்பாராயன் , பொதுச்செயலாளர் டி.எம்.மூர்த்தி, தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, மாவட்ட தலைவர் சமுத்திரம், அமைப்பு செயலாளர் வி.இரவி, தவிதொச வரதராஜன், இளைஞர்மன்ற மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி, மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் , மீனவர்சங்க செல்வம் உள்ளிட்டோர் நேரில் சென்று வாழ்த்தினார்கள். மாநில செயலாளரிடம் ஜனசக்தி வளர்ச்சிநிதியாக ரூ2000 மணமக்கள் சார்பாக வழங்கப்பட்டது.

# ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்க மத்திய சென்னை மாவட்ட மாநாடு




தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மத்திய சென்னை மாவட்ட முதல் மாநாடு அம்பத்தூர் ராமு கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு எம்.சாக்ரடீஸ் தலைமை தாங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் எம்.சுஜாதா வரவேற்பு உரை ஆற்றினார்.

மாநாட்டு கொடியை ஏற்றி வைத்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ்.கண்ணன் துவக்க உரையாற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா.விஜயகுமார், கட்டட சங்க வடசென்னை மாவட்ட செயலாளர் ஏ.அருள் ஆட்டோ சங்க துணை பொதுச் செயலாளர் ரவி, இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் இம்ரான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்டச் செயலாளர் இரா.துரைசாமி வேலை அறிக்கை முன்வைத்து பேசினார். என்.கோபிநாதன் தீர்மானங்களை முன்மொழிந்தார். ஏஐடியூசி மத்திய சென்னை மாவட்ட பொதுச் செயலாளர் மு.சம்பத் புதிய நிர்வாகிகளை வாழ்த்தி மாநாட்டு நிறைவுரையாற்றினார்.

கௌரவத் தலைவராக ஏ.எஸ்.கண்ணன், எக்ஸ் எம்எல்ஏ, தலைவராக வ.சாக்ரடீஸ், செயலாளராக இரா.துரைசாமி, பொருளாளராக வி.சுஜாதா, துணைத் தலைவர்களாக ப.மாரியப்பன், பூபதி, பி. குமார், அடைக்கலசாமி, மாவட்ட துணைச் செயலாளர்களாக வீரன், என்.கோபிநாதன், ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

# சத்ய நாராயணிம்மாள் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



காலம் சென்ற விடுதலைப் போராட்ட வீரர் ஆர்.ராதாகிருஷ்ண மூர்த்தியின் மனைவி திருமதி சத்ய நாராயணியம்மாள் (87) நவ. 08 அன்று, அம்பத்தூர் நியூ செஞ்சுரி காலனியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்ற துயரச்செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமதி சத்யநாராயணம்மாள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த முன்னோடியும், விடுதலைப் போராட்ட வீரருமான ஆர். ராதாகிருஷ்ணமூர்த்தியின் வாழ்விணையர். அவரது கட்சி வாழ்க்கை முழுவதும் சத்ய நாராயணம்மாள் உறுதுணையாக இருந்தார். நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பொறுப்பில் ராதாகிருஷ்ணமூர்த்தி நீண்ட காலம் பணியாற்றிய காலத்தில் பணியாளர்களிடம் பாசத்துடன் பழகியவர். பணியாளர்கள் கூட்டாக உருவாக்கிய நியூ செஞ்சுரி காலனியில் குடும்பத்தோடு வசித்து வந்தவர். சத்ய நாராயணம்மாள் மறைவு பெரும் வேதனை அளிக்கிறது.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

**நேரில் அஞ்சலி**

மறைந்த சத்திய நாராயணிம்மாள் உடலுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் நா.பெரியசாமி எக்ஸ்.எம்.எல்.ஏ., மாநில குழு உறுப்பினர், எஸ்.ஏழுமலை ஆகியோர் மாநிலக் குழு சார்பில் அஞ்சலி செலுத்தினர். தமிழ்நாடு ஏஐடியூசி கட்டிட தொழிலாளர் சங்க மாநில செயலாளர் ஆர். துரைசாமி, சிபிஐ அம்பத்தூர் பகுதி செயலாளர் இரா.விஜயகுமார், என்.கோபிநாதன், சண்முகநாதன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் உமா கண்ணன் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர். ராதா கிருஷ்ணமூர்த்தி குடும்பத்தைச் சேர்ந்த வளர்ப்பு மகள்கள் ரேணுகா, பிரியா, கோபாலகிருஷ்ணன் தாபார் உடன் இருந்தனர்.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மேலாண்மை இயக்குனர் சண்முகம் சரவணன், பொது மேலாளர் ரத்தின சபாபதி, துரைசாமி, கோபிநாதன், மோகன், பாஸ்கர் ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

# தோழர் எம்.எஸ்.கணபதி 40 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி




தஞ்சை தளபதி என்று அனைவராலும் அழைக்கப்பட்ட எம்.எஸ். கணபதி கடந்த 1916 ஆம் ஆண்டு தஞ்சையில் பிறந்தவர்.

அநீதியைக் கண்டு கொதிப்பதும், அடுத்தவர்களுக்கு உதவும் பண்பும் அவரிடம் குடி கொண்டிருந்தது. பள்ளிப்படிப்பை முடித்த பின்பு தந்தையின் முயற்சியில் பொன்மலை ரயில்வே பட்டறையில் வேலைக்கு சேர்ந்தார். பொன்மலை ரயில்வே பட்டறையில் நடைபெற்ற போராட்டங்களில் பங்கு கொண்டார். போராட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் ஆறு மாத கடுங்காவல் தண்டனையை அனுபவித்தார். தஞ்சாவூரில் காந்தியின் அந்நிய துணிகள் புறக்கணிப்பு போராட்டத்தை முன்னின்று நடத்தினார், பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பணியில் முழுமையாக ஈடுபட்டார்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அரசு வழங்க முன்வந்த பென்ஷன் தொகையை ஏற்க மறுத்து, தியாகிகளுக்கான சிறப்பு பட்டயத்தை மட்டுமே பெற்றுக் கொண்டார்.

தஞ்சை மாவட்ட கட்சி அலுவலகத்தில் பணியாற்றிய போது உடல் நலம் பாதிக்கப்பட்டு, தனது 67 வது வயதில் காலமானார். இவரின் நாற்பதாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி தஞ்சாவூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி முன்னிலை வகித்தார். நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் ஜி.கிருஷ்ணன், ஆர்.பிரபாகரன், ஏஐடியுசி மாநில செயலாளர் சி.சந்திரகுமார், மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம், மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன், வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் க.அன்பழகன், போக்குவரத்து சம்மேளன துணை தலைவர் துரை.மதிவாணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக கணபதி திருஉருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# இந்தி திணிப்புக்கு எதிராக ஏ.ஐ.ஒய்.எப் ஆர்ப்பாட்டம்




மத்திய அரசு ஐ.ஐ.எம், ஐ.ஐ.டி, எய்ம்ஸ் மற்றும் மத்திய கல்வி நிறுவனங்களில் இந்தி மொழி கட்டாயமாக்கப்படும் என்ற அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும், ஒரே தேர்வு, ஒரே நாடு, ஒரே உணவு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே தேர்தல் என அறிவித்து இந்தியாவின் பன்முக தன்மையை சிதைக்கும் மத்திய அரசின் சர்வதிகார போக்கை கண்டித்தும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சேலம் கொண்டலாம்பட்டி மண்டலக்குழு சார்பில், தாதகாப்பட்டி கேட் மைதானத்தில் காவல் துறை அனுமதி மறுப்பையும் மீறி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மண்டல செயலாளர் எல்.சுரேஷ் மண்டலத்தலைவர் ஜி.எம்.தினேஷ் தலைமை தாங்கினர். மாநிலசெயலாளர் க.பாரதி, மாவட்டசெயலாளர் இரா.ரமேஷ், மாவட்டத் துணைத்தலைவர் க.பாலன், மாவட்டநிர்வாகக்குழு உறுப்பினர் கோ.செங்கொடி ஆகியோர் கண்டனவுரையாற்றினர்.

மாவட்டக்குழு உறுப்பினர் ஜி.பார்த்திபன் நன்றியுரையாற்றினார். இதில் 80க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

# மதுராந்தகத்தில் வீடுகள் அகற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, சவரம்பாக்கம் ஊராட்சி, சிதாமூர் கூட்டுரோட்டில் குளக்கரையில் சுமார் 50ஆண்டுகளாக வசித்துவந்த பொதுமக்களை நிர் நிலை ஆக்கிரமிப்பு என்று கூறிநவ.08 அன்று பொக்லைன் இயந்திரத்தை கொண்டு எவ்வித முன் அறிவிப்பும் இன்றி வீடுகளை இடிக்க முற்பட்டனர். இதைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ் தலைமையில் அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர். பின்பு மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளித்தனர். இந்த நிகழ்வில் விதொச மாவட்ட செயலாளர் பி.எஸ்.எல்லப்பன், சிபிஎம் விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் வாசுதேவன், வட்ட செயலாளர் ராஜா, ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் மாவட்ட துணை தலைவர் பிஎஸ். ராமலிங்கம் மற்றும் வர்த்தக சங்க தலைவர்கள் பங்கேற்றனர்.

# மயிலாடுதுறையில் உர தட்டுப்பாட்டை போக்குக!

மயிலாடுதுறை மாவட்டத்தில் 1 லட்சத்து 90 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் நடவு பணிகள் முடிந்து இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் உரத் தட்டுப்பாடு காரணமாக, வயல்களில் பயிர்கள் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பயிர்களுக்கு வளர்ச்சியை கொடுக்கக்கூடிய நைட்ரஜன் சத்து நிரம்பிய யூரியா மற்றும் மணிச்சத்தை வழங்கும் பொட்டாஷ், கூட்டு உரம், டி.ஏ.பி. உரங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு மூட்டை பொட்டாஷ் உரம் 1700 ரூபாய் என்று அரசாங்கம் விலை நிர்ணயம் செய்துள்ள நிலையில் ஒருசில தனியார் கடைகளில் மட்டும் 1900 ரூபாய் வரை பொட்டாஷ் உரம் விற்பனை செய்யப்படுகிறது. பொட்டாஷ் உரம் மற்றும் 500 ரூபாய்க்கு பயிர் ஊட்டச்சத்து வாங்கினால் மட்டுமே 300 ரூபாய் பெறுமானமுள்ள யூரியா வழங்கப்படுகிறது. ஒரு மூட்டை பொட்டாஷ் ஒரு மூட்டை யூரியா மட்டும் வழங்குவதால் விவசாயிகள் கூடுதல் செலவு ஏற்படுகிறது என்று வேதனை தெரிவித்துள்ளனர். மேலும், ஒரே இடத்தில் மூன்று உரங்களும் கிடைக்கவில்லை என்றும், ஒவ்வொரு இடத்திலும் இடுபொருட்கள் வாங்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம் என்றும் விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

தமிழக அரசு உரத் தட்டுப்பாட்டை போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 95. மனமுவந்து செய்

**இட்டமுடன் ஏதும் இயற்றுவமேல் திட்டமிட்ட தட்டுப்பாடின்றி தரும்.**

செய்யும் செயலில் விருப்பத்துடன் ஈடுபட்டால், நாம் திட்டமிடுகிறபடி செயல் நன்கு நிறைவேறும் எந்தத் தடையும் வராது.

**முயற்சியில் மூழ்கு முடிந்த வரையில் பெயர்ச்சியிலா இன்பந் தரும்.**

முயற்சியில், உன்னை மறந்து ஈடுபட்டால், அது பெற்றிபெறும். ஆகையால் ஈடுஇணையற்ற அழியா இன்பத்தை இது உண்டாக்கும்.

# நூல் நயம்

## பாளையங்கோட்டை ஊர் வரலாறு




தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊருக்கும் பல பெருமைகளும்,வரலாற்று பின்னணிகளும் உண்டு.பழமை வாய்ந்த பாளையங்கோட்டையின் வரலாற்றை கல்வெட்டு சான்றுகள், கோட்டையில் இருந்த தடயங்கள் போன்றவற்றில் ஆய்வு செய்து இந்நூலினை பேராசிரியர் தொ. பரமசிவன், ச.நவநீதகிருஷ்ணன் ஆகியோர் எழுதி உள்ளனர்.

பாளையங்கோட்டை ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்த ஒரு கோட்டை நகரம். இந்நகரில் உள்ள பழமையான கோவில்கள் கோபாலசாமி என்னும் கோபாலன் கோவிலும்,திரிபுரத்தீஸ்வரர் என்னும் சிவன் கோவிலும் ஆகும். இந்த கோவில் இப்பொழுது அழகிய மன்னார் ராஜகோபாலசாமி கோவில் என வழங்கப்படுகிறது. இக்கோவிலில் கண்டெடுக்கப்பட்ட 41 கல்வெட்டுகளே இவ் ஊரின் பழமையை அறிய நமக்கு கிடைக்கும் சான்றுகள் ஆகும். இவற்றில் குறிப்பிட்டு சொல்லத் தக்கன முதலாம் இராசராசன் காலத்தை சார்ந்த கல்வெட்டுக்களாகும். இக்கோவிலில் முதலாம் இராசராசன் தமிழ் கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது. எனவே இக்கோவில் பத்தாம் நூற்றாண்டில் பெரிய கோவிலாக திகழ்ந்துள்ளது. கோவிலின் அனைத்து கல்வெட்டுகளிலும் ஊரின் பெயர் 'கீழ்களக் கூற்றத்து ஸ்ரீ வல்லவ மங்கலம்' என்றே காணப்படுகிறது. இதுவே பாளையங்கோட்டை நகரத்தின் பழைய பெயராகும்.


தாமிரபரணி நதியின் பழைய பெயர் 'தண்பொருந்தப் பேராறு' என்பதாகும். இப்படி பழம் பெருமை வாய்ந்த ஊரே பாளையங்கோட்டை. பாளையங்கோட்டை என இன்று அழைக்கப்படும் பகுதியில் ஒரு கோட்டை இருந்தது. இந்த கோட்டையின் சுவடுகளாக இன்று கிழக்கு வாசல் கொத்தளமும், மேள வாசல் கொத்தளமும், தென்மேற்கு மூலையில் அமைந்திருந்த கொத்தளமும் எஞ்சியுள்ளன. இந்தியாவில் பிற்காலத்தில் ஏற்பட்ட வெள்ளையர் ஆட்சி காலத்தில் இந்நகரம் கல்வியில் சிறந்த நகரமாக விளங்கியது. நெல்லை மாவட்டத்தில் 163 பள்ளிகளை தொடங்கியவர் இரேனியஸ் ஆவார். இவர் திருச்சபைக்குள் சாதி வேற்றுமைகளை கடுமையாக எதிர்த்தவர். ஆசிரியர் பயிற்சி பள்ளியில் வேளாளர்கள் சாதி வேற்றுமை பாராட்டிய போது பள்ளிக்கூடத்தை இழுத்து மூடி விடுவேன் என எச்சரித்து அப்படியே மூடியவர். சாதி வேறுபாடுகளை கண்டித்து 'சீர்தூக்கல்' என்ற சிறு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார். 1832ல் அவர் எழுதி அச்சுட்டு வெளியிட்ட 'பூமி சாஸ்திரம் 'என்ற நூலே அறிவியல் தமிழ் முதல் நூலாகும். இவர் தமிழ் கலைச் சொற்களையும் உருவாக்கியுள்ளார்.

இந்நகரத்தின் கல்விப் பெருமைகளில் குறிப்பிடத்தக்கது கண் தெரியாதவர்களுக்கும், காது கேளாதவர்களுக்கும் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்னரே, கல்வி வாய்ப்பு அளிக்க முன் வந்ததாகும். இது போன்ற பல பெருமைகளைப் பெற்ற பாளையங்கோட்டை நகரத்தைப் பற்றி அறிய இந் நூலை அனைவரும் அவசியம் வாங்கி படிக்க வேண்டும்.

– சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | தொ. பரமசிவன், ச.நவநீதகிருஷ்ணன் |
| பக்கம் | : | 48 விலை: 50 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 50 |

## பண்பாட்டின் வாழ்வியல்




பழங்கால தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த சடங்குகள், வழிபாடு,திருவிழாக்கள், உணவு,விளையாட்டு, வீடு போன்றவற்றைப் பற்றிய சமூக ஆய்வுகளின் அடிப்படையிலான பல தகவல்களையும் தரவுகளையும் கொண்டது தொ. பரமசிவன் எழுதிய ' பண்பாட்டின் வாழ்வியல்' என்னும் இந்நூல். இது பல புதிய ஜன்னல்களை தமிழ் சமூகத்தில் திறந்து வைத்துள்ளது. மஞ்சள் பூசி குளிப்பதும், மஞ்சள் கயிறு அணிவதும் பெண்ணுக்குரிய முக்கியமான சடங்குகளாகும். மஞ்சள் என்பது பெண்ணோடும் 'மங்களகரம்' என்பதோடும் இணைத்து பேசப்படுகிறது. ஆனால் மஞ்சள் ஆரோக்கியம் தொடர்பான ஒரு பொருளாகவே தமிழர் வாழ்வில் முன்பு இருந்துள்ளது. கிருமி எதிர்ப்பு சக்தி மஞ்சளில் உள்ளதாக கூறப்படுகிறது. 'நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்' கண்ணனை நீராட்டுவது பற்றி பெரியாழ்வார் பாசுரம் பேசுகிறது.

திருமண சடங்குகளை பற்றி கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாடிய ஆண்டாளின் பாடல்களில் தாலி பற்றிய பேச்சே இல்லை. மாறாக, தான் கொன்ற புலியின் பல்லை வீரத்தின் சின்னமாக ஆண் தன் கழுத்தில் கோர்த்து கட்டிக் கொண்டதால் அதை புலிப்பல் தாலி என்று குறிப்பிட்டுள்ளனர். புலிப்பல் கோத்த புலம்பு மணி தாலி (அகநானூறு). புலிப்பல் தாலி புன்தலைச் சிறார் (புறநானூறு). இரும்புலி ஏற்றுத் தாலி இடையிடை மனவுகோத்து (திருத்தொண்டர் புராணம் ). நந்தனின் சேரி குழந்தைகள் அரைஞான் கயிற்றில் இரும்பு மணி கட்டியிருந்த தான குறிப்பு பெரிய புராணத்தில் உள்ளது. எனவே, தாலி எனும் சொல் கழுத்து தாலியை தொடக்க காலத்தில் குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது. சங்க இலக்கியங்களில் தாலி மட்டுமல்ல பெண்ணுக்குரிய மங்களப் பொருள்களாக இன்று கருதப்படும் மஞ்சள், குங்குமம் ஆகியவையும் கூட பேசப்படவில்லை.

மகப்பேற்றின் போது வயிற்று சுமை தாங்காமல் இறந்த பெண்களின் நினைவாகவே சுமை தாங்கி கற்கள் நடப்பட்டுள்ளன. மலர்களுக்கும், மனிதர்களுக்கும் உள்ள உறவு பிரிக்க முடியாது. அதுவும் தமிழ்நாட்டைப் போன்ற வெப்ப மண்டல பகுதிகளில் பயிர் உலகத்துடன் ஆன இந்த உறவு விரிவானதாகவும் ஆழமானதாகவும் அமைந்து விடுகிறது. மணமாலை, நீர்மாலை, பிணமாலை ஆகியும் தமிழர் வாழ்வில் இடம் பெற்றுள்ள மாலைகள் ஆகும். பெண்களைப் பூவாக கருதுவதும், பெண்ணின் உடல் வளர்ச்சியை 'பூப்பு 'என்ற சொல்லால் குறிப்பிடுவதும், பெண் தெய்வங்களுக்கு பூச்சொரிதல் என்ற விழா நடத்துவது தமிழர் பண்பாட்டின் மற்றொரு கூறு ஆகும். தமிழர்களின் பல்வேறு பண்பாட்டு விழுமியங்களை இந்நூல் பேசுகிறது. இந் நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். – இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | தொ. பரமசிவம் |
| பக்கம் | : | 190 விலை: 215 |
| வெளியீடு | : | நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை – 50 |

சுழலும் உலகம்

# கியூபா மீதான அமெரிக்காவின் தடைகள்: ஐ.நா. பொதுச் சபை கண்டனம்

கியூபா மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதார தடைகளைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. ஐ.நா பொதுச் சபையில் இது போன்ற தீர்மானம் தொடர்ச்சியாக 30வது ஆண்டும் பெருவாரியான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது ஆகும். நவ.3 அன்று நடைபெற்ற வாக்கெடுப்பில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மட்டுமே இந்தத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன. உக்ரைன் மற்றும் பிரேசில் ஆகிய இரு நாடுகளும் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. தீர்மானத்திற்கு ஆதரவாக 185 வாக்குகள் பதிவாகியுள்ளது.

ஐ.நா பொதுச் சபையில் பெருவாரியான ஆதரவுடன் இந்தத் தீர்மானம் நிறைவேறியிருப்பது அமெரிக்க தடைகளுக்கு எதிரான கியூபாவின் போராட்டத்திற்குக் கிடைத்துள்ள புதிய வெற்றி ஆகும்.

2019 ஆம் ஆண்டிலிருந்து, எமது நாட்டின் மீதான முற்றுகையை அமெரிக்கா தீவிரப்படுத்தி வருகிறது; கியூபா மக்களுக்கு மாபெரும் இழப்பு மற்றும் சேதங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் மனிதத்தன்மையற்ற, கொடூரமான பரிமாணங்களில் அமெரிக்கா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்று கியூபாவின் அயலுறவுத்துறை அமைச்சர் புரூனோ ரோட்ரிகுஸ் கூறியுள்ளார்.

கியூபாவுடனான விமானப் போக்குவரத்து, பணப் பரிவர்த்தனை, தூதரக சேவைகள் போன்றவற்றில் ஜோ பிடன் நிர்வாகம் ஓரளவிற்கு மேம்பட்ட அணுகுமுறையை மேற்கொண்ட போதும், பொருளாதார தடைகள் மேலும் தீவிரமாக்கப்பட்டு வருவதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். தீவிரமடைந்து வரும் பொருளாதார தடைகள் தான் அமெரிக்கா – கியூபா நட்புறவுக் கொள்கையின் முக்கிய அம்சமாக உள்ளது.

ஜோ பிடன் ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து பொருளாதார தடைகள் காரணமாக, 6.35 பில்லியன் டாலர் [ 1 பில்லியன் – 100 கோடி ] மதிப்பிலான மாபெரும் இழப்பை கியூபா எதிர்கொண்டது என்று புரூனோ கூறியுள்ளார். மேலும், கியூபாவிற்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்ள பெரும் தொழில்நுட்ப மற்றும் ஊடக நிறுவனங்களை அமெரிக்கா பயன்படுத்துகிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கியூபாவில் புரட்சியின் மூலமாக, அமெரிக்க ஆதரவு பாடிஸ்டா ஆட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு, அங்கிருந்த அமெரிக்கர்களின் சொத்துக்களைத் தேசியமயமாக்கிய பிறகு 1960 ஆம் ஆண்டில் கியூபா மீது அமெரிக்கா தடைகளை விதித்தது.

பல தசாப்தங்களாகத் தொடரும் பொருளாதார தடைகளை நியாயப்படுத்த மனித உரிமைகள் எனும் ஆயுதத்தை டிரம்ப் மற்றும் பிடன் நிர்வாகமும் முன்னிறுத்துவது அடிப்படையற்றது என்று ஐ.நா. சபைக்கான கியூபாவின் துணை தூதர் யூரி கலா கருத்து தெரிவித்துள்ளார். மேலும், கியூப மக்களின் நல்வாழ்வு, மனித உரிமைகள் மற்றும் சுயநிர்ணய உரிமை குறித்து அமெரிக்க அரசாங்கம் அக்கறை கொண்டிருப்பது உண்மையானால், கியூபா மீதான தடைகளை நீக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையிலான இடைப்பட்ட காலத்தில் கியூபாவிற்கு ஏற்பட்டிருக்கும் இழப்பின் மதிப்பு 3,806.5 மில்லியன் டாலர் [ 1 மில்லியன் –10 இலட்சம் ] ஆகும். இந்த இழப்பின் மதிப்பு 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலத்தில் ஏற்பட்ட இழப்பைக் காட்டிலும் 49% அதிகம் ஆகும்.

தற்போதைய நிலவரப்படி, கடந்த அறுபது ஆண்டுகளாக, பொருளாதார தடைகள் மூலமாக ஏற்பட்டிருக்கும் ஒட்டுமொத்த இழப்பின் மதிப்பு சுமார் 1,50,410.8 மில்லியன் டாலர் ஆகும்.

ஜோ பிடன் நிர்வாகப் பொறுப்பேற்றதில் இருந்து முதல் 14 மாதங்களில் மட்டும், தடைகளால் கியூபாவிற்கு ஏற்பட்ட இழப்புகள் மதிப்பு 6,364 மில்லியன் டாலர் ஆகும்.

இந்தப் பின்னணியில், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாமல் தொடர்ந்து போராடி வரும் சோஷலிச நாடான கியூபாவிற்கு ஆதரவாக ஐ.நா. பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒரு முக்கியமான வெற்றியாகவே கருதப்படுகிறது.

– அருண் அசோகன்

16 ம் பக்கத் தொடர்ச்சி

கே.ஆர்.சுப்பிரமணியன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் என்.எஸ். பெருமாள் மாநாட்டினைத் துவக்கி வைத்துப் பேசினார். ஏஐடியுசி மாநில செயலாளர் நா.பெரியசாமி பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

விவசாய சங்க மாவட்ட தலைவர் கே.ஜீவா செயலாளர், ஆர். கருணாநிதி, முன்னாள் மாவட்ட செயலாளர் எஸ்.முருகபூபதி, மேனாள் பரமக்குடி நகர் மன்றத் தலைவர் ராசி என்.போஸ், கமுதி குருசாமி உள்ளிட்ட தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் என்.கே. ராஜன் நடைபெற்ற இயக்க ஸ்தாபன அறிக்கை குறித்துப் பேசினார்.

புதிய நிர்வாகக் குழு தேர்வு செய்யப்பட்டது. ஏஐடியுசி மாவட்ட தலைவராக எஸ்.பி.ராதா, பொதுச் செயலாளராக என்.கே.ராஜன், துணைத் தலைவர்களாக என்.எஸ்.பெருமாள், ஜி.லோகநாதன், செயலாளராக ஆர்.தர்மராஜன், பரப்புரை செயலாளராக செ.செல்வராஜ், அலுவலக செயலாளராக பி.சண்முகராஜன், பொருளாளராக கே.ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில், மீன் பிடித் தொழிலை நம்பியுள்ள குடும்பங்களை பெரிதும் பாதிக்கின்ற கடலில் காற்றாலையை அமைக்கின்ற திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும்.

எமனேஸ்வரம் பகுதியில் ஜீவாநகரில் இருக்கும் ராம்கோ கடை எண் 5 தமிழக அரசின் பொது விநியோகத் திட்டத்தின் வழிகாட்டுதலுக்கு விரோதமாக 1730 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இதனை மாவட்ட ஆட்சியர் நிர்வாகம் உடனடியாக கவனத்தில் கொண்டு மூன்று ரேஷன் கடைகளாக பிரித்து தர வேண்டும்.

எமனேஸ்வரம் தரைப்பாலம் வழியாக தினந்தோறும் ஆயிரக்கணக்கானோர் சென்று கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. எனவே தமிழக அரசு பரமக்குடி வைகை ஆற்றின் கிழக்குப் பகுதியில் மேம்பாலம் ஒன்றினை அமைத்து தர வேண்டும்.

பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட கழிவுநீர் வாய்க்கால்கள் சேறு சகதிகளால் குப்பைகள் முழுவதுமாக நிரம்பிய நிலையில் கழிவு நீர் வழிந்தோடி சாலைக்குள் சென்று கொண்டிருக்கிறது. குறிப்பாக ஜீவா நகர் பகுதியில் தொடக்கப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களின் சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது.

எனவே அந்தப் பகுதியில் உள்ள இந்த மாறுகால் (ரேனீஸ்) உடனடியாக சரி செய்து விட வேண்டும் .

ராமநாதபுரம் நகராட்சியில் முறையாக வீட்டு வரி, குடிநீர் இணைப்பு வரி என எல்லாம் செலுத்திய பின்னரும் மேலும் கணக்கில் வராத தொகையாக லஞ்சத் தொகையையும் செலுத்த வேண்டுமென நிர்பந்திக்கும் வரி வசூலிப்பார்கள் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருவள்ளூர்:** திருவள்ளூர் மாவட்ட ஏஐடியூசி 8வது மாவட்ட மாநாடு நவ.06 அன்று செங்குன்றம் வட்டார பளுதூக்குவோர் சங்கம் அருகிலிருந்து செம்படை பேரணி புறப்பட்டது. செங்குன்றம் சமூக நலக்கூடம் ஏ.எம்.கோபு நினைவரங்கத்தில் எம்.ஆனந்தன் மாநாட்டு கொடியை ஏற்றி வைத்தார். தலைமைக் குழுவாக கே.கஜேந்திரன், சி.மாரி, சி.குருமூர்த்தி, ஜி.பாலன் ஆகியோர் செயல்பட்டனர்.

இ.பாஸ்கரன் வரவேற்புரையாற்றினார். அஞ்சலி தீர்மானத்தை எம்.ஜானகிராமன் வாசித்தார். மாநாட்டை ஏ.எஸ்.கண்ணன் துவக்கி வைத்தார். செயலாளர் அறிக்கையை பொதுச் செயலாளர் எஸ்.மயில்வாகணன் வாசித்தார். நிறைவுரையாக மாநில செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் புதிய நிர்வாகிகளை அறிவித்து உரையாற்றினார்.

பொதுச் செயலாளராக எஸ்.மயில்வாகணன், துணைத்தலைவராக எம்.அம்பலவாணன், வி. அம்பரோஸ், செயலாளராக ஜெ.அருள், சி.மாரி, வி.சரவணன், எம்.ஜானகிராமன், சி.குருமூர்த்தி பொருளாளராக எல்.பாலகிருஷ்ணராவ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சி.மாரி நன்றி கூறினார்.



ஒடியன் லட்சுமணன்



# காந்தாரத்தை முன்வைத்து

கோரகர் என்றால் துளு மொழியில் சூரியன் என்று பொருள். கொரகர் பழங்குடிகள் தென்கர்நாடகாவின் உடுப்பி குண்டபூர், மங்களூர், சுளுயா, பெத்தலங்காடி ஆகிய இடங்களில் செரிவாகவும், காசர்கோடு, வடகன்னடா, குடகு, சிமோகா ஆகிய பகுதிகளிலும் கணிசமாகவும் வழ்கிறார்கள்.

கொரகர் பழங்குடிகள் மாயமந்திரங்களில் கைதேர்ந்தவர்கள். அதற்காக சிறப்பு வழிபாடுகளை நடத்துபவர்கள். அதில் பூதவழிபாடு மிகவும் முக்கியமானது அவற்றுள், பஞ்சுருளி கல்லுருட்டி ,குலிகா, கொரத்தி ஆகியவை முதன்மையானவை. முக்கியமானவை

கொரகர்கள் கூடைமுடைதல் வேட்டையாடுதல் ஆகிய பணிகளோடு துப்புரவுப்பணியையும் செய்கிறார்கள். சாதி இந்துக்களால் தீண்டத்தகாதவர்களாக நடத்தப்படுகிற ஒரு பழங்குடி சமூகம் கோரகர்கள்.

மாட்டின் மாமிசமும், பன்றியின் மாமிசமும் அவர்களுக்கு பிடித்தமான உணவுகள். குறிப்பிட்ட காலத்துக்கு பின்புதான் அவர்கள் மாட்டு மாமிசத்தை உண்ணத்தொடங்குகிறார்கள். துப்புரவு பணி அவர்கள்மேல் கட்டாயமாக பணிக்கப்பட்ட ஒன்று.

கோரகர்களின் ஊர் தலைவனின் பெயர் குன்னிகாரன். குன்னிக்காரன் கட்டளையிடாமல் எந்த சடங்கும் நடக்காது. கோரகர்கள் மரங்களையும். குறிப்பிட்ட செடிகளையும், முன்னோர்களின் ஆவிகளையும் வணங்குகிறார்கள்.

கம்பலா திருவிழாவுக்கு முன்பு அவர்களை எருமைகளைப் போல ஓட வைக்கிற வழக்கம் சமீபகாலம் வரை இருந்துவந்தது. அதற்கு முன்பு சுமைகளை சுமந்துகொண்டு கம்பாலாவில் சேற்று வயலுக்குள் ஓடும் வழக்கம் இருந்தாக ஒரு செய்தி இருக்கிறது.

இவை மட்டுமல்ல அவர்களை இழிவாக கருதி பழிப்பது, முடி, நகங்கள் அல்லது வேறு ஏதேனும் சாப்பிட முடியாத அல்லது அருவருப்பான பொருட்களை உணவில் கலந்து, அந்த உணவை உண்ணச் சொல்லி கட்டாயப்படுத்துவது ஆகிய கொடூரங்கள் 2000 ஆம் ஆண்டுவரை துளுநாட்டில் நடைமுறையில் இருந்தது.

இதற்கென்று பிரத்யோகமாக PROHIBITION OF AJALU PRACTICE ACT, 2000 என்ற சட்டம் வந்த பின்தான் இவையெல்லாம் ஒரு கட்டுக்குள் வந்தது. ஜூன் 17, 2017 தென் கர்நாடகாவில் உள்ள கண்டமக்கியில் கொரகர் பழங்குடியின் திருமணம் ஒன்று நடந்தது. திருமணத்தில் மாட்டுக்கறி விருந்து வைப்பது கொரகரின் வழக்கம். மாட்டுக்கறி விருந்துவைக்ககூடாது என்று பண்ட் சமூகத்தினர் கோரகரின் திருமணத்தில் புகுந்து பந்தலை அடித்து வீட்டரை உதைத்து கலவரக்காடாக்கினார்கள்.

பண்ட் சாதிகளின் கோவில்களில் நடக்கும் திருவிழாக்களில் ஒரு கிலோமீட்டர் தள்ளி நின்று தான் இவர்கள் பறை இசைக்கமுடியும். நெருங்கிப்போனால் பண்ட் சமூகத்தினர் இவர்களை தலைகீழாக கட்டிவைத்து அடித்த சம்பவங்கள் நிறைய உண்டு.

15 ஆம் நூற்றாண்டில் ஹப்பாசிகா என்றொரு கொரக பழங்குடியின தலைவன் இருந்தான். நீண்ட கடல் பகுதியையும், வனப்பகுதியையும் ஒருசேரக் கட்டி ஆண்டான். எந்த மன்னர்களுக்கும் மண்டியிடாதவன்.

பிற மன்னர்களை நடுங்கவைத்த மயூரவர்மன் ஹப்பாசிகாவை அடக்க நினைத்தான். அதற்காக கணிசமான படைகளோடு போர் தொடுத்தான். குப்சுக்கு அருகில் படைகளை சந்தித்த ஹப்பாசிகா பல்வேறு வியூகங்களை வகுத்து தாக்குதலை தொடங்கினான். வீரஞ் செரிந்த அந்தப் போரில் மயூரவர்மனை தோற்கடித்தான்.

இந்த மயூரவர்மன் வைதீக பிராமண அறிஞர் என்றும், இவர் பல்லவர் படையில் தளபதியாக இருந்ததாகவும் ஒரு வரலாறு இருக்கிறது. இப்படிப்பட்ட மயூர வர்மனை வீழ்த்திய ஹப்பாசிகா அதன்பின்பு எல்லோரும் மெச்சும்வண்ணம் 11 ஆண்டுகள் கடலோரத்தையும் காட்டுப்பகுதிகளையும் ஆட்சி செய்தான். ஒரு கொரகனின் வெற்றியை அவமானமாகக் கருதிய மயூரவர்மனின் மைத்துனன் லோகாதித்யன், மீண்டும் போர்நடத்தி ஹப்பாசிகாவையும், அவனது மக்களையும் தோற்கடித்தான்.

நிராயுதபாணியாக நின்ற ஹப்சிகாவும், அவனது மக்களும் அடர்வனத்துக்குள் நுழைந்து தலைமறைவு வாழ்க்கை நடத்திவந்தார்கள்.

நல்ல சூழ்நிலைக்காக ஹப்பாசிகா காத்திருந்தான். பல்வேறு திட்டங்களை தீட்டினான். மயூரவர்மனால் தோற்கடிக்கப்பட்டவர்களோடு ஒரு கூட்டை ஏற்படுத்திக்கொண்டான். தீண்டத்தகாதவர்கள் என்று அவர்களால் ஒதுக்கப்பட்டவர்கள் அனைவருடனும் பேசினான். தன் பழங்குடிகளுக்கு நம்பிக்கையூட்டினான். பின் இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து சமவெளியை ஊடறுத்து, தந்திரமாக போர்தொடுத்தான். இறுதியில் மங்களூரையும் மஞ்சேஸ்வரத்தையும் வென்று மீண்டும் தன் வீரத்தை நிலை நிறுத்தினான்.

அதன் பின் மயூரவர்மனின் பரம்பரை ஒரு சூழ்ச்சி செய்தது. ஹப்பாசிகாவின் முக்கிய கூட்டாளிகளையும், ஹப்பாசிகாவையும் ஒரு சமாதான விருந்துக்கு அழைத்தது. அதற்கென்று பிரத்யோகமாக நிறுவப்பட்ட மண்டபத்தில் ஹப்பாசிகா கம்பீரமாக வந்தமர்ந்தான். தடபுடலாக விருந்து முடிந்தது. ஆயுதங்களோடு நூற்றுக்கணக்கானவர்கள் அவர்களை சூழ்ந்து வந்தார்கள். வெளியே எட்டிப்பார்க்கிறான் மண்டபத்தை சுற்றிலும் காலட் படைகள் நிற்கிறது. என்ன நடந்திருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு சுதாகரிக்கும் முன்பு ஹப்சிகாவையும், அவனது சகாக்களையும் வாளால் தாக்குகிறார்கள். அவர்களை கொடூரமாக கொன்று கண்டதுண்டமாக வெட்டி திக்குக்கு ஒன்றாய் பிணத்துண்டங்களை வீசினார்கள்.

இவ்வளவுக்குபின்னும் வெறி அடங்காத லோகாதித்யன், கோரகர் பகுதிக்கு சென்றான். அவர்களை சிறைபிடித்தான். கணிசமான கோரகர்களை அடிமைகளாக வைத்துக்கொண்டு சிதறிக்கிடந்த மீதி கோரகர்களை கொடூரமாக தாக்கி இன்னும் தொலைதூர காட்டுக்குள் விரட்டிவிட்டான்

கோரக மொழியில் பஞ்சுருளி, என்பதற்கு காட்டுப்பன்றியின் ஆவி என்று பொருள். அந்தப்பஞ் சுருளிக்கு தெய்வீக சக்தி இருப்பதாக கொரகர்கள் நம்பினார்கள்.

வனப்பொருட்களை சேகரிப்பதன் மூலமும், வேட்டையின் மூலமும் தன் உணவுத் தேவையை தீர்த்துவந்த ஹப்பாசிகாவின் ஆதிசமூகம், அடுத்தகட்டமாக நகர்ந்து வேளாண்மைக்கு வருகிறது. அப்போது அவர்கள் பல நெருக்கடிகளை சந்திக்கிறார்கள். அதில் காட்டுப் பன்றியும் ஒன்று .

உணவுக்கு நெருக்கடி வந்த ஒரு பஞ்ச காலத்தில் அவற்றை கட்டுப்படுத்தவேண்டும் என்று முடிவு செய்தார்கள். உணவுக்காக அவற்றை வேட்டையாட ஆரம்பித்தார்கள். பன்றிவிரட்டில் பல கோரகர்கள் தாக்குண்டு இறந்து போனார்கள். நேருக்கு நேர் முட்டியதில் எலும்புடைந்து நூற்றுக்கணக்கானவர்கள் ஊனமானார்கள்.

இப்படியாக பன்றியின் பராக்கிரமங்களை கண்ட கோரகர்கள் தங்களை விட அது பலம் பொருந்தியது என்று நம்பத்தொடங்கினார்கள். ஒருகட்டத்தில் காட்டுப்பன்றியை தெய்வமாக்கி வணங்கினார்கள்.

பயிர்களை காக்கவும், விளைச்சலை பெருக்கவும், அதனிடமே பிரார்த்தனை செய்யவும் வேண்டுகோள் வைக்கவும் ஆரம்பித்தார்கள். அவற்றிற்கு பிடித்த, கோரை கிழங்குகள், தானியங்களை பல்வேறு பூசைகளோடு படையலிட்டார்கள். அது நிகழ்தகவாய் பலிக்கவும் தொடங்கியது. பின்பு வழிவழியாக இப்பன்றி வழிபாட்டை பழங்குடிகள் தொடர்ந்தார்கள். கூடவே பன்றிவேட்டையையும் தொடர்ந்தார்கள்.

இது இயல்பானதாகவும், அறிவியல் பூர்வமாகவும் இருக்கிறது. துளுநாட்டுப்புற இலக்கியவடிவமான பாட தானாக்கள் மூலம் இவற்றை உறுதிப்படுத்தக்கொள்ள முடிகிறது. இன்றும் பன்றியின் ஆவி தெய்வம் வந்து தீர்ப்பு சொல்கிற திருவிழா துளுநாட்டில் நடக்கிறது. பன்றியின் உருவமேற்றிக்கொண்டு கொரக சாமியாடிகள் தெய்யமாடும் விழாதான் பூதகோலா. காந்தாரத்தில் நாம் பார்த்தது அதுதான் காலப்போக்கில் இந்துமதம் இந்த தொன்மத்தை உள்வாங்கி அதற்கு புதிதாக ஒரு புனைவையும் ஏற்படுத்திவைத்தது.

நீண்ட நாள் ஓய்விலிருந்த பார்வதி, ஊர்வலம் போக ஆசைப்படுகிறாள். மலைகளுக்குள் உள்ள காட்டின் வழியே போகும் போது ஒரு காட்டுப்பன்றிக் குட்டியை காண்கிறாள். அது அனாதையாக இருந்ததை கண்ட பார்வதி, குட்டியை பிடித்துக்கொண்டுபோய் கைலாசத்தில் செல்லப்பிராணியாக வளர்க்கிறாள்.

ஆனால் அந்தக்குட்டி, அடிக்கடி கைலாசத்திலிருந்த தோட்டங்களில் புகுந்து கிழங்குகளை தோண்டியும், செடிகளை பிடிங்கியும் கலவரத்தை ஏற்படுத்தியது. பொறுத்துப் பார்த்த சிவன், ஒரு நாள் கோபமடைந்து குட்டியை கொன்றுவிடுகிறார்.

இதை அறிந்து மிகவும் கோபமுற்ற பார்வதி,சிவனிடம் முகம் கொடுக்க மறுத்தாள்.. பார்வதியை சமாதானப்படுத்த நினைத்த சிவன், அதை மீண்டும் உயிர்ப்பித்து, ''மக்களைக் காத்து தீமையிலிருந்து நன்மைக்கு வழிநடத்தவும்'' என்று அதன் காதில் மூன்று முறை சொல்லி பூமிக்கு அனுப்பிவைத்தார். அதுவே பஞ்சுருளி என்று மாற்றி கதையை முடித்துவைத்தது நிறுவனமாக்கப்பட்ட இந்துமதம்.

தெய்யம் என்பது ஒரு சடங்காட்டம். ஒரு ஆட்டக்கலை இதை ஆடுவதற்கென்றே தனிக்குழுக்கள் வடகேரளத்திலும், தென் கர்நாடகத்திலும் நிறைந்து கிடக்கிறார்கள். ஆனால் எல்லா தெய்யமும் ஒடுக்கப்பட்ட சாதிகளால், பழங்குடிகளால் மட்டுமே நிகழ்த்தப்படுகிறது. ஏனென்றால் தெய்யம் வெறும் ஆட்டம் மட்டும்மல்ல. அது வழிவழியாக தங்களது சொல்லமுடியாத வரலாற்றை, சம்பவங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் ஊடகமாக, அவர்களது வரலாற்றை சேமிக்கும் கலனாக இருந்துவருகிறது

பண்ட் சமூகம் என்பது துளு பகுதியில் உள்ள நிலவுடமை சாதிகளை மொத்தமாக குறிக்கிறது. இதில் ஷெட்டிகளும் உள்ளடங்குவார்கள்.

கல்லுருட்டி ஒரு பழங்குடி பெண். அநேகமாக அவள் கொரகராக இருக்கலாம். கல்லுருட்டிக்கு இரண்டு சகோதரர்கள் இருந்தனர் அவர்கள், இருவரும் பஞ்சுருளி என்றே அழைக்கப்பட்டனர் ஒருவர் மீது ஒருவர் அளவு கடந்த அன்பை வைத்திருந்தனர்

கல்லுருட்டியின் கையில் எப்போதும் ஒரு கல் இருக்கும். அது ஒரு மாயம் நிறைந்த கல். அந்தக் கல்லை அவள் உருட்டும்போது, மரங்கள் ஒதுங்கி வழிவிடும், குருவிகள் பழங்களை கொண்டுவந்து தரும். மழை நின்றுகொள்ளும். அவளுக்கு கீழ்படிந்து . இயற்கை அவள் சொன்னதற்கெல்லாம் தலைவணங்கும் , யாராவது அவளைத் துன்புறுத்த முயன்றால், சூறாவளியை உருவாக்கி அவர்களை சுக்குநூறாய் ஆக்கிவிடும்.

கல்லை உருட்டி வினைபுரிவதால் அவளுக்கு கல்லுருட்டி என்று பெயர் நிலைத்துவிட்டது அந்த மாயக்கல்லை பறிக்க பல வசதியானவர்கள், தளபதிகள், மன்னர்கள் தந்திரம் செய்தார்கள். ஆனால் அந்தக்கல்லை அவள் உயிர்போல காத்துவந்தாள். உக்ரானி ஒரு படைத்தளபதி. உக்ரானியை சந்திக்கும் வரை, கல்லுருட்டிக்கோ, பஞ்சுருளிகளுக்கோ அவளுடைய ஊரார்களுக்கோ எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்தது . உக்ரானி ஆற்றைக் கடந்து, அவர்களின் காடுகளுக்கு வந்தபோது , பிரச்சனை தொடங்கியது. வனவாசிகளின் அமைதியான வாழ்க்கை கலைந்துபோனது.

காட்டுக்குள் வந்த உக்ரானி, போதை வஸ்துகளை தயாரிப்பதும், விளைவிப்பதும் முழுநேர தொழிலாக வரித்துகொண்டான். போதை லாகிரிகளை கடத்தவும், சுமந்துபோகவும் பஞ்சுருளி சகோதரர்களை பயன்படுத்த ஆரம்பித்தான்.

கல்லுருட்டிக்கு கோபம் தலைக்கேறியது. ஆனால் அவள் உக்ரானியை கொல்ல நினைக்கவில்லை திருத்தவே நினைத்தாள். ஒரு நாள் நேருக்கு நேர் சென்று சண்டையிட்டாள், சாபமிட்டாள். அதன்பிறகு சகோதர்களை ஒரு எல்லைக்கு மேல் வெளியே விடாமல் பார்த்துகொண்டாள். அத்தோடு நில்லாமல் போதை வஸ்த்துகளை அழிக்கவும், தீயிட்டு கொளுத்தவும் செய்தாள். கல்லுருட்டிக்கு பாடம் கற்பிக்க நினைத்த உக்கரானி, பஞ்சுருளிகள் மீது பொய்க்குற்றம் சாட்டி கைது செய்து உயரமான கோபுரத்தில் உள்ள ஒரு கூண்டில் அடைத்துவிட்டு கெக்கலித்து சிரித்தான். பஞ்சுருளிகளை காணாத கல்லுருட்டி காடும் மேடும் அவர்களை தேடி அலைந்தாள். நீண்ட நேரத்துக்கு பின்பு அவர்கள் இருவரும் பிரச்சனையில் இருப்பதை தெரிந்துகொண்டாள்

அவர்களை காப்பாற்ற செல்லும் வழியில் பல சிரமங்களை எதிர்கொண்டாள். ஆனால் தன்னிடம் உள்ள அந்த மந்திரக் கல்லைப் பயன்படுத்தி உக்ரானியை வீழ்த்தி, தன் சகோதரர்களை விடுவித்தாள். இதை அவமானமாக கருதிய உக்ரானி கல்லுருட்டியை பழிவாங்க தக்க சமயத்துக்கு காத்திருந்தான். ஒரு நாள் காட்டுவழியில் கல்லுருட்டி வந்துகொண்டிருந்தாள். தனது அடியாளுடன் அவளை வழிமறித்த உக்ரானி, அவளை மானபங்கப்படுத்த முயன்றான். கல்லுருட்டி தன்னிடமிருந்த மந்திரக்கல்லை மடியில் கைவிட்டு தேடினாள். ஆனால் அந்தக்கல் கிடைக்கவில்லை. வரும் வழியில் எங்கோ அக்கல்லை தவறவிட்டிருந்தாள். அதிர்சியை வெளிக்காட்டிக்கொள்ளாமல், மனதை திடப்படுத்திகொண்டு அவர்களோடு கடுமையாக போராடினாள்.

உக்ரானியிடம் தன்னை இழந்துவிடும் சூழல் வந்ததை உணர்ந்த கல்லுருட்டி , உயரமான பாறையின் மீதேரி கீழே குதித்து உயிரைவிட்டுவிடுகிறாள். சம்பவம் அறிந்த பழங்குடிகள் தவறவிட்ட அந்தக் கல்லை கண்டுபிடித்து அவள் இறந்த இடத்தில் வைத்து கல்லுருட்டியை தெய்வமாக வணங்கத்தொடங்கினார்கள். இப்போதும் கல்லுருட்டியை பழங்குடிகள் ஒரு தெய்வமாக கொண்டாடுகிறார்கள்.

மேற்சொன்ன கொரகர்களின் தொன்மங்களையும் வரலாற்றையும் பண்பாட்டையும் திரைப்படத்தோடு ஒப்பிட்டுப்பார்த்தால் காந்தாரம் அடிப்படையிலே எந்த ஆய்வும் செய்யாமல் மேலோட்டமான தகவல்களை வைத்துக்கொண்டு போலியான கருதுகோள்களை பார்வையாளர்கள் முன்பு வைக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும்.

தொடர்புக்கு: 9843370752

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 12.11.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# ஏஐடியூசி மாவட்ட மாநாடுகள்







**மதுரை:** ஏஐடியூசி மதுரை மாவட்ட மாநாடு துவக்கத்தின் முதல் நிகழ்வாக, மதுரை தமிழ்நாடு போக்குவரத்து கழக தலைமை பணிமனை முன்பிருந்து தோழர்கள் ஊர்வலமாக மாநாடு அரங்கை வந்தடைந்தனர்.

மாநாட்டின் கொடி ஏற்ற நிகழ்வு நடைபெற்ற பிறகு, மாநாட்டினை வாழ்த்தி இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பழனிமுருகன், மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் ராஜலெட்சுமி பேசினர்.




மாநாட்டை வாழ்த்தி, ஸ்தாபன வழிகாட்டலுடன் ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி பேசினார்.

ஏஐடியூசியின் மதுரை மாவட்ட தலைவராக எம்.நந்தாசிங், பொதுச்செயலாளராக எஸ்.சேது, துணை தலைவர்களாக எம்.இருளாண்டி, எம்.எஸ்.முருகன், ஆர்.பாலகிருஷ்ணன், வி.குருசாமி, ஜெயந்தி நந்தாசிங், ஜோதிராமலிங்கம், துணைசெயலாளர்களாக சி.தாமஸ், இரா.முருகன், சி.எம்.ஜே.ஜெயபால், சங்கர்கணேஷ், பொருளாளராக ஆர்.ராமகிருஷ்ணன் ஆகியோர் தேர்தெடுக்கப்பட்டனர்.

நிறைவாக தமிழ்நாடு ஏஐடியூசி மாநில தலைவரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் மாநாட்டினை வாழ்த்தி நிறைவுரையாற்றினார்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் பிஎம்ஆர் முத்து விழா மகாலில் ஏஐடியுசி விருதுநகர் மாவட்ட 18வது மாநாடு நடைபெற்றது. சமுத்திரம் தலைமை வகித்தார். ஏஐடியுசி கொடியை மாநில செயலாளர் எஸ்.காசிவிஸ்வநான் ஏற்றி வைத்தார். சிபிஐ மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார். மாநில பொதுச்செயலாளர் டி.எம். மூர்த்தி சிறப்புரை நிகழ்த்தினார். சிபிஐ தேசியக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வாழ்த்திப் பேசினார். வேலை அறிக்கையை மாவட்ட செயலாளர் முத்துமாரி சமர்ப்பித்துப் பேசினார்.

மாநாட்டில் தலைவராக சமுத்திரம், துணைத்தலைவர்களாக இராமச்சந்திரன், தமிழ்செல்வி, வேலுச்சாமி ஆகியோரும், பொதுச்செயலாளராக ஆர்.பி.முத்துமாரி, அமைப்பு செயலாளராக வி.இரவி, வெளியீட்டு செயலாளராக தங்கராஜ், பரப்புரை செயலாளராக நடராஜன், அலுவலக செயலாளராக பாண்டியன், பொருளாளராக விஜயன் மற்றும் மாவட்ட குழுவிற்கு 12 பேர்கள் கொண்ட குழுவும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

பட்டாசு தீ விபத்து நடக்கும் சிவகாசியில் ஈஎஸ்ஐ மருத்துவமனையில் சிறப்பு தீக்காய பிரிவு தொடங்கப்பட்ட வேண்டும், இராஜபாளையத்தில் 50 படுக்கை வசதி கொண்ட ஈஎஸ்ஐ முழுநேர மருத்துவமனை தொடங்கப்பட்ட வேண்டும், பட்டாசு தொழிலாளர்களுக்கு 10 வருட காலமாக கூலி உயர்வு வழங்கப்படவில்லை. எனவே 50 சதவிகித கூலி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில் சிபிஐ மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வி.பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ உள்ளிட்டவர்கள் வாழ்த்திப் பேசினர். முன்னதாக கவிஞர் சாமிநாதன் இயக்கப் பாடல்களை பாடினார்.

**தஞ்சாவூர்:** தஞ்சை மாவட்ட ஏஐடியூசி 13 வது மாநாடு தஞ்சாவூர் மாவட்ட அலுவலகம், சிங்காரவேலர் நினைவரங்கத்தில் நடைபெற்றது. மாநாட்டின் தலைமை குழுவின், மாவட்ட தலைவராக வெ.சேவையா, துணைத் தலைவர்களாக அ.சாமிக்கண்ணு, எஸ்.பரிமளா ஆகியோர் செயல்பட்டனர். அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் க.அன்பழகன் 13 வது மாவட்ட மாநாட்டு கொடியினை ஏற்றி வைத்தார். அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட துணை தலைவர் ஆர். பி.முத்துக்குமரன் வாசித்தார். மாவட்ட துணைச் செயலாளர் துரை.மதிவாணன் வரவேற்று பேசினார். ஏஐடியூசி தேசிய செயலாளர் வகிதா நிஜாம் மாநாட்டினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். வேலை அறிக்கையை மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் முன் வைத்தார். மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார்.

மாநாட்டினை வாழ்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு மாவட்ட செயலாளர் முத்துஉத்திராபதி, வடக்கு மாவட்ட செயலாளர் மு.அ.பாரதி, விவசாய சங்க மாவட்ட செயலாளர் பா.பாலசுந்தரம், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் சி.பக்கிரிசாமி, இந்திய தேசிய மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் ம.விஜயலட்சுமி, அரசு பணியாளர் சங்க மாநில துணைத்தலைவர் தி.திருநாவுக்கரசு உள்ளிட்டோர் பேசினர்.

பின்னர் புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. மாவட்ட துணைச் செயலாளர் இரா.செந்தில்நாதன், தீர்மானங்களை வாசித்தார். மாநில செயலாளர் சி.சந்திரகுமார் மாநாட்டினை நிறைவு செய்து உரையாற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் ஜி. மணி மூர்த்தி நன்றி கூறினார்.

மாநாட்டில், ஒருங்கிணைந்த டெல்டா மாவட்டத்தில் சட்டக் கல்லூரி பயில திருச்சிக்கு செல்ல வேண்டிய நிலைமை உள்ளது, தஞ்சாவூரை மையமாக கொண்ட சட்ட கல்லூரியை உருவாக்க வேண்டும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் உள்ள உறுப்பு கல்லூரிகளை பிரித்து தஞ்சையை மையமாகக் கொண்டு தனிப் பல்கலைக்கழகம் உருவாக்க வேண்டும், தெரு வியாபாரிகளை கணக்கில் எடுத்து அடையாள அட்டை வழங்க வேண்டும், சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும், திலகர் திடல் அம்மா மாலை நேர காய்கறி மார்க்கெட் கடைகளுக்கு மின் வசதி, குடிநீர் வசதி, கழிவறை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், தஞ்சை மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த பிரதான சாலைகளை ஒருவழிப்பாதை ஆக்க வேண்டும், தஞ்சை மாநகரில் கீழ ராஜ வீதி உள்ளிட்ட பிரதான வீதிகளில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட பிறகு வடிகால் பணிகள் முழுமையாக முடிவடையாமல் உள்ளதை உடனே முடிக்க வேண்டும், தஞ்சாவூரில் நவீன கட்டமைப்புடன் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் அமைத்திட வேண்டும், தனியார் மற்றும் மைக்ரோ பைனான்ஸ் கந்து வட்டி கொடுமையில் இருந்து இருந்து மக்களை பாதுகாக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**இராமநாதபுரம்:** பரமக்குடியில் ராமநாதபுரம் மாவட்ட 19 வது ஏஐடியூசி மாநாடு மாவட்ட தலைவர் எஸ்.பி.ராதா, பி.சண்முகராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

பரமக்குடியில் உள்ள அண்ணல் காந்தியடிகள் சிலைக்கு மாலை அணிவித்து பேரணியாக மாநாட்டு அரங்கத்திற்கு வருகை தந்தனர். தியாகிகள் ஜோதியை மூத்த தோழர் கே.கே. கோவிந்தன் பெற்றுக் கொண்டார். மாநாட்டுக் கொடியினை எஸ்.பி.ராதா ஏற்றி வைத்தார்.

தொடர்ச்சி 14ம் பக்கம்

# இடஒதுக்கீடு: உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஏற்கத்தக்கதல்ல

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

பொருளாதார ரீதியாக பின்தங்கிய உயர்சாதியினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதற்கான அரசியல் சட்டத்தின் 103வது அரசியல் திருத்த சட்டம் செல்லும் என உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகளை கொண்ட அரசியல் சட்ட அமர்வு தீர்ப்பளித்து உள்ளது.

இதில் இரண்டு நீதிபதிகள் 103வது அரசியல் திருத்த சட்டம் அரசியல் அமைப்பு சட்டத்தின் அடிப்படை கட்டமைப்புக்கு எதிரானது அல்ல என்று கூறியுள்ளனர். இது சரியல்ல. இது அதிர்ச்சி அளிக்கிறது.

அரசியல் அமைப்பு சட்டம்

இது சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கிய பிரிவினருக்கு நீதி வழங்க வழிவகை செய்துள்ளது. ஆனால் ஒன்றிய அரசின் சட்டத் திருத்தம் பொருளாதார அடிப்படையை மட்டும் அளவுகோளாக கொண்டதும், அது உயர் சாதி பிரிவினருக்கு மட்டுமானதும் என்பதை உச்ச நீதிமன்றம் கருத்தில் கொள்ள வில்லை.

பொருளாதார அடிப்படையில் மட்டுமே உலகில் எந்த நாட்டிலும் இட ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில்லை. பொருளாதாரம் என்பது நிரந்தரமான ஒன்றல்ல என்பதே இதற்கு முக்கியக் காரணம். எனவே, நீதிபதிகளின் இக்கருத்து ஏற்புடையதல்ல. இட ஒதுக்கீடு கொள்கை மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். இட ஒதுக்கீடுகள் தொடர்ந்து நீட்டிக்கப்படுவது சரியல்ல என்ற கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. இவை பழங்குடி, பட்டியல் இன இதர பிற்படுத்தப்பட்டோருக்கான உரிமைகளை பறிக்க வழி வகுக்கும்.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடே 2006க்குப் பிறகுதான் மத்திய உயர்கல்வி நிறுவனங்களில் நடைமுறைக்கு வந்தது.

அதுவும் கிரிமிலேயர் நடைமுறைப்படுத்தப்பட்டதனால் முழுமையாக பயனை இதர பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கிட வில்லை. அதைப்போலவே, மருத்துவக் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை மருத்துவக் கல்வியில் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு சென்ற ஆண்டு தான் நடைமுறைக்கு வந்துள்ளது. அதுவும் சரியாக நடைமுறைபடுத்தப்படவில்லை. இட ஒதுக்கீடு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத காலகட்டத்தில், இட ஒதுக்கீடு நீண்ட காலமாக நடைமுறையில் உள்ளது போல் ஒரு தோற்றத்தை உருவாக்கி இருப்பது மிகவும் வருந்துத்தக்கது.

எனவே சமூக நீதிக் கோட்பாட்டிற்கு எதிரான இந்த தீர்ப்பு ஏற்கத்தக்கது அல்ல என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.